Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 28-ஆக.03, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 470



## ஐ.நா. சபையில் பிரதமரின் தீர்வுத் திட்டம்!

## ரணில் என்ன செய்யப் போகிறார்

## புஷ் என்ன சொல்லப் போகிறார்

# ஆன்மீகம்

## மன அமைதி!

ஒரு துறவி வீதியில் குனிந்து எதையோ தேடிக்கொண்டிருந்தார். அதைக் கண்டு பலர், "நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.


"ஒரு சிறிய ஊசியைத்தான் தொலைத்துவிட்டேன்" என்றார் துறவி. "ஐயா! குறிப்பாக ஊசியை எங்கு தொலைத்தீர்கள் என்று கூற முடியுமா?" என்று கேட்டனர்.

"ஊசியை வீட்டிற்குள் தொலைத்துவிட்டேன்..." என்றார் அமைதியாக. அனைவரும் திகைத்து நின்றனர்.

"வீட்டினுள் தொலைத்ததை வீதியில் தேடினால் கிடைக்குமா சுவாமி?" என்று எல்லோரும் கேட்டனர். "நீங்கள் எல்லோரும் இப்படித்தான் செய்கிறீர்கள். மன அமைதியும், சந்தோஷமும் மனதிற்குள்ளேதான் இருக்கிறது. நீங்கள் அதை வெளியில்தானே தேடிக் காலத்தையும், திறமையையும் வீணாக்கிக்கொண்டிருக்கிறீர்கள்!" என்றார் துறவி. அந்த உண்மை அப்போதுதான் அனைவருக்கும் உறைத்தது.

தி.குணவர்தன, களுவாஞ்சிக்குடி.

## இளையோருக்கு அறிவுரை



இளையோரே! இளமைப் பருவம் மகிழ்ச்சியோடு இருப்பதற்கே! இளமையின் நாட்களில் உள்ளக் களிப்புடன் இருங்கள். மனம் விரும்புவதைச் செய்யுங்கள். கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள்.

ஆனால், நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள். மனக்கவலையை ஒழியுங்கள். உடலுக்கு ஊறு வராதபடி காத்துக்கொள்ளுங்கள். குழந்தைப் பருவமும், இளமையும் மறையக் கூடியவை. ஆகையால், "உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்திலே மறவாதே" கடவுளுக்கு அஞ்சி நட. நீ செய்யும் மறைவான செயலுக்குக்கூட தண்டனையை அனுபவிப்பாய் என்பதை மறவாதே!

சபை உரையாளர் (11: 9-10)

எல். ஏ. சதாநாயகம், கொட்டாஞ்சேனை.

## அனாதைகளை அரவணைப்போம்

"நானும் அனாதைகளைப் போசிப்பவனும் இவ்வாறு சுவர்க்கத்திலிருப்போம்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறித் தனது இரு விரல்களையும் ஒன்று சேர்த்துக் காண்பித்தார்கள்.

ஆதாரம் - புஹாரி

மறுமையில் அல்லாஹ்வை அன்புடன் காண விரும்புபவன் அனாதைகளையும், ஏழைகளையும் ஆதரிக்க வேண்டும். அனாதைகளை வெருட்டுபவர்கள், அவர்களின் உரிமைகளை மறுப்பவர்கள், அவர்களின் சொத்துக்களை அபகரிப்பவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கும் தண்டனைக்கும் ஆளாவார்கள் என்பதற்குத் திருக்குர்ஆனில் நிறைய ஆதாரங்கள் உண்டு.

ஆகவே, ஏழை, எளியவர்கள், அனாதைகளை மலர்ந்த முகத்துடன் உபசரித்து அவர்களின் பங்கை இன்முகத்துடன் கொடுத்து அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற நாம் அனைவரும் முயல்வோமாக!

செல்வி. எம். ஏ. றிதானா
பானு, மூதூர்-04.

# கவிதைப் போட்டி இல.467

### பரிசுக்குரிய கவிதை

#### தரணியில்...

பாவங்கள் சுமந்த இவன்
பாதங்கள் வலிக்கும்வரை
பளுவின் சுமையிலே
இவன் வாழ்வின்
பக்கங்கள் புரள்கிறது!

தெ.லோஜனா, கொழும்பு-06.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

#### தாமும்...

மன்னனென்றால் மக்களை
மாடு போல் வேலை வாங்குவது மட்டுமல்ல
கூடவே தாமும் மாடாய் உழைத்து
நாட்டின் வளத்தினை
பெருக்குதல் வேண்டுமன்றோ?

ஐ.நதர்சன், கம்பளை.



#### சுமை

தினந் தினம்
எடை கூடும்
விலைவாசிச்
சுமை தன்னைச்
சுமக்கும் எமக்கு
இந்தப் பெருமரச்
சுமையும் ஒரு சுமையோ?

அ.சந்தியாகோ, கண்டி.

#### ஓ...போடு!

ஏழ்மையின் வாசனையை
நுகராத
ஒரு மேல் வீ(த)ட்டுப்
புறாவொன்று
இன்று-
உழைப்பின் மகத்துவத்தை
உணருகின்றது
இதுவே நிரந்தரமானால்...
அரச குடும்பத்திற்கும்
ஒரு ஓ... போடு!

எஸ்.ஏ.எம். நிலாம், கரம்பை.

#### ராஜதந்திரம்

பெற்றவள் பக்கமில்லை
தாய்வழி செல்லும் பிள்ளை
ஊரவர் உழைப்பைக் கண்டு
உதவிட நீ இறங்கிவிட்டாய்
வியர்வை சிந்திடு நிலத்தில்
ஊரவர் பார்வை
திரும்பும் உன் பக்கம்!

பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

#### வீரமணிகள்

வீழ்ந்த மரங்கள்
சுமைதான்
அவை
எழும் மரங்களுக்கு
உரம்!

பிரபா-பதுளை.

#### சுவடுகள்

அன்று நான்
அகதியாய் சுமந்த
க(ா)லத்தையா - இன்று
நின் தோள் சுமக்கின்றாய்!

கயல்பத்மா, வவுனியா.

#### புரட்டாத வரை

சேய் தூக்கித் தொடங்குவது
தாய் காத்த மண் நலமோ? -அவள்
அடுத்த பக்கம் புரட்டாதவரை-அவன்
அவதாரப் பிறவிதான்-இந்த
அற்புத பூமியில்...!

லைலா அக்ஷியா அக்ரம், குருணாகல்.

#### அவர்களையும்...

கட்டை தூக்க மட்டுமல்ல
கரம் தீண்டவே உலகம் அஞ்சிடும்
எயிட்ஸ் நோயாளிகளையும்
ஆதரவாய் அணைத்துக்கொள்
அன்றுதான் சாந்தியடையும்
உன் அம்மாவின் ஆத்மா!

எஸ்.சகிலா, பண்டத்தரிப்பு.

#### சுமையான சுகம்

சுமையில்லாத
வாழ்க்கையுமில்லை
சுகம் தேடாத
மனிதருமில்லை
சுமப்பதென்னவோ
மரக்கட்டைதான்
மனம் போவதோ
பல்லாக்கு என்ற
நினைப்பில்தான்!

து.பரிமளாதேவி, கலஹா.

#### உயரும் உள்ளம்!

அழுது முடித்த யுத்தத்தால்
எத்தனை இடிபாடுகள்
இம் மண்ணில்!
அத்தனையையும்
நிவர்த்தி செய்ய ஒரு
மரக்குற்றி போதுமா?
ஆக்குகின்ற கைகளுக்கு
அழிக்கின்ற
நெஞ்சம் வருவதில்லை!

ஏ.எப்.எம். றியாட்,
முள்ளிப்பொத்தானை.

#### வித்தியாசம்

அகிலம் ஆண்ட ஆங்கிலேய
இனத்தின் இளவல்
தோளில் மரக்குற்றி
நம் நாட்டு இளவல்களின்
தோள்களில் எறிகணைகள்!

சு.சாந்தீபன், வவுனியா.

#### காலம் கடந்தால்...

தோள் வலிக்கையில் கொஞ்சம்
சுமை இறக்க நினைத்து
எண்ணிப் பார்த்தால்...?
தவறே தெரிகிறது!
காலம் கடந்தால்... எம்
கிட்டாச் சமாதானம் போல்
வறுமை நீண்டிடுமே...!

சி.மதியழகன், அல்வாய்.

#### அனுபவம்

கோட்டைதனில் வாழ்ந்து
சோர்ந்து போவதைவிட
சிறு ஓட்டைக் குடிசையில்
ஒய்யாரமாக வாழ்ந்து இப்படி
சிறு கட்டைகளைத் தூக்கி
இன்புறுவது புது அனுபவம்தான்!

கிருஷ்ணன் சிவா, மஸ்கெலியா.

#### பெருமை

பாமரர் நெஞ்சம் அறிந்த
பாட்டாளியின் பஞ்சம் உணர்ந்த
பட்டத்து ராஜாவின்
பிஞ்சு உனது நெஞ்சுரம்
கண்டு பெருமை கொள்கிறேன்!

விஜயலஷ்மி ஆறுமுகம், கொழும்பு-12.

# கவிதைப் போட்டி இல.470



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.08.2002

கவிதைப் போட்டி இல.470
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக[ர்] சாலை

அன்பின் முரசே!
எவருக்கும் இடமில்லை
என்றிருந்த என்னுள்ளத்தில்
நீ புகுந்து இடம்பிடித்தது
அதிசயத்திலும் அதிசயம்தான்!
நீ வரத் தொடங்கிய
நாள் முதலாய்
நான் உன்னில்
முற்றாய் புதைகின்றேன்!
வாரா வாரம்
உன்னிலெழும் ஓசைகள்
உன்னதமான பரிபாஷைகள்
இவைகளே உன்
அழகைக் காட்டும் தடங்கள்...
உன் வளர்ச்சி...
அசுர வளர்ச்சி!
பிரசவித்த
குறுகிய காலத்துள்
எவ்வளவு பிரகாசம்
இமயத்தின் சிகரமே!
எத்தனை எத்தனையோ
பத்திரிகை கிழமை தோறும்
வந்து வாசித்தாலும்
உன் சேவையே
அளப்பரிய சேவையாகும்!
உனது பணி தொடரப்
பிரார்த்திக்கும் இவன்...

எம்.ரி.எம்.யூனூஸ், காத்தான்குடி-01.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு,

வாராவாரம் தினமுரசு வழங்கும் அம்சங்கள் யாவும் அருமையானவை. "பார்த்த ஞாபகம் இல்லையோ?" பகுதி ஆரம்பித்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மறைந்த திரையுலகக் கலைஞர்களை நினைவுகூரும் வகையில் இப் பகுதி அமைந்திருப்பது பாராட்டத் தக்கது. மேலும், லேடீஸ் ஸ்பெஷலில் இடம் பெற்ற ஆக்கம் பயனுள்ளதாகவிருந்தது. 'சாக்கடைச் சமூகம்' என்ற சிறு கதை கருத்தாழம் மிக்கதாக இருந்தது. பாராட்டுக்கள். முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

மங்களா வாமதேவன்,
தங்களா வாமதேவன்,
மட்டக்களப்பு.



அன்புடன் முரசிற்கு,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை. அத்தோடு தற்போது வரும் புதுப்புது அம்சங்கள் அனைத்தும் ஆச்சரியத்தோடு, வியப்பூட்ட வைக்கிறது. 467ல் இடம் பெற்ற சிறுகதை, பாப்பாமுரசு, தற்போது வரும் அறிவுத்தேடல், மன்னாதி மன்னன், காதிலை பூ கந்தசாமி, சிந்தியா பதில் என்பன இன்னுமின்னும் வியப்பூட்ட வைக்கின்றன. இலக்கிய நயம் சூப்பர். நீ இதைவிட மென்மேலும் சிறப்பாக ஓங்கி உயர்ந்து வளர வாழ்த்துகின்றேன்.

எம். உதயா, அக்கரைப்பற்று.

எங்கள் உயிர்நாடியே! உன்
உன்னதமான வித்தைகளில்
எங்கள் கவலை அகல்கின்றது
உண்மையின் இலக்கணமே! என்
போன்ற அன்பு உள்ளங்களின்
தேவையறிந்து உன் பேனா
நுனியால் தீர்த்துவைக்கும்
அற்புதமே அற்புதம்! எம் போன்ற
வாசகர்கள் உள்ளவரை -உன்னை
யாரும் தீண்டவே முடியாது!
என்றும் உன் பிரியமுடன்,

நா.பிரேம்குமார், கொட்டகலை(யதன் சைட்)

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## சமாதான சகவாழ்வு

"கடந்த இரு தசாப்தங்களாக இலங்கை மக்கள், அவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இனக்கலவரங்களாலும் வன்முறைகளாலும் பெரும் அளவில் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

சில அரசியல்வாதிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் கூடத் தமது கட்சி நலனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இருந்து வன்முறைக்குத் தூபம் போடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள்.

மக்கள் அனைவருக்குமே இந்நாடு உரித்தானது. அவர்கள் சுயமரியாதையுடனும் சுய கௌரவத்துடனும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற அடிப்படை எண்ணக்கரு ஒவ்வொருவர் மனத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஊடகங்கள் இதற்காக உழைக்க வேண்டும். இனவாதக் கருத்துக்களை விதைக்கும் ஊடகங்களின் உள் நோக்கங்களை ஏனைய ஊடகவியலாளர்கள் துணிவுடன் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

எமது ஊடகங்கள் எவ்வளவு தூரம் நடுநிலை நின்று மக்களை வழி நடாத்துகின்றன என்று கூறமுடியாவிட்டாலும் கூட அண்மைக் காலத்தில் மக்கள் மனத்தில் சமாதானத்துக்கான அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் இதனை நன்கு உறுதி செய்துள்ளன.

மக்கள் தாமாகப் புறப்பட்டு வந்து சமாதானத்தை உண்டு பண்ண முடியாது. தேர்தல்களின் போது அவர்கள் தமது கருத்துக்களைப் புலப்படுத்துவர். தெரிவுசெய்யப்பட்ட தலைவர்கள் அரசியல் வாதிகள்- சமாதானத்துக்கான நடவடிக்கைகளைத் தூய மனத்துடன் முன்னெடுக்க வேண்டும்.

எப்போதும் மாற்றுக் கருத்துக்கள் இருக்கவே செய்யும். இனக்கலவரங்களைத் தூண்டி நாட்டினையும் அதன் பொருளாதாரத்தையும் அடி மட்டத்துக்கு வீழ்ச்சியுறச் செய்து அதில் குளிர்காய வெகு சிலரே விரும்புவர்.

நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய அதிகாரத்தை மக்களிடமிருந்து தேர்தல்கள் மூலம் பெற்றுக் கொண்ட தலைவர்கள் தமது அரசியல் காலத்தை சிக்கலில்லாமல் ஓட்டி முடிப்பதிலும் அடுத்த தேர்தலுக்கு ஆயத்தம் செய்வதிலும் மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்து விடாமல் தமது ஆட்சிக் காலத்தில் மக்களுக்காகப் பெற்றுக் கொடுக்கக் கூடிய அவர்களது சமாதானத்துக்கான நீண்ட அபிலாசையை ஈட்டிக் கொடுப்பதற்குத் தூய மனத்துடன் செயற்பட வேண்டும்.

அதே போன்று, சமாதான முயற்சிகளின் வெற்றி தோல்வி அப்பாவி மக்களை எவ் வகையாலும் பாதிப்புகளுக்கு உள்ளாக்கி விடாதபடி ஊடகங்கள் மக்களை நெறிப்படுத்த வேண்டும்.

ச. சதீஷ்காந்தன், திருகோணமலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# அமெரிக்க உதவியுடன் படைபலம் அதிகரிக்கப்படும்

# வாஷிங்டனில் அமைச்சர் மிலிந்தமொறகொட தெரிவிப்பு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பயனாக அந்த நாட்டின் உதவியைப் பெற்று இலங்கை இராணுவத்தின் பலத்தை அதிகரிப்பது குறித்து முக்கியமாகக் கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சர் மிலிந்த மொறகொட வாஷிங்டனில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருக்கான உதவிகளைப் பெற்றுக் கொண்டு இராணுவத்தின் பலத்தை மேலும் அதிகரிப்பது குறித்து அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அமைச்சர் மொறகொட தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒருவார கால அமெரிக்க விஜயத்தில் அந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு மேலதிகமாக ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் கொன்டலிஸாரைஸ்சையும் பிரதமர் சந்தித்து உரையாடினார்.

ஜனாதிபதி புஷ்ஷிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பு 24 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விஜயத்துக்கு அமெரிக்க ஊடகங்கள் பெரும் முக்கியத்துவம் அளித்திருந்ததுடன், தெற்காசிய தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட மகத்தான வரவேற்பும் பிரதமருக்குக் கிடைத்தது. பிரதமர் ஐ.நா. சபையிலும் உரையாற்ற இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## போர் நிறுத்த கண்காணிப்பாளர்கள் மில்லியன் டொலர் காப்புறுதி கோருவர்?

தற்போதைய போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் சர்வதேச அவதானிப்பாளர்கள் இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஒவ்வொருவருக்குமாக ஒரு மில்லியன் டாலர் காப்புறுதியைப் பெற்றுக் கொள்வது குறித்த யோசனை ஒன்றை முன் வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை வடகடலின் இரணைதீவு பகுதியில் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர் புலிகளால் கடத்தப்பட்ட சம்பவத்தையடுத்துத் தாங்கள் மேற்கொண்டிருக்கும் கடமையின் ஆபத்தை உணர்ந்துள்ள கண்காணிப்பாளர்கள் இது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்றோன் பர்ஹவ்டேயுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் ஸ்கன்டிநேவியப் பணியாளர்களுக்கு அவர்களது நாட்டு அரசாங்கங்களால் காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இலங்கை அரசிடம் இருந்து தலா ஒரு மில்லியன் டாலர் பெறுமதியான காப்புறுதியை 45 கண்காணிப்பாளர்களுக்கும் பெற்றுத் தரவேண்டும் என்று குழுவின் தலைவரை உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

புலிகளால் கடத்தப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்ட திருமதி மெக்ரீன் ஹில்லன், போல் எரிக் ஆகிய இரு கண்காணிப்பாளர்களும் கடந்த 18ஆம் திகதி ட்றோன் பர்ஹவ்டேயைச் சந்தித்துத் தமது அனுபவத்தை விபரித்தனர். ■

## யாழ். மாநகரசபையில் சூடான விவாதம்

கட்டாய வரி அறவீட்டைக் கண்டித்தும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் சகல தரப்பினரும் பங்கேற்க வேண்டும் எனக் கோரியும் யாழ். மாநகரசபையில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு சூடான விவாதம் இடம்பெற்றது.

தனியொரு குழுவினர் மாத்திரம் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது ஜனநாயக விரோதமானதும், வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் ஒரு பகுதியினரது அடிப்படை உரிமையை மீறும் செயலாகவும் அமையுமென அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ■

## பயணிக்கும் பொதிக்கு 200 ரூபா

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் விமானத்தில் பயணம் செய்பவர்கள் யாழ். நகரில் இருந்து பலாலி விமான நிலையம் வரை செல்வதற்கு அமைச்சர் தி.மகேஸ்வரனின் குடும்பத்தினரால் நடத்தப்படும் பஸ் சேவையில் 100 ரூபா அறவிடப்படுகின்றது. இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் இந்தப் பயணத்திற்கு 40 ரூபா மாத்திரமே அறவிடப்படுகின்றது. இதிலுள்ள மற்றொரு 'பகற்கொள்ளை' யாதெனில் பயணிக்கு நூறு ரூபாவும் அவர் கொண்டு செல்லும் பொதிக்கு மேலும் நூறு ரூபாவும் மகேஸ்வரனின் குடும்பத்தினரது பஸ்ஸில் அறவிடப்படுகின்றது.

## "தொடர்ந்து நிவாரணம் வழங்கப்படும்"

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலைநகரிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்டு வாழைச்சேனை அல்நூர் தேசிய பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ள முஸ்லிம் குடும்பங்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்குமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

பாலைநகரில் இருந்து இதுவரையில் சமார் 200 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகத் துறைமுக அபிவிருத்தி, கப்பற்துறை கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழக்கில் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்படும் மக்களுக்குத் தமது அமைச்சின் ஊடாக உலர் உணவு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சாயிபாபாவுக்குப் பதிலாக பிரபா!

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பக்தர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த பஜனைக் கூடங்கள் தற்போது புலிகளின் அலுவலகங்களாக மாற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பகவான் சாயிபாபாவின் அமைப்புக்கள் கலைக்கப்பட்டுள்ளதோடு அவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த இடங்களும் புலிகளால் கையேற்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் இருந்த சாயிபாபா நிலையங்களைப் புலிகள் தமது அலுவலகங்களாக மாற்றியுள்ளதோடு இன்னும் சிலவற்றை மூடியுமுள்ளனர்.

கொழும்பு- மட்டக்களப்பு பிரதான வீதியில் வந்தாறு முலையில் செயற்பட்டு வந்த சாயி நிலையம் புலிகளால் கையேற்கப்பட்டதோடு அங்கிருந்த சாயிபாபாவின் முகப்புப் படங்கள் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாகப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வர்ணப் படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. ■

## மாநகர சபை மண் அள்ளப் புலிகள் அனுமதி!

நல்லூர் கந்தசுவாமி ஆலய வளவில் மண் அள்ளுவதற்கு மாநகரசபை புலிகளின் அனுமதியைப் பெறவேண்டி ஏற்பட்டமை குறித்து மாநகர சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கப் பிரதட்சணை செய்ய வரும் பக்தர்களின் நலன் கருதி கோயில் வளாகத்தில் சேரும் மண்ணை அள்ளுவதற்குச் சென்ற மாநகரசபை ஊழியர்கள் புலிகளால் தடுக்கப்பட்டனர். பின்னர் புலிகளுடன் பேசி அதற்கான அனுமதி பெறப்பட்டது.

நகர் முழுவதற்கும் மண் அள்ளும் அனுமதியை மாநகர சபையே வழங்குகிறது. ஆனால் மாநகர சபை, கோயில் வளாகத்தில் உள்ள மண்ணை அள்ளப் புலிகளின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளமை குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் வரி அறவீடுகளைக் கண்டித்து மானிப்பாய் பி.ச. தீர்மானம்

புலிகள் இயக்கத்தின் வரி அறவீட்டைக் கண்டித்து மானிப்பாய் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வரி அறவீடுகளைத் தவிர வேறெந்த நிதி அறவீடுகளையும் அங்கீகரிக்க முடியாதென அந்தக் கண்டனத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இத்தகைய வரி அறவீடுகளைக் கண்டித்து யாழ். மாநகரசபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பான தமது முடிவைத் தெரிவிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி மேலும் கால அவகாசம் கோரியதால் இத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ■

## களுத்துறைச் சிறையில் மீண்டுமொரு உண்ணாவிரதம்

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு அல்லது தம் மீதான வழக்குகளை விசாரணை செய்யுமாறு கோரி நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டம் நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

முன்னைய தடவைகளைப் போன்று உண்ணாவிரதமிருக்கும் கைதிகளைப் பார்வையிட இம்முறை அரசியல்வாதிகள் உடனடியாகச் செல்லாதது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பில் அமைச்சர்களான பொ. சந்திரசேகரன், ஜயலத் ஜயவர்த்தன உள்ளிட்ட பலராலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டதையிட்டு கைதிகள் கடும் ஆத்திரமடைந்துள்ளனர்.

## தமிழ் உளவாளிகள் மீது புலிகளின் குறி!

படையினருக்கும் பொலீஸாருக்கும் தகவல் வழங்கும் தமிழ் உளவாளிகளைத் தீர்த்துக்கட்டும் நோக்கில் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் பலர் தலைநகருக்குள் ஊடுருவியிருப்பதாகப் பொலீஸ் தலைமை உளவுப் பிரிவு எச்சரிக்கை செய்துள்ளது.

பாதுகாப்புத் தரப்பினருக்குத் தகவல் வழங்கும் உளவாளிகளின் பாதுகாப்புக் குறித்து அக்கறை செலுத்துமாறு அரசாங்க உளவு நிறுவனம் ஒன்று பொலீஸாரைக் கேட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி பொலீஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில் இதுகுறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

குறைந்தது, புலிகளின் 10 பிஸ்ரல் குழுக்கள் கொழும்பில் நடமாடுவதாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கொழும்பு கொட்டாஞ்சேனை வீதியில் சென்று கொண்டிருந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் கல்முனையைச் சேர்ந்த பாலா என அடையாளம் காணப்பட்டிருந்தார். இந்த இருவரும் பாதுகாப்புத் தரப்பினருக்குத் தகவல் வழங்குபவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இதேபோல், பாமன் கடைப் பகுதியில் வைத்தும் தமிழர்கள் இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ■

## அதிருப்தி

கிழக்கில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங் களில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளின் வேதனத்தில் இருந்து குறைந்த பட்சம் 10 சதவீதத்தை வரியாகச் செலுத்த வேண்டும் எனப் புலிகளால் கேட்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அரச ஊழியர்களிடமிருந்து மாத்திரமே 12 சதவீத வரி அறவிடப்பட்டு வந்தது. அரச ஊழியர்களிடமிருந்து வரி அறவிடப்பட்டு வந்ததை நியாயப்படுத்திய அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் புலிகளின் கவனம் தங்கள் மீதும் திரும்பியிருப்பதையிட்டு அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். ■

## ஹர்த்தாலைப் புறக்கணித்தவருக்கு அபராதம்

புலிகளின் மூதூர் அலுவலகம் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி புலிகளால் நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போது ரியூசன் வகுப்பு நடத்திய ஆசிரியரிடம் ஒரு இலட்சம் ரூபாய் பணம் பெறப்பட்ட சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் நடந்துள்ளது.

புலிகளால் நடத்தப்பட்ட ஹர்த்தால் தினத்தைப் பொருட்படுத்தாது ரியூசன் வகுப்பு நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் புலிகளால் கைது செய்யப்பட்டார். பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு மாத்திரம் அவர் செயற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு இலட்சம் ரூபா பணம் அவரிடம் கோரப்பட்டது. எனினும் ஒரு இலட்ச ரூபா உடனடியாகச் செலுத்தியதன் பேரில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இனிமேல் ரியூசன் வகுப்புக்கள் மட்டக்களப்பில் புலிகளின் கல்விப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. ரியூசன் கட்டணங்களும் புலிகளின் கண்காணிப்புக்குள் வரவுள்ளது. ■

# முரசம்

## தமிழ்க் கைதிகளைக் கைவிட்டு விட்டார்களா?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இலங்கைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சிறைக் கைதிகள் தம்மை விசாரி அல்லது விடுதலை செய்யெனக் கோரி மீண்டும் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளார்கள்.

இவர்கள் அடிக்கடி இக் கோரிக்கையை வலியுறுத்திப் போராட்டங்களில் குதிக்கும் போதெல்லாம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமாதானம் கூறி அப் போராட்டங்களை நிறுத்தி வைக்கிறார்களேயன்றி அதற்கு எவ்வித தீர்வையும் பெற்றுத் தருவதாக இல்லை. இதனால் அக் கைதிகள் நம்பிக்கையிழந்து மீண்டும் போராட்டங்களில் இறங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இன்று யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கும் நிலையில் புலிகளே நேரடியாக அலுவலகங்களைத் திறந்து காரியமாற்றும் போது, படை அதிகாரிகளும், அமைச்சர்களும் புலிகள் தலைவர்களுடன் கைகுலுக்கி சிற்றுண்டி அருந்தும் நிலையில், புலிகளைக் கண்டும் காட்டிக்கொடுக்கவில்லை என்ற அற்ப காரணங்களால் இவர்களில் பலர் சிறையிலடைக்கப்பட்டிருப்பது வேடிக்கைக்குரியது மட்டுமல்ல வேதனைக்குரியதும் கூட.

இன்று தமிழ் நாட்டில் வை.கோ. கைது செய்யப்பட்டமைக்காக தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்ததாகக் கூறி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முன்வந்த தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைக்காக இன்று சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளுக்காக இதுபோன்ற எந்தவொரு போராட்டத்தையும் முன்னெடுக்கவில்லை என்ற கேள்வி நியாயமானதே.

வெறுமனே பிரபலமிக்கவர்களுக்காகவும் தாம் பிரபலம் தேடுவதற்காகவும் மட்டுமே இவர்கள் இத்தகைய போராட்டங்களை ஒரு அரசியல் பிரசார உத்தியாகக் கையாளுகிறார்களேயன்றி, வேதனையில் வாடும் சாதாரணர்களை இவர்கள் கைவிட்டு விடுகிறார்கள் என்பதே வருத்தத்துக்குரிய உண்மையாகப் புலப்படுகிறது.

பிரதமரையும் அமைச்சர்களையும் சந்தித்து, அச் சந்திப்புகள் பற்றிப் பத்திரிகைகளில் பகிரங்கம் தேடிக்கொள்வதற்கு அப்பால் இவர்கள் ஓரடிதன்னும் எடுத்து வைக்கிறார்களில்லை.

தமிழ்நாட்டுச் சிறையிலிருக்கும் வை.கோ. வுக்காக உண்ணாவிரதம் இருக்க முடிந்த இவர்களை இந்த அப்பாவித் தமிழ்க் கைதிகளுக்காக ஒரு உண்ணாவிரதத்தையோ அல்லது எந்தவொரு போராட்டத்தையோ நடத்த விடாமல் தடுப்பது எதுவென்பதுதான் புரியாத புதிராக உள்ளது. பிரபலங்களை விடுத்து எப்போதுதான் இவர்கள் உண்மையான பிரச்சினைகளை நோக்கப்போகிறார்கள்?

■■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*- ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# காலத்தால் மறக்கவைக்க முடியாத கறுப்பு ஜூலை

கறுப்பு ஜூலை!

இதற்கு மேல் எந்த வார்த்தையும் தேவையில்லை. சட்டென இலங்கைத் தமிழர் யாவருக்கும் புரியும், அது 1983 ஜூலையில் நிகழ்ந்த அந்தப் பாரிய இனக் கலவரத்தைத்தான் குறிக்கிறது என்று.

கலவரம் என்ற சொல்கூட அதற்குப் பொருந்தாது. கலவரம் என்றால் இரு பகுதியினருக்கிடையே நிகழும் ஒரு மோதல். ஆனால் இங்கு நிகழ்ந்ததோ தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு பாரிய படுகொலைத் தாக்குதல்.

இலங்கையின் இனப் பிரச்சினை வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரிய தழும்பு அது.

அது விளைவித்த தாக்கம் மிகவும் பாரதூரமானது.

தமிழ் மக்கள் தாம் பாதுகாப்பற்ற ஒரு பேராபத்தான சூழ்நிலையில் விடப்பட்டுள்ளதாக உணரச் செய்த சம்பவம் அது.

சாத்வீகப் போராட்டங்களின் கையறுநிலையில், ஆயுதப் போராட்டத்துக்கான அங்கீகாரத்தை, தமிழ் மக்கள் ஒருசேர வழங்க வழிகோலிய சம்பவம் அது.

உரிமைகள் பற்றியும் அரசியல் பற்றியும் பேசிவந்த விடயங்கள் வெறும் அரசியல்வாதிகளுக்கோ, போராளிகளுக்கோ, மட்டுப்படுத்தப்பட்டவையல்ல, பரந்துபட்ட தமிழ் மக்களின் வாழ்வோடும், ரத்தம் சதையோடும் சம்பந்தப்பட்டவை என்ற உணர்வுபூர்வ ஈடுபாட்டைத் தமிழ் மக்களிடம் மூட்டிவிட்ட சம்பவம் அது.

தமிழர்களைத் தமிழர்கள் என்று இனங்காட்டி நடத்தப்பட்ட இனரீதியான தாக்குதல் மூலம் தமிழர்களுக்குத் தாம் இலங்கையர் என்ற அன்னியோன்னியத்திலிருந்து விலகிக்கொண்ட ஓர் அன்னியப்படுதலை உருவாக்கிவிட்ட நிகழ்வு இது.

இலங்கை அரசாங்கமும், அதன் சட்டமும், பாதுகாப்புப் படைகளும் தங்களுக்கானவையல்ல, மாறாகத் தங்களுக்கு எதிரானவையே என்ற ஓர் அதிர்ச்சிகர நிலைமையைத் தமிழர்கள் அனுபவத்தில் காண வைத்த சம்பவம் அது.

இனப் பிரச்சினையின் தீர்வில் ஆளும் தரப்பின் இதய சுத்தி பற்றிய ஒரு நிரந்தர ஐயப்பாட்டைத் தமிழ் சமுதாயத்தின் மனதில் பதித்துவிட்ட சம்பவம் இது.

தமிழ் மக்களிடையே புலம் பெயர்தல் என்ற ஒரு புதிய அத்தியாயத்துக்கு மடை திறந்து வைத்த சம்பவம் இது.

தமிழ் மக்களின் வாழ்வில் அகதி வாழ்க்கை என்பதை ஒரு நிரந்தர அம்சமாக ஆரம்பித்து வைத்த சம்பவம் இது.

இலங்கையின் இனப் பிரச்சினையின் உக்கிரத்தை சர்வதேச ரீதியாக வெளிப்படுத்திவைத்த சம்பவம் இது.

இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியாவின் ஈடுபாட்டுக்குக் களமமைத்துக் கொடுத்த சம்பவம் இது.

தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியப் பின்தளத்தை ஈட்டிக் கொடுத்த சம்பவம் அது.

தமிழ் இளைஞர்களைப் பெருந் திரளாக ஆயுதப் போராட்டத்திற்கு உந்தித் தள்ளிய சம்பவம் அது.

ஜூலைக் கலவரத்தின் கோர அனுபவங்களுடன் புலம் பெயர்ந்த பெரும்பாலான தமிழர்களின் மனப் பதிவுகள் அன்றைய நாட்களுடனேயே உறைந்து விட்டன.

அவையே இன்றுவரை அவர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு வழங்கிவரும் கண்மூடித்தனமான ஆதரவுக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டன.

இந்த ஜூலைக் கலவரம் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களின் எத்தகைய நோக்கத்துக்காக நிகழ்த்தப்பட்டதோ அதற்குத் தலைகீழான விளைவையே இறுதியில் ஏற்படுத்தி வைத்தது என்பதுதான் உண்மை.

ஜூலை 23ம் திகதி அதிகாலை யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிச் சந்தியில் பிரபாகரன், மாத்தையா, செல்லக்கிளி, ரகு உட்பட்ட புலிகளின் அதி உயர்மட்ட உறுப்பினர்கள் கொண்ட குழுவினால் நிகழ்த்தப்பட்ட இலங்கையின் முதலாவது கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பொழுது விடிந்ததும் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் வீதி வீதியாகத் திரிந்து கண்மூடித்தனமாகச் சுட்டனர்.

கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்கள் பொரளை மயானத்தில் ஜூ லை 24ம் திகதி எரிக்கப்பட்டன. அன்று மாலை பொரளைச் சந்தியிலிருந்து வரலாறு காணாத வன்முறையாக வெடித்ததே ஜூ லை இனக் கலவரம்.

உண்மையில் புலிகளால் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் ஜூ லைக் கலவரத்துக்குக் காரணமல்ல.

மாறாக ஒரு பாரிய கலவரத்துக்கு அன்றைய ஐ.தே.க. அரசாங்கம் மேற்கொண்டு வந்த இரகசியத் தயாரிப்புகளை நடைமுறைப் படுத்தக் கிடைத்த வாய்ப்பாகவே இத் தாக்குதல் அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டது.

இன்றுவரை இதைவிடப் பாரிய எத்தனையோ கண்ணிவெடித் தாக்குதல்கள், முகாம் தாக்குதல்கள் நடைபெற்று இராணுவத்தினர் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இதைவிட இலங்கையின் பெரும்பெரும் அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

உணர்ச்சி பொங்கும் பாரிய மேதின ஊர்வலத்தில் வைத்தே இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா கொல்லப்பட்ட அதிர்ச்சிகர சம்பவமும் இடம்பெற்றிருந்தது.

ஆனாலும் அவையெவையும் கலவரங்களைத் தோற்றுவிக்கவில்லை.

உண்மையில் அன்றைய கலவரத்தின் பின்னணியில் இலங்கை அரசாங்கத்தினதும் அதன் படையினரதும் கரங்கள் இருந்திருக்கின்றன.

அன்று இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

கலவரம் உச்சநிலையில் நிகழ்ந்துகொண்டிருந்தபோது தமிழ் மக்களை நோக்கி "போரா சமாதானமா" என்று அவர் விடுத்த அறைகூவல் இக் கலவரங்களில் அவரது மனோபாவத்தை வெளிப்படையாக எடுத்துக் காட்டியிருந்தது.

கலவரத்தைக் கட்டுப்படுத்துவதை விடுத்து அவற்றைத் தமது பராக்கிரமத்தின் வீரப் பிரதாபமாகப் பறைசாற்றுகின்ற பொறுப்பற்ற இத்தகைய ஆட்சித் தலைவர்களால்தான் இலங்கை இன்றுவரை அதற்கான விலையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது.

"போரென்றால் போர் சமாதானமென்றால் சமாதான"மென ஜே.ஆர். சூளுரைத்ததால் இலங்கை இன்றுவரை போரின் கோரப் பிடியிலிருந்து மீள முடியாததாகியுள்ளது.

அக் கலவரத்தினை ஜே.ஆரின் மூளை ஒரு கல்லில் இரு மாங்காய் விழுத்தும் வகையில் பயன்படுத்திக் கொண்டது.

ஒருபுறம், தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு கர்ண கடூரமான பதிலடியொன்றைத் தெரிவிப்பது.

இந்தக் கலவரத்தின் புகைமூட்டத்துக்குள்ளேயே, முக்கியமான தமிழ் அரசியல் கைதிகள் பலரை, நீதிமன்றங்களில் நிருபிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்படாமலே கொன்றொழித்து விடுவது.

இவற்றின் மூலம் நாட்டின் இதர பிரச்சினைகளால் சரிந்துகொண்டிருந்த தனது செல்வாக்கை ஒரு இனவாதப் பிற்புலத்தில் தூக்கி நிறுத்திக் கொள்வது.

முக்கியமாக இலங்கையின் வர்த்தகத் துறையில் கோலோச்சிய தமிழ் வர்த்தக நிறுவனங்களை அடித்து நொருக்கி, சிங்கள வர்த்தக நிறுவனங்களை முதன்மைபெற வைக்கும் பாதுகாவலனாகத் தன்னைக் காட்டிக்கொள்வது.

மறுபுறம் இதற்காக அரசாங்கம் திட்டமிட்டு நிறைவேற்றிய இக் கலவரத்தின் பழியை, தனது அரசியல் எதிரிகளான இடதுசாரிகள் மீது சுமத்துவது - இதுவே அவரது இரண்டாவது மாங்காய்.

அன்றைய கலவரங்களுக்கு நக்ஸலைட்டுகள்தான் காரணமெனக்கூறி ஜே.வி.பி, மற்றும் வாசுதேவ நாணயகார உட்பட அவரின் நவ சம சமாஜக் கட்சி உள்ளிட்ட இடதுசாரிகளைக் கைது செய்து சிறையிலடைத்தார்.

உண்மையில் அந்தக் கலவரத்தின் மத்தியிலும் தமிழ் மக்களின் உயிர் உடைமைகளைக் காத்து அவர்களை அகதி முகாம்களுக்குப் பாதுகாப்பாகக் கொணர்ந்து சேர்ப்பதில் முக்கிய பங்காற்றியவர்கள் இடதுசாரிகளே. - அவர்களில் வாசுதேவ நாணயகாரவின் தோழர்களது பங்கு மறுக்கப்பட முடியாதது.

ஆனால் ஒருபுறம் மோசமான இன சங்காரத்தை நடத்தி முடித்துவிட்டு மறுபுறம் அதன் பழியை இடதுசாரிகள் மீதே சுமத்தி சிறையிலடைக்க முடிந்த ஜே.ஆரின் சாதுரியம் அவரின் அன்றைய அரசியலுக்குப் பலனளித்ததேயல்லாமல் இலங்கையின் எதிர்காலத்துக்கு உண்மையில் தீ வைத்தது.

இக் கலவரத்தின்போது நடத்தப்பட்ட மற்றொரு மாபெரும் சதிதான் வெலிக்கடைப் படுகொலை.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியற் கைதிகளை திட்டமிட்டுப் படுகொலை செய்த சம்பவம் அது.

சிங்களக் கைதிகளை அவர்களின் கூண்டுகளிலிருந்து திறந்து விட்டு, அவர்களுக்கு ஆயுதக் களஞ்சியத்தையும் திறந்து கொடுத்து, தமிழ்க் கைதிகளைப் படுகொலை செய்ய ஏவிவிட்டதோடல்லாமல், தமிழ்க் கைதிகளின் கூண்டுகளுக்குள் புகுவதற்கு ஏதுவாக அவர்களின் கூண்டுகளும் திறந்து விடப்பட்டதால்தான் இப் படுகொலை நிகழ்ந்தது.

இவற்றைச் செய்தது யார் என்பது இரகசியமான பரகசியம்.

ஒரு முறையல்ல இருமுறை இப் படுகொலைகள் நடத்தப்பட்டதென்பது தற்செயல் நிகழ்வல்ல.

ஜூலை 25ம் திகதி நிகழ்ந்த வெலிக்கடைப் படுகொலையில் குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உட்படப் பல முன்னணித் தமிழ்ப் போராளித் தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணி, தனது கண்களைத் தமிழ் மகன் ஒருவருக்குத் தானம் கொடுப்பதாகக் கூறியிருந்தார்.

ஆனால் அவரைப் படுகொலை செய்து அவரது கண்களைத் தோண்டி, வெலிக்கடைச் சிறையில் இருந்த புத்தர் சிலையின் காலடியில் இட்டிருந்தனர்.

> "போரென்றால் போர் சமாதானமென்றால் சமாதானமென ஜே.ஆர். சூளுரைத்ததால் இலங்கை இன்றுவரை போரின் கோரப் பிடியிலிருந்து மீள முடியாததாகியுள்ளது."

ஜூலை 27ம் திகதி வெலிக்கடைச் சிறைக்குள் மறுபடி தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர்.

சிறை அதிகாரிகளின் உதவியின்றி எவ்விதத்திலும் நடந்திருக்க முடியாத இப் படுகொலைகளுக்கு அரசாங்கம் எவ்விதத்திலும் பொறுப்பெடுத்துக் கொள்ள மறுத்துவிட்டது.

இன்றுவரை இதன் சூத்திரதாரிகள் யார் என்ற உண்மை எவ் விசாரணைகளிலும் வெளிவரவில்லை.

அப் படுகொலைகளின்போது உயிர் தப்பிய தமிழ்ச் சிறைக் கைதிகளின் வாக்குமூலங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இக் கலவரத்தையடுத்து ஜூலை 29ம் திகதி தொலைக்காட்சியில் தோன்றி "இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு" என ஜனாதிபதி ஜே.ஆர். உரையாற்றினார்.

உண்மையில் ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்பதைத்தான் அவர் அந்தத் தருணத்தில் புரிந்துகொண்டிருக்கவில்லை.

இவற்றால் ஏற்படக்கூடிய பாரிய மறுதாக்கங்களின் பாரதூரத்தை அவரால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

தனக்குப் பின்னர் இந் நாட்டை ஆளப்போவோர் யாவரும் இதற்கான விலையைச் செலுத்த வேண்டி நேரிடுமென்பதையும் அவர் பொருட்படுத்தவில்லை.

1983 ஜூலைக் கலவரம்போன்ற ஒரு சம்பவம் நிகழாதிருந்திருந்தால் வரலாற்றில் நிகழ்ந்தேறிவிட்ட எத்தனையோ துரதிஷ்ட வசமான சம்பவங்களும் அவற்றின் விளைவுகளும் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இனப் பிரச்சினைக்கும் வேறு ஒரு பரிமாணத்தில் தீர்வு காணப்பட்டிருக்கலாம்.

இத் தீர்வு முயற்சியில் பிரதானமான ஒரு தடைக் காரணியாக விளங்குகின்ற சந்தேகம் என்ற மனத்தடை சற்று இலகுவாக அகன்று போயிருக்கலாம்.

ஆயுதக் கலாசாரமென்பது இத்தனை ஆதிக்கத்தைப் பெற்றிருக்க மாட்டாதென்பதுடன், ஆயுதமற்ற பல தீர்வு முயற்சிகளுக்கும் இடமிருந்திருக்கலாம். ஜூலைக் கலவரம் என்பது இலங்கையின் வரலாற்றில் மாறாக் கறையாகப் படிந்துபோய் விட்ட ஒன்று.

அதன் கோர நினைவுகளை மறக்க வைக்க வேண்டிய பொறுப்பு காலத்தினுடையதல்ல, மாறாக அது இந் நாட்டின் எதிர்காலத்தை எழுதப் போகின்ற அரசியல் தலைமைகளின் கடமை!

நரன்

**அண்டை மண்டலத்திலிருந்து**
**காணகன்**

# தனி மாநிலம் கோருகிறார் ராமதாஸ்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் புதிதாகவொரு பிரச்சன்னயினைக் கிளப்பியிருக்கிறார். தமிழ்நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டுமாம். ஏனாம்?

மிகப் பெரிய சாதிகளுக்கு அரசு அதிகாரத்தில் பங்கு கிடைக்கவில்லையாம். மாநிலத்தின் வடபகுதியினைத் தனியொரு மாநிலமாக ஆக்கிவிட்டால், அந்தப் பிராந்தியத்தில் அதிக எண்ணிக்கையில் வாழும் சாதிகளைச் சேர்ந்தவர் ஒருவர் முதல்வராகலாமாம். அப்படியொரு தீர்மானம் கடந்த வாரம் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூரில் நடந்த வன்னியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட, "அத்தகையதொரு கோரிக்கை மிகவும் ஆபத்தானது, இதைக் கவனிக்க வேண்டிய விதத்தில் கவனிக்கிறேன்" என முதல்வர் ஜெயலலிதா சீற, வேறு ஒரு திசையில் தமிழக அரசு சூடு பிடித்திருக்கிறது.

இன்னுஞ் சில நாட்களுக்கு வைகோ பிரச்சனை கூட ஓரங்கட்டப்படலாம். ஆளாளுக்கு கருத்துத் தெரிவிக்கத் தொடங்குவார்கள். எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளாமல், தனது தனி மாநில கோரிக்கை பற்றி முழங்குவார் ராமதாஸ்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமான பொடாவின் கீழ் என்னால் அவரைக் கைது செய்ய முடியுமென ஜெயலலிதா அறிவித்துவிட்டால், அத்துடன் அடங்கிவிடுவார். ஆனால் அதுவரை பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாமே.

தலைநகரை மாற்றுவதோ அல்லது தலைமைச் செயலகத்தை மாற்றுவதோ மாநிலப் பிரச்சனைகளுக்குப் பரிகாரமல்ல.

மக்கள் தொகை மற்றும் பரப்பளவில் பெரியதாக விளங்கும் தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கலாம். அப்போதுதான் கல்வி, சுகாதாரம், குடிநீர், மின்சாரம், வேலைவாய்ப்பு உட்பட மக்களின் அடிப்படைத் தேவைகளை விரைவாக நிறைவேற்ற முடியும்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், நாமக்கல், சேலம், தர்மபுரி, நாகை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு மாநிலமாகவும், மற்றவையெல்லாம் இன்னொன்றாகவும் இருக்கலாம்.

இப்படியொரு தீர்மானத்தினை வன்னியர் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட வன்னியர் வாழ்வுரிமை மாநாட்டில் தீர்மானம் இயற்றப்பட்டது.

இதெல்லாம் சாத்தியமா? தேவைதானா? என்ற கேள்விகள் ஒரு புறமிருக்க, ஏன்; இது நாள் வரையில்லாது இப்படியொரு பிரச்சனையினை இப்போது ராமதாஸ் கையிலெடுக்கிறார் என்பதைத்தான் முக்கியமாக நோக்க வேண்டும்.

வன்னியர் சங்கம் பட்டியலிட்டிருக்கும் வட மாவட்டங்களில் வன்னியர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இவை தனி மாநிலமாக உருவானால், வன்னியர்களில் ஒருவர் முதல்வராகலாம் என அந்தச் சாதியினர் நம்பி, பா.ம.க.வினை பெருமளவில் ஆதரிக்க முன்வருவார்கள் என்ற நப்பாசைதான் ராமதாஸுக்கு.

வன்னியர்கள் மத்தியில் பா.ம.க. செல்வாக்கு சரிந்து வருவதாகவே பொதுவாகக் கணிக்கப்படும் வேளையில்தான் இப்படியொரு கோரிக்கை எழுப்பப்படுகிறது. மாநிலத்தை யார் ஆளுவார்கள் என்பதை நிர்ணயிக்கும் மூன்றாவது பெரிய கட்சி பா.ம.க. என்ற பிரமை மெல்ல மெல்லக் கலைந்து வருகிறது.

கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் பா.ம.க.வின் ஆதரவு காரணமாகவே அ.இ.அ.தி.மு.க. பெரும் வெற்றி பெற்றது என்றுதான் பலரும் நினைத்தார்கள்.

ஆனால், தன் மகன் அன்புமணியை மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்க உதவ முடியாதென ஜெயலலிதா கைவிரித்தவுடன், கோபித்துக் கொண்டு அணிமாறினார் ராமதாஸ். ஆனால், உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க. அணி பெரும் வெற்றி எதையும் பெறவில்லை, கிராமப்புற மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதாகக் கருதப்படும் பா.ம.க. மிகக் குறைவான இடங்களிலேயே வெற்றி பெற முடிந்தது.

கடந்த மாதம் நடைபெற்ற மூன்று சட்டமன்ற இடைத்தேர்தல்களிலும் அ.இ.அ.தி.மு.க.தான் வெற்றி பெற்றது. கடந்த ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆதரவுடன் வெற்றி பெற்ற அச்சரப்பாக்கத் தொகுதியில், இம்முறை தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட பா.ம.க. 10,000 வாக்குகளுக்கும் அதிக வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

பிறகு பாரதீய ஜனதாவை தாஜா செய்து, வாஜ்பேயியின் கையைக் காலைப் பிடித்து மத்திய அமைச்சரவையில் இரண்டு இடங்களைப் பிடித்தார் ராமதாஸ். அமைச்சர்களாக்கப்பட்ட ஷண்முகம் மற்றும் மூர்த்தி இருவருமே வன்னியர்கள்தான்.

முதல் முறையாக மத்திய அரசில் பா.ம.க. இடம் பிடித்த போது, ஒரே ஒரு பிரதிநிதிதான் அதற்கு ஒதுக்கப்பட்டது. அந்த இடம் ஒரு தலித்துக்குப் போனது. ஓராண்டிலேயே மீண்டும் தேர்தல் வந்தது. தலித் எழில்மலை கட்சி மாறினார். அடுத்த அரசில் வாஜ்பேயியுடன் மன்றாடி இரண்டு இடங்களைப் பிடித்த ராமதாஸ், மீண்டும் ஒரு தலித்திற்கு வாய்ப்பளித்தார்.

இரண்டாண்டுகள் கழித்து அணி மாறினார். அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. ஆறே மாதங்களில் மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில். ஆனால், மத்திய அமைச்சரவையில் உடனே இடம் கிடைக்கவில்லை. வாஜ்பேயியைச் சுற்றிச் சுற்றி வந்து, பா.ஜ.க.விற்கு முழு ஆதரவு தெரிவித்து, குஜராத் கலவரங்களைப் பற்றி வாயையே திறக்காமல், நல்ல பிள்ளையாக நடந்து கொண்டு, ஒரு வழியாக இப்போது மீண்டும் இரண்டு இடங்களைப் பிடித்து விட்டார். ஆனால், இப்போது இரண்டு அமைச்சர்களும் வன்னியர்கள்தான். வன்னியர் சங்கத்தில் தனது அரசியல் வாழ்க்கையினைத் தொடங்கிய ராமதாஸ், இடையில் தலித்துக்களைத் தம்பக்கம் இழுத்துக் கொண்டால், வலிமையான தலைவராக உருவாகிவிடலாம் எனக் கணக்குப் போட்டார்.

ஆனால், வன்னியர்கள் தலித்துக்களைத் தங்களுக்குச் சமமாகக் கருத மறுத்தனர். மோதல்கள் தொடர்ந்தன. விடுதலைச் சிறுத்தைகள் போன்ற தலித் அமைப்புக்கள் ராமதாஸைத் தாக்கியே வலிமை பெற்றன.

தவிரவும் சாதியின் பெயரால் கட்சியை வளர்த்துவிட்டு, தலித்துகளுக்கு நல்வாழ்வு எனப் பேசினால் என்ன ஆகும்? வன்னியர்களுக்குக் கோபம் வரும். அதுதான் நடந்தது. கட்சிக்குள் தலித் முன்னுரிமைப் போக்கிற்குக் கடும் எதிர்ப்பு.

இரண்டு தலித் எம்.எல்.ஏ.க்கள் தங்களுக்குக் கட்சியில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை எனப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிவிட்டு, நாங்கள் தனித்துச் செயற்படுவோமென அறிவித்துவிட்டனர்.

வன்னிய தீவிரவாதிகளுக்குப் பயந்து போய்த்தான் ஒரு வன்னியரை முதலில் அமைச்சராக்கினார் ராமதாஸ். பிறகு இரண்டு இடங்களுமே வன்னியர்களுக்கென்றாயிற்று. அதிலும் ஒரு சிக்கல். வன்னியர் சங்க ஆரம்ப காலத்திலிருந்து அடிமட்டத் தொண்டர்களிடையே நல்ல செல்வாக்குடைய, நல்ல உழைப்பாளி எனப் பெயர் பெற்றிருக்கும் தர்மபுரி எம்.பி. பு.த. இளங்கோவன் ஒதுக்கப்பட்டதால் கட்சிக்குள் முணுமுணுப்புக்கள். கட்சியே பிளவுபட்டுவிடலாம் எனச் செய்திகள் வந்தன.

இத்தகைய சூழலில்தான் வன்னிய தீவிரவாதத்தினை வளர்க்கும் விதமாக ராமதாஸ் வன்னியர்களுக்கெனத் தனி மாநிலம் என்ற கோரிக்கையினை எழுப்பியிருக்கிறார். இந்தக் கணக்கில் இவர் கேட்டால், தேவர்கள் தென் பகுதியில் கேட்கமாட்டார்களா?, அதேபோல அந்தந்தப் பகுதிகளில் கணிசமான எண்ணிக்கையில் வாழும் சாதியினர் கேட்கத் துவங்கினால் என்ன ஆவது? ஆனால் அதைப்பற்றியெல்லாம் ராமதாஸுக்குக் கவலை கிடையாது. இழந்துவிட்ட வன்னிய வாக்கு வங்கியை மீண்டும் கைப்பற்ற வேண்டும், அதற்காக அவர் என்ன வேண்டுமானாலும் செய்வார்.

மரங்களை வெட்டி, சாலைகளைத் தோண்டி, போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்தபோது கூட, அவருடைய ஆக்ரோசமான போக்கை நியாயப்படுத்த முடிந்தது.

பெரிய சாதிகளில் ஒன்று மிகவும் பின்தங்கிவிட்டது, திராவிடக் கட்சிகள் வன்னியர்களை வாக்கு வங்கியாக மட்டுமே பயன்படுத்தின, இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையில் நியாயமிருக்கிறது என்றவொரு பார்வை இருந்தது.

தவிரவும் பாட்டாளி மக்கள் கட்சியைத் துவங்கியவுடன் தலித்துக்களையும், சிறபான்மையினரையும் சமூக நீதிக்கான தனது போராட்டத்தில் சக தோழர்களாக ஏற்றுக் கொள்வதாக அவர் அறிவிக்க, அவர் கௌரவம் மேலும் கூடியது. ஆனால் ஒரு கட்டத்தில் கடுமையாகச் சாடிய ஜெயலலிதாவுடனும், இந்துத்துவ சக்திகளுடனும் கைகோர்த்தவுடனேயே அவர் புகழ் மங்கத் தொடங்கியது. மத்திய அமைச்சரவையில் இடம் பிடித்தவுடன், அவரும் அவரது மகனும் ஆடிய ஆட்டங்கள் பலரை முகம் சுளிக்கச் செய்தன.

கொஞ்சம் கூடக் கூசாமல் தொடர்ந்து அணி மாறியது வன்னிய மக்கள் மத்தியிலேயே எரிச்சலை ஏற்படுத்தியது.

ஜெயலலிதாவைப் பகைத்துக் கொண்டாயிற்று. இனி அவர் பக்கம் போனாலும் முடிந்தவரை அவமானப்படுத்திய பிறகே தனது அணியில் சேர்த்துக் கொள்வார். தி.மு.க.விற்கோ எதிர்காலம் இருப்பதாகவே தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழலில் வன்னியர்களுக்குத் தனிமாநிலம் எனக் குரலெழுப்பினால் வன்னியர்கள் அதிக எண்ணிக்கையில் தன் பக்கம் வருவார்கள், எப்படியாவது, சட்டம் ஒழுங்குப் பிரச்சனையை உருவாக்கியாவது தனது செல்வாக்கினை வலுப்படுத்திக் கொண்டால், அடுத்த தேர்தலில் அது உதவுமே. இப்படியெல்லாம் ராமதாஸ் கணக்குப் போடக்கூடும். ஆனால், முதலில் வன்னியர்களே அவர் சொல்வதையெல்லாம் சீரியசாக எடுத்துக் கொள்கிறார்களா என்பது சந்தேகம். கடந்த சில ஆண்டுகளில் அவர் வளம் கொழிக்கத் தொடங்கியிருக்கிறார். அவரது மகன் பெரிய பெரிய ஓட்டல்களில்தான் தங்கிக் கட்சி நடத்துவதாகச் சொல்லிக் கொள்கிறார். இதெல்லாம் அடித்தட்டு மக்களுக்குத் தெரியாதா என்ன? தவிரவும் ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவர் அவ்வளவு எளிதில் ராமதாஸை விட்டு விடமாட்டார்.

பா.ம.க. பிரிவினை கோரவில்லை என்பதென்னவோ உண்மை. ஆனால் இப்படிப்பட்ட கோரிக்கைகள் வன்முறைக்கு வித்திடும் என்று சொல்லி அவரைச் சிறையில் தள்ளலாம். வைகோவிற்காகக் குரல் கொடுக்காத மத்திய அரசு ராமதாஸிற்காகக் கவலைப்படப் போகிறதா என்ன? ●

### திருத்தம்


கடந்தவார முரசில் அண்டை மண்டலப் பகுதியில் "மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் இரண்டாவது மருமகளான சோனியா காந்தி மாத்திரமே வைகோவிற்கு ஆதரவாக உரத்துக் குரல் கொடுத்துள்ளார்" என அச்சுப்பிழை காரணமாகத் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. "மேனகா காந்தியே வைகோவிற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்" தவறுக்கு வருந்துகிறோம்.

– ஆர்–

# புஷ் என்ன சொல்லப் போகிறார்?

# ரணில் என்ன செய்யப் போகிறார்?





இலங்கையின் சமாதான முயற்சிகளை ஆதரித்து அமெரிக்க செனட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. தனது நட்பு நாடுகளில் அமைதியை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அமெரிக்க அரசு தன்னுடைய சம்பிரதாய பூர்வமான ஆதரவை வெளிப்படுத்த இத்தகைய தீர்மானங்களை செனட் சபையில் நிறைவேற்றுவது அந்த நாட்டைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்த விடயமல்ல. ஆனால், இலங்கையைப் பொறுத்த மட்டில் இந்த விடயம் பல வழிகளில் முக்கியமானது. இனப்பிரச்சனை படிப்படியாக சர்வதேச மயப்படுத்தப்பட்டு வந்த பின்னர் இடம் பெறும் குறிப்பிடத்தக்க கவன ஈர்ப்பு நடவடிக்கையாக இதனைக் கருதலாம்.

18 வருடங்களின் பின்னர் இலங்கைப் பிரதமர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரை வெள்ளை மாளிகையில் சந்திக்கிறார் என்பதே பெருமைக்குரிய விஷயம் போல் அரச ஊடகங்களில் வர்ணிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளான றொனால்ட் றீகனும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் சந்தித்துக் கொண்ட தன் பின்னர் உலக நிலைவரத்தில் ஏற்பட்ட மாற்றம், தெற்காசியாவில் உள்ள மூன்றாம் உலக நாடொன்றின் தலைவரை அழைத்துப் பேசும் தேவையை அமெரிக்க ஜனாதிபதிக்கு இல்லாமல் செய்திருந்தது. இரண்டு அணிகளாக இருந்த சர்வதேச அரங்கம் முற்றிலும் அமெரிக்காவைச் சார்ந்து நிற்கும் நிலைமை உருவானது. ரஷ்யா சிதைக்கப்பட்டதோடு தனிப்பெரும் தலைவனாக உருவெடுத்தது அமெரிக்கா.

ஆனால், அந்த நிலைமை தற்போது மாறி வருகிறது. சிலரைக் கட்டுப்படுத்துவதற்காக வேறு சிலரைக் கைக்குள் போட்டு வைத்திருக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இருக்கிறது. பிராந்திய ரீதியிலான அமெரிக்க மேலாதிக்கத்திற்கு இலங்கையின் அமைவிடம், வாஷிங்டன் நிருவாகத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு அம்சம் என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான அபிப்பிராயம்.

முதலாளித்துவத்தைத் தீவிரமாக ஆதரிக்கும் வலதுசாரி ஐ.தே.க. அரசின் தலைமையை அழைத்து, அமெரிக்க ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துகிறார் எனும்போது அதிலிருக்கும் 'அமெரிக்காவின் தேவை' புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

ஆனால், இலங்கை அரசாங்கம் தனியாக ஒன்றை மட்டும் குறிப்பிட முடியாத பல்வேறு வகையிலான அவசியப்பாடுகளைக் கருத்தில் கொண்டே அமெரிக்காவுடனான தனது நெருக்கத்தை வளர்த்து வருகிறது.

"சமாதான முயற்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு"என்ற வாசகத்திற்குள் பொதிந்து கிடக்கும் மறைபொருள் 'புலிகளுக்கான மறைமுக எச்சரிக்கை' என்பதை இன்றைய நிலைவரத்தில் அடிப்படை அரசியல் அறிவுள்ளவர்களால் கூடப் புரிந்து கொள்ள முடியும்.

ரணில்- புஷ் சந்திப்பின் முடிவில் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்காவின் பூரண ஆதரவு எனும் அறிக்கைதான் வெளிவரும். இன்னும் ஒரு படி மேலே போய் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை அமெரிக்கா விரும்புகிறது. ஆனால், பயங்கரவாதத்தை நாம் எதிர்க்கிறோம் என்று கூட ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறக்கூடும்.

எப்படியிருந்தாலும் பிரதமரின் அமெரிக்க விஜயம் தீர்வு முயற்சி ஒன்றின் போது புலிகளை விட்டுக் கொடுப்புக்கு நிர்ப்பந்திக்கச் செய்யும் தைரியத்தை அவருக்கு வழங்கும். அதே நேரம், புலிகள் விஷயத்தில் தென்னிலங்கை மக்கள் இனிமேல் அஞ்சத் தேவையில்லை; அமெரிக்கா எங்கள் பக்கம் நிற்கிறது என்ற செய்தியை வழங்கவும் புஷ்ஷுடனான சந்திப்பு பிரதமர் ரணிலுக்குப் பேருதவியாக அமையும்.

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இரண்டு தரப்பும் கைச்சாத்திட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு ஒப்பந்தத்தில் இலங்கையுடன் கைச்சாத்திடுவதைத் தவிர்க்குமாறு இந்தியா அமெரிக்காவுக்கு அழுத்தம் தெரிவித்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. சமீபத்தில் இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரதேஸ் மிஷ்ரா புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதுவரை அழைத்து இந்த ஒப்பந்தம் குறித்து இந்திய அரசின் ஆட்சேபனையைத் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் பகிரங்கமாக வெளியிடப்படாத காரணத்தின் அடிப்படையில் இவ்வொப்பந்தம் கைச்சாத்தாவது பிற்போடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்த மட்டில் ஜனாதிபதி புஷ்ஷுடனான சந்திப்பு இராஜதந்திர ரீதியில் அவருக்குப் பல சாதகத் தன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும். சர்வதேச ஆதரவு தன் பக்கம் இருப்பதாகக் காட்டிக் கொள்ள ரணில் எடுக்கும் தீவிர பிரயத்தனத்தை நோக்கும் போது அவர் முதலில் புலிகளுடன் சமாதானம் பேசப் போகிறாரா? அல்லது நேற்று முன் தினம் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கூறியிருப்பது போல டிசம்பருக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்தி மீண்டும் ஒரு மக்கள் ஆணையைப் பெற உத்தேசித்திருக்கிறாரா...? என்ன செய்யப் போகிறார் ரணில்? ■

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.

500க்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



**Wedding PHOTOGRAPHER**
27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
Your Satisfaction Is My Success




# விளம்பரப் பகுதி

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

| உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி | கொழும்பில் | நுவரெலியாவில் |
|---|---|---|
| Dr.P.K.Saamy J.D.G.A. NL JP<br>Hon. Prof. (IUMA)<br>Sri Durgaadevi Manthirika<br>Uchchada Peedam. | No.162,<br>Kotahena Street,<br>Mayfield Road,<br>Colombo 13,<br>Sri Lanka. | 33, Daily Fair Complex,<br>Kandy Road,<br>Nuwara-Eliya.<br>052-22508, 052-35097. |

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.
விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15-14
International Plaza, Singapore
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி
**அப்பு: 0065-975 14 941**
e-mail: lingam_wedding@hotmail.com



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்


அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, கக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

# வீடே அழகாகி உள்ளது

வீட்டுக்குத் தேவையான அனைத்து பொருட்களும் ரெலிமாக்கட்டிங் மூலம்...


வானொலிப் பெட்டி
தொலைக்காட்சிப்பெட்டி
வீடியோ, டெக்
குளிர்சாதனம்-மின்குமிழ்
காஸ் அடுப்பு-மின் அடுப்பு
ஜெனரேட்டர்- என்ஜின் லயட்





SISIL · SAMSUNG · SONY · LG · Panasonic · Candy · SANYO · SHARP · SINGER · PHILIPS





- குறைக்கப்பட்ட விலைகள்
- இலவச போக்குவரத்து
- இலகு தவணைக் கொடுப்பனவு
- உறுதியான விலை

தொலைபேசி: (வெலிசறை-074-819890,939342)
(நீர்கொழும்பு-074-872628)

## ரெலி மாக்கட்டிங்

TM Tele Marketing
CONSUMER ELECTRONICS

750. நீர்கொழும்பு வீதி, வெலிசறை.
கிளை: 138. றோயல் சினிமா கட்டிடம்.
கிறீன்ஸ் வீதி. நீர்கொழும்பு.
website: www.viplanka.com/tele
(நீர்கொழும்பு பஸ் தரிப்பிட நிலையத்திற்குப் பின்னால்)

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்ப விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## TRAVEL DATA TOURS & TRAVELS (PVT) LTD.

சகல நாடுகளுக்குமான விமான டிக்கட்
ஆண், பெண் இருபாலாருக்கும் குவைத், டுபாய், சவுதி அரேபிய நாடுகளில் வேலைவாய்ப்பு

24 மணிநேர சேவைக்கு தொடர்பு: 071-343255

இருவருட சேவைக் காலத்தினுள் பிரச்சனைகள் ஏற்படின் உடனடித் தீர்வு

**பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசம்**

10 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச்சீட்டு, புகைப்படங்கள் (வர்ணப் புகைப் படம்-பெரிய படம் 3, சிறிய படம் 8) வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வரவும்

பதிவு இல: 1063
இல.63, முதலாம் மாடி,
மெலிபன் வீதி,
கொழும்பு-11.

Tel:074-722129 Fax: 074-722128 E.Mail: rinos21@hotmail.com

## விதுஜா ஏசியன் சொப்

# VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.

T.P.:- 031-3113510,
031-9928267,
079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

விதுஜா ஏசியன் சொப்

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
**Tel: 074-519754**

## தெய்வீக மருத்துவம்

National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine Service
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Batticaloa.
Tele / Fax:065-24825,078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

கொழும்பிலும் சந்திக்கலாம்

"வாழ்விலிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "

அலசுவது-இராஜதந்திரி

# நினைவை விட்டகலா கறுப்பு ஜூலை

இலங்கையின் தலைநகர் கொழும்பில் இரத்தக்களரியை உண்டுபண்ணிய கறுப்பு ஜூலை இனக்கலவரம் நிகழ்ந்து பத்தொன்பது வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இந்த இரு தசாப்த காலத்தின் தொடர்ச்சியாக அழிவுகளும், அவஸ்தைகளும் இடம்பெற்று அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக இலங்கை தறிகெட்டுப் போயுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

19 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற ஆடிக்கலகம் மட்டுமல்ல, அதற்கு முன்னரும் 1977ஆம் ஆண்டு, 1958ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கெதிராக இனத்துவேசம் கொண்ட சக்திகள் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தியிருந்தன.

இனக் கலகங்கள் மூண்ட காலங்களிலெல்லாம், எதுவுமறியாத அப்பாவித் தமிழர்கள், கையில் அகப்பட்டவற்றுடன் கோயில்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாதோராக இருந்தனர்.

இந் நாட்டில் முன்பு இனப்பிரச்சனை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்ட போதெல்லாம், காடைத்தனங்கள் மூலம், தமிழ் மக்களது கோரிக்கைகளை நசுக்கி விடுவதிலேயே முன்னைய ஆட்சியாளர்கள் கவனஞ் செலுத்தினர்.

இக் கண்மூடித்தனமான அடாவடித் தனத்தின் உச்சக் கட்டமாகவே 1983ஆம் ஆண்டின் ஆடிக்கலகம் விளங்கியிருந்தது.

வீடு, வாசல்களில் இருந்த தமிழர்கள் மட்டுமல்லாது, சிறைகளில் வைக்கப்பட்டிருந்த தமிழர்களும் மூர்க்கத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

கோடிக்கணக்கான சொத்துக்கள், உடைமைகள் என்பவை நாசமாக்கப்பட்டு இரண்டாம் உலக யுத்தத்தில் யூதர்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டதைப் போலவே தமிழ் மக்களும் அவல நிலைக்குள்ளாகியிருந்தனர்.

1983ஆம் ஆண்டின் பின்னரே இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண முடியுமென்ற நம்பிக்கையும் தவிடுபொடியாகியிருந்தது. இதனையடுத்து வடக்கு- கிழக்கில் தோன்றிய ஆயுதப் போராட்டமே கடந்த இரு தசாப்த காலத்தில் பல்வேறு பரிமாணங்களையும் பெற்று, தற்போது ஒரு விரிவான அரசியல் தீர்வை வலியுறுத்தியதாகவும் விளங்குகின்றது.

வடக்கு- கிழக்குத் தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்குக் குரல் கொடுத்து வந்த தமிழ்த் தலைவர்கள் தமது வாழ்நாளில் மிகுந்த தீர்க்கதரிசனத்துடனேயே நடந்து கொண்டிருந்தனர்.

அத் தலைவர்கள் இலங்கை பிளவுபடுவதை விரும்பியிருக்கவில்லை. தமிழ் மக்களும் இந் நாட்டில் சகல உரிமைகளுடனும் சரி சமமாக வாழ வேண்டுமென்றே வலியுறுத்தி வந்தனர்.

ஆனால், அன்றைய தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களை எப்போதும் அடக்கி ஆள முடியுமென்றே கருதினர். அரை வேக்காடான அரசியல் தீர்வுத் திட்டங்களைத் திணிக்க முன்வந்ததோடு, ஆக்கபூர்வமானவற்றை பேரினவாதிகளின் அச்சுறுத்தல்கள் காரணமாகக் கிழித்தெறிந்துமிருந்தனர்.

இக் கட்டத்திலேயே தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் ஒரு தடவை பாராளுமன்றில் "தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை உதாசீனம் செய்வோரால் எதிர்காலத்தில் இந்த நாட்டில் ஒரு பிரிவினைக்கான மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும்" என்று பேரினவாத அரசியலாளர்களை எச்சரிக்கை செய்திருந்தார்.

இத் தீர்க்கதரிசனமான எச்சரிக்கையில் புதைந்திருந்த உண்மையை உணரும் பக்குவம் அன்றைய பெரும்பான்மையின அரசியல்வாதிகளிடம் காணப்பட்டிருக்கவில்லை. இனப்பிரச்சனையின் பூதாகரத் தன்மையையும், அதன் விளைவுகளையும் அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறியிருந்தனர்.

ஆனால், இன்று இருபது வருடங்களைக் கடந்து, ஆயுதப் போராட்டமே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்குமளவுக்கு விரிவடைந்திருக்கின்றது.

பத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் ஆடிக்கலவரம் வெடித்த போது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவே இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவிருந்தார்.

1983ஆம் ஆண்டு ஆடிக்கலவரம் பற்றிக் குறிப்பிடுவோரில் ஒரு சாரார், வடக்கே புலிகள் யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் கண்ணிவெடித் தாக்குதலில் பதின்மூன்று படையினரைக் கொன்ற தையடுத்தே ஆத்திர மிகுதியால் தென்னிலங்கையில் கொந்தளிப்பு ஏற்பட்டதெனவும் கூறுவதுண்டு.

ஆனால் 1981ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்துக்கு பேரினவாத சக்திகள் தீயிட்டதைத் தொடர்ந்தே, ஒரு நீண்ட கால மோதலுக்குக் கட்டியம் கூறப்பட்டிருந்ததென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வடக்கு- கிழக்குத் தமிழ் மக்கள் இனவாதிகளின் அடக்கு முறைகளால் அல்லற்பட ஆரம்பித்த காலத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு தடவை " போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று சூளுரைத்திருந்தார்.

ஆனால் இன்று இது போன்றதொரு கூற்றை வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களால் கூடத் துணிவுடன் கூற முடியுமெனக் குறிப்பிடுமளவுக்கு இலங்கையின் அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆனால் இன்று வடக்கு- கிழக்குத் தமிழர்கள் மட்டுமல்லாது தென்னிலங்கையின் சிங்கள மக்களும் கடந்த இரு தசாப்தகால யுத்தத்தின் தாக்கத்தை வெகுவாகவே அனுபவித்திருக்கக் காணப்படுகின்றனர்.

## "இலங்கை சிங்களவர்களுக்கு மட்டும் உரியதல்ல"

### -டிரோன் பெர்னாண்டோ-



இந் நிலையில் மீளவும் "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்ற கோஷத்துக்கு முக்கியத்துவம் தரப்படுமேயானால், இரத்தப் பிரவாகமே இலங்கையில் நிரந்தரமானதாகிவிடும்.

தென்னிலங்கையின் இன்றைய சந்ததித் தலைவர்கள் இனப் பிரச்சனையின் யதார்த்த நிலையை நாடி பிடித்தறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

அண்மையில் வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ லண்டனில் வதியும் இலங்கையர்கள் மத்தியில் உரை நிகழ்த்தியிருந்தார். அப்போது அவர் அங்கு தெரிவித்த கருத்துக்கள் இன்றைய தலைமுறைத் தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் அணுகுமுறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றத்தையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பிரிட்டனின் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகப் பழைய மாணவர் அப் பல்கலைக் கழகத்தின் மாணவர் மன்றத் தலைவராகவுமிருந்தவர்.

கடந்த வாரம் லண்டனில் தங்கியிருந்த போது அங்குள்ள இலங்கையர் மத்தியில் திரு. டிரோன் பெர்னாண்டோ உரை நிகழ்த்துகையில், "சிங்களவர்களுக்கே இலங்கை சொந்தமானது எனக் கருதினால் இனப் பிரச்சனை இலங்கையில் நிரந்தரமானதாகிவிடும். ஏனைய இனங்களும் அனைத்து உரிமைகளையும் பெறுவதுடன், அவர்களின் தனித்துவம், பாதுகாப்பு என்பவை உறுதி செய்யப்படும் பட்சத்திலேயே சமாதானத்துடன் கூடிய ஒரு பூரணத்துவமான இலங்கையை உருவாக்க முடியும்" என்று கூறியிருந்தார்.

கூடவே "இனத் துவேசத்தைக் கிளப்பிவிடுவதன் மூலம் அரசியல் இலாபம் தேடலாம் என்ற காலம் மலையேறிவிட்டது" எனவும் டிரோன் பெர்னாண்டோ தமது உரையில் கூறியிருந்தார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா, அவருக்குப் பின்னர் ஆர். பிரேமதாஸ ஆகியோரது ஆட்சியிலும் அங்கம் வகித்தவரே வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

1983 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கையில் இனப் பிரச்சனையின் மூர்க்கத்தனத்தால் தோன்றிய விளைவுகளை நன்கறிந்தவராகவே வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ விளங்குகின்றார்.

வெறுமனே ஓர் அரசியல் பிரச்சனையாக மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மீறல்கள் சார்ந்ததாகவுமே இனப்பிரச்சனை காணப்படுகின்றது.

இன்றுங் கூடப் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தமது நாளாந்த வாழ்க்கையைச் சரிவர மேற்கொள்ள முடியாதவர்களாக அகதிகளாகவும், ஆதரவற்றோர்களாகவும் இருந்து வருகின்றனர்.

சிறைக் கூடங்களில் கைதிகளாக நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசாரணைகள் ஏதுமின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இக் கைதிகள் பலதரப்பட்ட கெடுபிடிகளுக்கு உள்ளாகித் தமது விடுதலைக்காக ஏங்கி நிற்கின்றனர்.

சிறையில் இருக்கும் ஒரு தமிழ்க் கைதி மீது நடாத்தப்பட்ட தாக்குதல் காரணமாக அவரது இரு கண்களும் பார்வை இழந்துள்ளனவென்றும் தெரியவந்துள்ளது.

எனவே, தமிழர்கள் மீதான துவேச மனப்பாங்கின் பிரதிபலிப்பு இன்றுங் கூடப் பல்வேறு வடிவத்திலும் இருந்து வருகின்றது.

அதே சமயம் இனப் பிரச்சனைத் தீர்வுக்காக எத்தகைய தொரு சவாலையும் வடக்கு- கிழக்கு மக்கள் ஏற்பதற்குத் தயாராக இருக்கையில் தென்னிலங்கை, அரசியல் கோதாவில் தீர்வுக்கு ஆதரவான, மற்றும் எதிரான சக்திகளிடையே முரண்பாடுகள் முறுக்கேறியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த முரண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவே லண்டனில் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன.

இந் நிலையில் வடக்கு- கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்க முன்வரும் தென்னிலங்கையின் அரசியல் சக்திகள், பேரினவாதிகளை முதலில் வெற்றிகொள்வதன் மூலமே ஒரு பரந்துபட்ட அரசியல் தீர்வுக்கும், சமாதான சக வாழ்வுக்கும் வழியமைக்க முடியும்.



# அதிரடி அய்யாத்துரை

**கன்ரீன், கதிரை, மேசை** தொடங்கி படிப்புக்குத் தேவையான இன்ரனெற் வசதிகூட இல்லாத மோசமான நிலையில, பகிஷ்கரிப்பில இறங்கின வவுனியாப் பல்கலைக் கழக மாணவர்கள் கேட்ட கேள்விகளால துணை வேந்தரே டென்ஷனாயிட்டாராம். "யாற்றா அவன், பிடிடா...!" எண்டு கொண்டு கேள்வி கேட்ட மாணவனைத் துரத்திப் பிடிக்க வெளிக்கிட்டிட்டாராம். மாணவன் பயந்து வளாகத்தை விட்டு வெளியில ஓட, இவர் "ஒருத்தர் ஒருத்தரா வாங்கடா பாப்பம்" எண்டு சண்டைக்குச் சவால் விட்டுக்கொண்டு நிக்க, விரிவுரையாளர்கள்தான் ஒருபாடாச் சமாதானப் படுத்தி அனுப்பி வைச்சிச்சினமாம். மாணவர்கள் உணர்ச்சிவசப்பட்டால் விரிவுரையாளர்கள் கட்டுப்படுத்தலாம்; விரிவுரையாளர்கள் உணர்ச்சிவசப்பட்டால், பீடாதிபதிகள்; பீடாதிபதிகள் உணர்ச்சிவசப்பட்டால் துணைவேந்தர்; துணைவேந்தரே உ.வ. பட்டால்.... கல்வி எங்கபோய்ச் சேரப்போகுதோ!

**புலிகள் பிரதிநிதிபோலக்** காட்டிக்கொண்டு ஆளும் கட்சியில எம்.பி. யாகி அமைச்சரானவரை புலிகள் கூப்பிட்டு தங்கட பெண்கள் பிரிவை விட்டு வலு 'மரியாதையா' விசாரிச்ச விஷயம் வெளியால வந்திட்டுது. அந்த ஆத்திரத்தில முன்னாள் புனர்வாழ்வு அமைச்சரை விவாதத்துக்கு வரச் சொல்லிச் சவால் விட்டிருக்கிறார் அவர். இந்தச் சவால்பற்றி டக்ளஸ் தேவானந்தாவிட்டக் கேட்டால், இந்தக் கதையை வெளியிட்டதே புலிகளுக்கு ஆதரவான கனடா ஈழநாடுதான் எண்டதால அந்தப் பத்திரிகைக்குத்தான் அவர் சவால் விட்டிருக்க வேணும். எங்களோட விவாதிக்கிறதெண்டால் எங்கட மகளிர் அணிய அனுப்பி வைக்கிறன் என்கிறாராம் ஒரு விஷமச் சிரிப்போட. அட மகேஸ்வரா... இது தேவையா?

**'பொம்'** எங்கட அரசியலில நுளையாத இடமில்லை. இப்ப ஜனாதிபதியின்ர ஹான்ட் பேக்குக்குள்ளேயும் நுளைஞ்சுட்டுது. அமைச்சரவைக் கூட்டங்களுக்கு வாற ஜனாதிபதியின்ற ஹான்பேக்குக்குள்ள ஒலிப்பதிவுக் கருவிகள் இருக்குதெண்டு அமைச்சரொருவர் குற்றஞ்சாட்டினது தெரிஞ்ச விஷயம். அது எப்படி 'பொம்' மாகினதெண்டதுதான் தெரியாத விஷயம். அந்த 'பொம்'மால பிரதமரைக் கொல்ல ஜனாதிபதி திட்டம் போட்டதா ஆளும் கட்சி அமைச்சரொருவர் குற்றஞ்சாட்டியிருக்கிறதாச் சொல்லி ஜனாதிபதி பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறா. அந்த அமைச்சரையும் நீக்கச் சொல்லியிருக்கிறா. ஆனால் அப்பிடி ஒரு 'பொம்' கதையை யாருமே கதைக்கேல்லையெண்டு ஆளும் கட்சி மறுக்குது. இது நிஜ 'பொம்'மா, அல்லது அரசியல் 'பொம்'மா? 'பொம்' எல்லாமே ஒரே குழப்பமாயிருக்கே! ஏதோ, அந்த 'பொம்' சனத்துக்கு நடுவில வெடிக்காட்டால் சரிதான்.

**பனை அபிவிருத்திச்** சபையின்ர பணிப்பாளர் சபையை, தன்ர அமைச்சில வேலை செய்யிற ஆலோசகர்களையும் அதிகாரிகளையும் கொண்டு நிரப்பியிருக்கிறாராம் சம்பந்தப்பட்ட தமிழ் அமைச்சர். அமைச்சின்ர ஆக்களே சபையை ஆக்கிரமித்தால் சபை எப்பிடி பொதுப்படையாச் செயற்படுமெண்டது நியாயமான கேள்விதான். ஆனால், பொதுவான ஆட்கள நியமிக்கச் சொன்னால் அவற்ர அண்ணன் தம்பிமாரைத் தவிர வேற யாரைப் போடப் போறார், அதைவிட இது பெட்டர் எண்டினம் விஷயமறிஞ்சவை. உண்மைதானே!

**கழுத்துறைச் சிறைச்சாலைத்** தமிழ்க் கைதிகளின்ர கதை கைவிட்ட கேஸாத்தான் போயிட்டுது. எப்ப பாத்தாலும் தங்கள விசாரி அல்லது விடுவியெண்டு சொல்லி அவை உண்ணாவிரதம் இருக்கிறதும், எங்கட தமிழ் எம்.பி. மார் ஓடோடிப்போய், அமைச்சரிட்டக் கதைச்சாச்சு, பிரதமரிட்டக் கதைச்சாச்செண்டு ஏதோ சமாதானம் சொல்லி உண்ணாவிரதத்தை நிறுத்திறதும், பிறகு ஒண்டுமே நடக்காமல் அவை திரும்ப உண்ணாவிரதம் இருக்கிறதுமாக் கதை, தொடர்கதையாத்தான் இருக்கு. இப்ப சாகும் வரை உண்ணாவிரதத்தில குதிச்சிருக்கினம். எங்கட எம்.பி.மார் என்னதான் செய்யப்போகினம்...? இதுக்குக்கூட அவையால உருப்படியா ஒரு முடிவு கட்ட முடியாதெண்டால் பதினாறு பேரும் கூடியிருந்து பாராளுமன்றத்தில என்ன பாட்டுக் கச்சேரியா நடத்தப் போனவையெண்டு அந்தக் கைதிகள் கேக்கிறது நியாயந்தானே!

## அப்பன் பெயரைக் கெடுக்க

# புஷ் குடும்பத்தில் இன்னொரு வாரிசு!



ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் இரு புதல்விகளும் சட்ட விரோதமான முறையில் மதுபானம் அருந்திப் பொலீஸில் பிடிபட்டு, தண்டப்பணம் செலுத்திய செய்தி எல்லோருக்கும் ஞாபகமிருக்கும்.

புஷ் தனது மகள்மார் இருவரையும் கண்டித்து வைத்திருக்கிறார் எனச் செய்திகள் பத்திரிகையில் வெளிவரத் தொடங்கிய சில வாரங்களில் மீண்டும் ஒருமுறை புஷ் குடும்பத்தினர் மீது போதைமருந்து பாவித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால், இம்முறை சிக்கியிருப்பது ஜனாதிபதி புஷ்ஷின் மகள்மார் அல்ல, அவரது சகோதரரின் புத்ல்வி.

ஜனாதிபதி புஷ்ஷின் சகோதரர் ஜெடி புஷ், இவர் புளோரிடா மாகாண ஆளுநராக இருக்கிறார். அவருக்கு நொயேலி என்ற ஒரேயொரு மகள் மட்டும்தான்.

இந்த நொயேலிதான் இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருப்பவர். 'ஷனாக்ஸ்' என்ற போதை மருந்தை உபயோகித்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. இவரை 3 நாட்கள் சீர்திருத்தச் சிறைச்சாலையில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

"தந்தையரின் பெயரைக் கெடுக்கவென்றே வந்து வாய்த்திருக்கிறது புஷ்ஷின் இளைய பரம்பரை" என அமெரிக்க மக்கள் திட்டித் தீர்க்கிறார்கள்.

பட உதவி: ரி. தர்ஷிகா




# ஒருபிடி மருந்து

## உயிர் காப்பவனே எமனாக மாறிய கொடுமை

# 250 பேரைக் கொன்ற மருத்துவர்

உயிரைக் காப்பாற்றுபவர்தானே மருத்துவர். ஆனால், பிரித்தானிய வைத்தியரான ஹெரால்ட் ஷிப்மன், தன்னிடம் சிகிச்சைக்காக வந்த சுமார் 250 நோயாளிகளைக் கொடூரமாகக் கொலைசெய்து, ஏதுமறியாத அப்பாவி போல் மரணச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறார்.


55 வயதான ஹெரால்ட் ஷிப்மன், பிரித்தானியாவில் புகழ்பெற்ற மருத்துவர். பலரது குடும்ப மருத்துவராகப் பணிபுரிந்தவர். நோயாளிகளின் மிகுந்த நம்பிக்கைக்குரியவர். ஆனால், வெளியில் தெரியாத, யாராலும் இனங்காண முடியாத ஒரு கொடிய மனநோய் ஷிப்மனுக்கு ஏற்பட்டிருந்தது. அவரிடம் சிகிச்சை பெற வருபவர்களை மரண வாசல்வரை கொண்டு போய் விடுமளவிற்குப் பாரதூரமான மனநோய் அது.

இவரது 24 வருட கால மருத்துவத்துறை வாழ்வில் குறைந்த பட்சம் 265 பேரின் வாழ்விற்கு உலைவைத்ததாக விசாரணையாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இவரிடம் சிகிச்சைக்காக வந்த பலர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்கள். அவர்களின் மரணத்திற்குப் பொய்யான காரணங்களைக் குறிப்பிட்டு, மரணச் சான்றிதழ்களை வழங்கியிருக்கிறார். இவரிடம் வரும் நோயாளிகளின் இறப்பு வீதம் மாதத்தில் ஒன்று அல்லது மூன்று மாதங்களில் இரண்டு என்ற வகையில் இடம்பெற்றுவந்தாலும் இவர் மிக நம்பிக்கைக்குரிய மருத்துவராக இருந்து வந்ததால் இவரை யாரும் சந்தேகப்படவில்லை.

எவ்வாறெனினும், 2000 ஆம் ஆண்டில் இவர் அகப்பட்டார். அப்போது, இவரது கொடூரமான கொலைகள் பற்றிப் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியபோது, தங்களது உறவினர்கள் இறப்பிலும் சந்தேகமிருப்பதாக நூற்றுக்கணக்கானவர்கள் கிளம்பிவந்து சாட்சியமளித்தனர். அப்போது, ஷிப்மன், 215 பேரின் சாவுக்குத் தானே காரணம் என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால், இவரால் கொலைசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 265 ஐ விடவும் அதிகமென்று இப்போது அறிய முடிகிறது.






ஷிப்மன், குறிப்பிட்ட ஒரு வகை மருந்தை அளவுக்கு அதிகமாக வழங்கி நோயாளிகளைக் கொன்றிருக்கிறார். பெண்கள், முதியவர்கள் போன்றோருக்கு இவர் எமனாகியுள்ளார்.

கடந்த 100 வருட காலத்தில் அதிகமான கொலைகள் செய்தவர்களில் ஷிப்மனும் இடம்பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷிப்மன் மீதான விசாரணையின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகி, பிரித்தானியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள நொகென் தேசிய மருத்துவமனையில் பணிபுரிந்த பெண் தாதி ஒருவரும் இதே மாதிரி சுமார் 20 பேரைக் கொன்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. 36 வயதான விகிடோன் ஜக்சன் என்ற தாதி, தனது வாட்டிலிருந்த பலருக்கு 'மிவோக்ரியம் குளோரைட்.' என்ற மருந்தை அளவுக்கதிகமாகக் கொடுத்து ஒவ்வொருவராகக் கொன்றிருக்கிறார். 4 மரணங்களுக்கு இவர் காரணமாக இருந்தார் என்று உறுதியாகியுள்ளது. மேலும், 16 பேரின் உயிருக்கும் இவர் உலைவைத்திருக்கலாம் என விசாரணையாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த மருத்துவமனையில் விகிடோன் ஜக்சனின் வாட்டில் அவர் பணியாற்றிய நேரத்தில் தொடர்ச்சியாக மரணங்கள் சம்பவிக்கத் தொடங்கின. இறந்தவர்களின் உடலில் ஒரு வகை மருந்து அளவுக்கதிகமாக உட்செலுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது விகிடோன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 09



ஐம்பதாம் அறுபதாம் ஆண்டுகளில் வெளியான தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற தென்னாட்டு மொழி பேசும் படங்களில் குழு நடனங்களில் பிரதான பாகமேற்று நடனமாடுவதில் வல்லவராகத் திகழ்ந்த ரீட்டா என்பவரைத்தான் இங்கு பார்க்கிறீர்கள்.

திரைப்படங்களில் முன்னுக்கு வருவதற்கு நடிப்பாற்றலும் முகவெட்டும் மட்டும் இருந்தால் போதாது. 'ஆனாவிலாச'மும் தேவை. (அதாவது அதிர்ஷ்டம்) ரீட்டாவைப் பொறுத்த வரையில் இது உண்மையாகிவிட்டது. இரண்டொரு படங்களில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்க வாய்ப்புகள் வாயிற்படி வரை வந்து நழுவிவிட்டன.

எத்தனையோ துணை நடிக நடிகைகளும் கதாநாயக-நாயகிகளாகத் தோன்றிய போதிலும் அந்த ஆனா விலாசம் இல்லாமையினால் துணை நடன மணியாக இருந்து திரை உலகை விட்டு ரீட்டா ஒதுங்கிக் கொண்டார்.



வெண்கலத்தொனி என்று கூறுவார்கள் அல்லவா?, கர்னாடக இசை மேதை எம். எம். தண்டபாணி தேசிகருக்கு வெண்கலத் தொனிதான். அற்புதமான பல பாடல்களைப் பாடியுள்ளார். ஜெமினி தயாரித்த 'நந்தனார்' படத்தில் தண்டபாணி தேசிகர் நந்தனாராகத் தோன்றினார். அப்படத்தின் வெற்றிக்கு தேசிகரின் கணீர் என்ற குரலில் அமைந்த பாடல்களே காரணமாகும்.

சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைப்பிரிவின் தலைவராகப் பல ஆண்டுகள் சிறப்பாகப் பணி புரிந்துள்ளார். இவருடைய காலத்தில் இலங்கையிலிருந்து அண்ணாமலை சென்ற பலர் 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்றுத் திரும்பியுள்ளனர். 'தாமரை பூத்த தடாகமடி' என்று தேசிகர் பாடியுள்ள தனிப் பாடலை இசைத் தட்டில் கேட்பவர்கள் தங்களையே மறந்து இரசிப்பார்கள்.



திரை உலகில் 'கன்னடத்துப் பைங்கிளி' என்று பாராட்டைப் பெற்ற பி. சரோஜாதேவி 'பாகப்பிரிவினை', 'பாலும் பழமும்', போன்ற பல படங்களில் சிவாஜி கணேசனுக்கு இணையாக நடித்தார். இங்கு காணப்படுவது ஜெமினி தயாரித்த இரும்புத்திரையிலிருந்து ஒரு காட்சி. இவ்வாறு சிவாஜியும் சரோஜாதேவியும் பல படங்களில் நாயகன் நாயகியாக நடித்தமையினால் 'திரையுலகின் ஈடு இணையற்ற சோடி' என்ற பெயரைப் பெற்றனர்.

மைசூரில் தனது கணவருடன் வாழ்ந்து வரும் சரோஜாதேவியை தமிழ்த் திரை உலகம் மறக்கவில்லை. இதனால்தான் 'ஒன்ஸ்மோர்' படத்தில் சிவாஜியையும் சரோஜாதேவியையும் ஒன்று சேர்த்து இரசிகர்களுக்கு விருந்தளித்தனர். சிவாஜி அமரராகிவிட்ட போதிலும் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறக்கப்போவதில்லை. இன்றும் அமரர் சிவாஜியுடன் தோன்றும் சரோஜாதேவியை (பழைய படங்கள் மூலம்) பார்ப்பதற்கு இரசிகர்கள் காத்துக் கொண்டுதான் உள்ளனர்.




## நாய்ச் சண்டை

←ஆப்கான் பாலைவனப் பிரதேச மக்களின் வாழ்க்கை முறையில் மாறுபட்ட அம்சங்கள் ஏராள மாகக் காணப்படுகின்றன. இதுவும் அவ்வாறான ஒரு நிகழ்வுதான். வாழ்க்கை முழுவதும் சண்டை களையே பார்த்துப் பழகிவிட்ட ஆப்கான் வாசிகளின் பொழுதுபோக்குகளும் பெரும்பாலும் சண்டையோடு சம்பந்தப்பட்டவைதான். இது நாய்ச் சண்டை. காட்டு நாய்களைச் சண்டைக்குப் பழக்கி, மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். தலிபான் ஆட்சியில் இந்த நாய்ச் சண்டை விளையாட்டுக்குத் தடை விதிக் கப்பட்டிருந்தது. இப்போது மீண்டும் நடைபெறு கிறது. வடக்கு கந்தஹாரில் இது பிரதானமான பொழுதுபோக்கு.

# தகவல் பெட்டி

## வியாபாரம்

→இந்த பாலஸ்தீன வர்த்தகரின் வியாபாரம் சற்று வித்தி யாசமானது. இஸ்ரேலுக்கு எதிராக தற்கொலைத் தாக்குதல் களில் உயிரை மாய்த்துக் கொள்ளும் பாலஸ்தீனப் போராளி களின் உருவப் படங்கள் பொறிக்கப்பட்ட 'கீ-டெக்' களைத் தயாரித்து விற்பனை செய்கிறார். இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல் நடந்ததும் அதில் ஈடுபட்டவரின் புகைப்படம் பெரும்பாலும் மறுநாள் செய்தித்தாள்களில் வெளியாகும். அவற்றின் மூலம் செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான கீ-டெக் களைத் தனது கடையில் விற்பனைக்கு வைத்திருக்கிறார் இவர். ஒவ்வொரு வாரமும் புதுப்புது கீ- டெக்குகள் வந்து சேர்கின்றன. இவற்றுக்குப் பாலஸ்தீன இளைஞர்கள் மத்தியில் பெரும் மவுசு காணப்படுகிறதாம்.




## ஆசீர்வாதம்

↓ பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் மிகுந்த சிரமத் திற்கு மத்தியிலேயே அன்றாடப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். பாப்பரசர் அந்தப் பதவியில் இருந்து ஓய்வு பெறக்கூடும் என்றும் வத்திக்கான் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிகழுமாயின் அண்மைக்கால வரலாற்றில் முதுமை காரணமாக பாப்பரசர் பதவியைத் துறந்த முதல் நபராக ஜோன் போல் விளங்குவார். தனது உடல் நல அசௌகரியங்களுக்கு மத்தியிலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு வத்திக்கானில் ஆசி வழங்குகிறார் பாப்பரசர்.



## புலிக்குட்டி

கோல்ஃப் விளையாட்டில் உலகச் சம்பியனாக விளங்குபவர் டைகர்வுட். கனடாவில் இருந்து 'லிட்டில் டைகர்' உருவாகி வருகிறார் என அந்த நாட்டு ஊடகங்கள் ஒரு சிறுவனைப் புகழ்கின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபாலசிங்கம் கஜன் கோல்ஃப் விளையாட்டில் மிகுந்த திறமை காட்டி வருகிறார். 8 வயதான கஜனின் குடும்பம் தற்போது கனடாவில் வசிக்கிறது. 5 வயது முதல் கோல்ஃப் விளையாட்டில் ஈடுபட்டு வரும் கஜன் அவரது தந்தை சிவபாலசிங்கத்தின் வழிகாட்டலின் கீழ் 'லிட்டில் டைகராக' வளர்ந்து வருகிறார் என கனேடிய செய்தித்தாள்கள் பாராட்டுகின்றன. →



## ரசிகர்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து விட்டன – பிரசாந்த்

தமிழ்த் திரைப்படங்களில் சில காலமாகவே தோல்விப் படங்களைக் கொடுத்துக் கொண்டிருந்த நடிகர் பிரசாந்துக்கு 'தமிழ்' மூலம் ஒரு திருப்பம் கிடைத்துள்ளது. பல்வேறு பெரிய நடிகர்களின் படங்களுக்கு இடையில் வெளிவந்த 'தமிழ்' சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது. இத்தனைக்கும் அதற்கு அதிக அளவில் விளம்பரங்கள் கிடையாது என்பது குறிப்பிடத் தக்கது.

தனது முதல் படத்திலேயே சிறந்த இயக்குனர் என்ற பெயரை எடுத்து விட்டார் ஹரி. 'தமிழ்' வெற்றி பெறும் வரை இவருடைய தோல்விப் படங்களின் பட்டியல் 'ஸ்டார்', 'மஜ்னு' என்ற கணக்கில் நீண்டு கொண்டே சென்றது. இப்போது அதற்கு முற்றுப்புள்ளி. ஒருவேளை இப் படமும் பிரசாந்துக்குத் தோல்விப் படமாக இருந்திருந்தால், இனி அவர் மீண்டு எழவே வாய்ப்பிருந்திருக்காது. நல்ல நேரம் பிழைத்தார் பிரசாந்த். இப் படம் எனக்குப் புதிய தெம்பைக் கொடுத்துள்ளது என்கிறார் பிரசாந்த்.

'தமிழ்' வெற்றியால் இனி ரசிகர்களிடம் எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும். ஆகையால் நான் சிறந்த கதையைத் தேர்ந்தெடுத்தே நடிப்பேன். ஒரே மாதிரியான கதாபாத்திரங்களில் நடித்து முத்திரை குத்திக் கொள்ள விரும்பவில்லை. பல்வேறு கதாபாத்திரங்களிலும் நடிக்க வேண்டும் என்பது என் ஆசை என்கிறார் பிரசாந்த். இப்போது தெலுங்கில் வெற்றி பெற்ற 'ஆதி' என்ற படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்கிறார். 'நான் ரீமேக்கை எதிர்க்கவில்லை. நல்ல கதையாக இருந்தால் நிச்சயம் நடிப்பேன்" என்கிறார்.

### டும்... டும்... எப்போ?

'நம்ம வீட்டுக் கல்யாணம்' படம் ரிலீஸ் ஆகும் வரையில் மீனா வீட்டில் கல்யாணப் பேச்சை ஒத்திவைத்திருக்கிறார்கள்

## மினி சினி...

• 'துள்ளுவதோ இ... ...தில் அசகாய வெற்றி... ...கஸ்தூரி ராஜா உருவா... ...சாதி' படத்தில் அனைத்... இளையராஜாவே எழுதியு... அவரே.

• 'ஜெமினி' என்ற டைட்டில் ... விக்ரம் நடிக்கும் அடுத்த படத்திற்கு ... பெயரான 'வாஹினி' என்று பெயர் ... கொலம் பியா பிக்சர்ஸ் என்று கூட ...

• இனிமேல் படங்களில் ஒரு பாட்டுக்கு ... ராகவேந்தர். அவர் ஹீரோ ஆகிவிட்டதாக ...

• தனது மகன் சூர்யாவுக்கும் யோகா ... நாராம் நடிகர் சிவகுமார். தன்னைப் போலவே ... வேண்டும் என்பதே இதற்குக் காரணம்.

• 'ஜெயா' என்ற படத்தில் ரம்யா கிருஷ்ணனோ... இளமை' புகழ் ஷெரீன் ரெட்டி நடிக்கவுள்ளார் ...

• 'தேவன்' படத்தில் பல நடிகர்களைக் கேலி செய்வது ... எழுந்துள்ளது. விவேக்கைக் கண்டிக்க வேண்டும் என்று ...



விக்ரம்-அனிதா (படம்: சாமுராய்)

### 'காஷ்மீர்'

'துள்ளுவதோ இளமை' நாயகன் அபிநய் ஹீரோவாக நடிக்கும் படம் 'காஷ்மீர்'. அபிநய்க்கு ஜோடியாக அபிதா, புதுமுகம் சாருலதா நடிக்கிறார்கள். ரகுவரன், ஸ்ரீவித்யா, சரண்யா, வையாபுரி உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர். உதயா சினி ஆர்ட்ஸ் என்ற புதிய நிறுவனம் வழங்கும் இப் படத்தின் கதை, காதலும் பயங்கரவாதமும் கலந்தது. இப் படத்துக்குக் கதை, திரைக்கதை எழுதி டைரக்ட் செய்வது கௌரி மனோகர். இசை - தேவா.

### 'நீ கிடைத்தால் போதும்'

'நீ கிடைத்தால் போதும்'- (படத்தின் பெயர்தாங்க!) இப் ... கதாநாயகனாக புதுமுகம் தேவ் நடிக்கிறார். ... அழகிகள் அனந்தி, சந்தனா இவருக்கு ஜோடி... இவர்களைத் தவிர சார்லி, பொன்னம்பலம், தேவன், கருணாஸ் உள்ளிட்டோர் நடிக்கிறார்கள். கதை எழுதி, இசை அமைப்பது மனோஜ் பட்நாகர்.



### சினி விசிட்

## சிவாஜி பெயரில் விருது

பழம் பெரும் நடிகர்களுக்கு நடிகர் சிவாஜி கணேசன் பெயரில் ஒவ்வோர் ஆண்டும் விருது வழங்கப்படும் என்று அவரது மகன் ராம்குமார் கூறியிருக்கிறார். அக்டோபர் 1ஆம் திகதி நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 75ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்படவுள்ளது. இவ் விழாவில் சிவாஜி கணேசனின் சுயசரிதை வெளியிடப்படும்.

சிவாஜி கணேசனின் பேச்சு, மற்றும் அவர் தனது நினைவுகளைக் கூறியது பதிவு செய்யப்பட்டுள்ளது. இதை வைத்து இந்த சுயசரிதை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் விழாவின் போது 'சிவாஜி நினைவு விருது' என்ற விருதும் வழங்கப்படவுள்ளது.

இதில் பழம்பெரும் நடிகர்கள், திரைப்படக் கலைஞர்கள் ஆகியோரில் 2 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்கப்படும் என்றும் ராம்குமார் கூறியுள்ளார்.

## ஐந்து மணி நேரம் 'தீவிரவாதியாக' மாறிய சம்யுக்தா வர்மா

மலையாள திரைப்பட நாயகியான சம்யுக்தா வர்மா உள்ளிட்ட 6 மலையாள நடிகர், நடிகைகளைப் பயங்கரவாதிகள் என்று சந்தேகித்து அமெரிக்கப் பொலிசார் 5 மணி நேரம் விசாரித்தனர். பிறகு அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (சம்யுக்தா வர்மா தமிழில் 'தென்காசிப்பட்டணம்' படத்தில் சரத்குமார் ஜோடியாக நடித்துள்ளார்)

உள்நாட்டு விமானப் பயணத்தின் போது அந்த 6 பேரும் விமானத்துக்குள்ளேயே நடத்திய ஒத்திகையும், தங்களுக்குள் அடிக்குரலில் மலையாளத்தில் பேசிக் கொண்டதும், சுதந்திர தேவி சிலை போன்ற நகரின் முக்கிய அடையாளச் சின்னங்களை விமானத்தின் ஜன்னல் வழியாகச் சுட்டிக்காட்டிக் கொண்டே வந்ததும் சக பெண் பயணி ஒருவருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.



சிம்ரன்

கடந்த செப்டம்பர் மாதம் நியூயோர்க்கிலும், வாஷிங்டனிலும் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதல்களால் மிகுந்த மன உளைச்சல அடைந்தவர் அந்தப் பெண் பயணி. எனவே இந்த 6 பேரின் நடவடிக்கைகளும் அவருக்குச் சந்தேகத்தையும் பயத்தையும் ஏற்படுத்தியது. ஆங்கிலத்தில் பேசினால் தங்களை மற்றவர்கள் கவனிக்கக்கூடும் என்று நினைத்துப் புரியாத (மலையாளம்) மொழியில் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள் என்று அவர் கணித்து விட்டார்.

அத்துடன் கலை நிகழ்ச்சியில் நடிக்க வேண்டிய, பேச வேண்டிய காட்சிகளை அனைவரும் விமானத்திலேயே ஒத்திகை பார்த்துக் கொண்டனர். ஜெயராஜ் வாரியர் என்ற நகைச்சுவை நடிகர் குரலை மாற்றி, பிரமுகர்களைப் போல பேசிப் பார்த்தது அவருடைய அச்சத்தை அதிகப்படுத்தியது.

உடனே விமான பணிக்குழுவைச் சேர்ந்த ஒருவரை அழைத்து, விமானத்தில் 6 பேரின் நடவடிக்கைகள் சந்தேகத்துக்கு உரியதாக இருக்கிறது என்று எச்சரித்தார். அவர் உடனே பைலட்டிடம் தெரிவித்தார். பைலட்டும் காலம் கடத்தாமல் விமான பாதுகாப்புக்கான அமைப்பிடம் புகார் செய்தார். உடனே அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த 2 எஃப் - 16 ரக போர் விமானங்கள் இந்த விமானத்துக்கு அருகில் பறந்து வந்து, லாகுர்டியா என்ற விமான நிலையத்தில் பத்திரமாகத் தரை இறங்க உதவியது. அதன் பிறகு விமானத்தில் ஏறிய அதிகாரிகள் இந்த 6 பேரை மட்டும் தனியாக அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். கென்னடி சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலையப் பொலிஸார், நியூயோர்க் நகரப் பொலிஸார், பெடரல் பொலிஸார் ஆகியோர் கூட்டாக விசாரணை நடத்தினர். அவர்களுடைய டிக்கெட்டுக்கள், இதர உடைமைகள் சோதிக்கப்பட்டன. அவர்கள் தந்த முகவரிகள் சரிபார்க்கப்பட்டன. அவர்கள் கூறுவது சரிதானா என்று பல ஊர்களிலும் உடனடியாக விசாரித்து உறுதி செய்து கொள்ளப்பட்டது.

இதனால் 5 மணி நேரம் ஆனது. பிறகு அனைவரும் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர். அச்சம் காரணமாக இப்படி விசாரிக்க நேர்ந்தது என்று அதிகாரிகள் அவர்களிடம் விளக்கம் அளித்தனர்.

அமெரிக்காவில் நடந்த சம்பவங்கள் குறித்துத் தங்களுக்கும் தெரியும் என்பதால், அதிகாரிகள் மீது கோபமோ, ஆத்திரமோ, வருத்தமோ தங்களுக்கு இல்லை என்று ஆறு பேரும் பின்னர் குறிப்பிட்டனர்.

## "பல போராட்டங்களைச் சந்தித்தே இந்த நிலைக்கு வந்தேன்" -விக்ரம்

வித்தியாசமான கேரக்டர்களில் தோன்... தமிழ் திரையுலகைக் கலக்கி வரும் நாயகன்... தனது திரைப்படத்துறை வாழ்வு குறித்து... சஞ்சிகை ஒன்றுக்கு ... செவ்வியில் இரு... பகுதிகள்:



சிம்பு-சார்மி

**'மந்த்ரா ஜாலம்'** அஜித் நடித்து வெளியான 'ராஜா' படத்தில் ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆடினார் மந்த்ரா. 'த்ரில்' படத்திலும் இது தொடர்கிறது. சரத்குமார்- மீனா நடித்து வெளிவந்த 'மாயி' படத்திலிருந்தே மந்த்ராவுக்கு ஒரு பாட்டு வாய்ப்புதான் தொடர்கிறது. இந்த நிலைமையை மாற்றியே தீருவது என்ற நினைப்பில் தினமும் காலையில் எழுந்ததும் ஹீரோக்களுக்குப் போன் போடுவதை முக்கிய கடமையாக வைத்திருக்கிறார் மந்த்ரா. போன் செய்வதால் ஹீரோயின் சான்ஸ் வருகிறதோ இல்லையோ படத்தில் தலை காட்டுவதற்கு உத்தரவாதம் கிடைக்கிறதாம்.

...' படத் ... தொடர்ந்து ... வரும் 'காதல் ... பாடல்களையும் ...ராம். இசையும்

... வெற்றி பெற்றதால் ...னொரு பிரபல ஸ்டுடியோ ...னர். இப்படியே போனால் ...தப் பெயர் வைப்பார்கள்.

... ஆட மாட்டாராம் லாரன்ஸ் ...த்துக் கொண்டுள்ளாராம்.

... கொடுக்க ஆரம்பித்திருக்கி ...வும் என்றும் 16 ஆக இருக்க

...இன்னொரு ஹீரோயினாக 'துள்ளுவதோ ...தில் கவர்ச்சிக்குத்தான் முதலிடம்.

...ல விவேக் நடித்துள்ளதற்குக் கடும் கண்டனம் ... சங்கத்தில் புகார் கொடுக்கவும் சம்பந்தப்பட்டவர்கள் முயற்சிக்கிறார்கள்.

* 'மங்கா' - இப் படத்தில் விசேஷம் என்ன தெரியுமா? இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கதாநாயகியாக இப் படத்தில் நுழைகிறார் சரிதா. ஜி.ஜே. சினிமா தயாரிக்கும் படம் இது. எழுதி இயகுகிறார் பாலு மகேந்திரா.





# மண்வாசனை நாயகியின் பிரிவு

'மண்வாசனை' நாயகியும் 'கிறுக்கல்' நாயகனும் திரையுலகுக்குப் பல வழிகளில் முன்னுதாரணமாக இருந்த தம்பதிகள். அன்பான மனைவி அழகான பிள்ளைகள் என்று அடிக்கடி புளகாங்கிதப்பட்டுக் கொள்வார் நாயகன். இப்போது இவர்களிடையிலான 'லடாய்' சினிமா வட்டாரங்களில் பரகசியம்.

இராமனின் மனைவியின் பெயர் கொண்ட மண்வாசனை நாயகி தன் அப்பா வீட்டுக்கு இடம்பெயர்ந்து விட்டார். 'இவன்' இயக்கத்திலும் நடிப்பிலும் பிஸியாக இருக்கிறார் நாயகன்.

அமைதியாக இருந்த குடும்பத்தில் 'இவன்' தான் குழப்பத்தை தோற்றுவித்ததாக அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

'இவன்' படத்தில் கண்ணழகிக்கும், 'கிறுக்கல்' நாயகனுக்கும் இடையில் நெருக்கம் சற்று 'ஓவர்' என்பது பலருக்கும் தெரிந்த விஷயம். இதனால் குடும்பத்துக்குள் பிரச்சனை தோன்றியிருக்கிறது.

ஷூட்டிங் என்ற பெயரில் சில பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மனைவி வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் கண்ணழகில் 'சுகம்' கண்ட கறுப்பழகு நாயகனால் அதைத் தவிர்க்க முடியவில்லை. பொறுத்துப் பார்த்த மனைவி வீட்டை விட்டுப் போய்விட்டார். இந்தப் பிரச்சனையில் நாயகனை விடவும் மனம் நொந்து போய் இருப்பவர் கண்ணழகி தான்.



# 'ஜோ' தமிழ் சினிமாவுக்கு டாட்டா?

தமிழ் சினிமாவுக்கு டாட்டா காட்டி விட்டு மும்பையில் செட்டிலாகி விடலாமா என்று தீவிர சிந்தனையில் இருக்கிறார்கள் இரண்டு நாயகிகள். ஒருவர் தொப்பைத் திலகம் ஜோதிகா, மற்றவர் லைலா.

'ஜோ' வின் கைவசம் சொல்லிக் கொள்ளும்படியாகப் படம் எதுவும் இல்லை. சம்பளத்தைக் குறைத்துப் பார்த்தார். தொப்பையைக் குறைத்துப் பார்த்தார். எதுவும் குறிப்பிடத் தக்க பலனைத் தந்ததாகத் தெரியவில்லை. அதனால் நக்மாவைப் போல் மும்பைக்குச் சென்று குடியும் குடித்தனமுமாக வாழலாமா என்ற யோசனையில் ஆழ்ந்திருக்கிறார் 'ஜோ'. லைலாவின் நிலையும் அதுதான் கைவசம் அதிக படங்கள் இல்லை. மும்பை பறந்து விடலாமா என்று யோசிக்கிறார்.

# அஜித் நடிக்கும் 'வில்லன்'

அஜித்குமார் நடித்த வாலி, முகவரி, சிட்டிசன் ஆகிய மாபெரும் வெற்றிப் படங்களைத் தயாரித்த எஸ்.எஸ். சக்கரவர்த்தி, தற்போது பல கோடி ரூபாய் செலவில் மிக மிகப் பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் படம் 'வில்லன்'. இதில் முற்றிலும் மாறுபட்ட தோற்றங்களில் அஜத்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். தன்னுடைய தோற்றத்தை அவர் மாற்றிக் கொள்வதற்காக நிறைய முயற்சி செய்து வருகிறார். கதாநாயகிகளாக கிரண், மீனா நடிக்கின்றனர்.

முக்கிய கேரக்டர்களில் ரமேஷ்கண்ணா, நாசர், ஆஷிச வித்யார்த்தி, கருணாஸ் உட்பட பல முன்னணி நடிகர்- நடிகையர் நடிக்கின்றனர்.



...கேஷ்-சோனாலி
படம்: முராரி

...ட்டி-

... இன்று ...விக்ரம். ...தமிழக ...ங்கிய ... சில

**'சேது', 'தில்', 'காசி', 'ஜெமினி' ஆகிய படங்களின் தொடர் வெற்றி உங்களைப் பயமுறுத்தி இருக்கிறதா?**

தொடர் தோல்வி ஒரு மனிதனை வெற்றி பெற உற்சாகப்படுத்தும். ஆனால், தொடர் வெற்றி ஒருவனைப்பதப்படுத்தும். நான் வெற்றி பெற்றுவிட்டேன் என்று ஏகத்தாளமாக ஆட்டம் போட்டது கிடையாது. பதினான்கு வருட தமிழ்த் திரையுலக வாழ்க்கையில், அடுக்கடுக்காக எத்தனையோ தோல்விகளை என் தோளில் சுமந்தவன் நான். அப்போது கூட என்றாவது ஒரு நாள் ஜெயிப்போம் என்ற எண்ணம்தான் என்னை அந்தச் சோர்விலிருந்து மேலெழும்பச் செய்து காப்பாற்றியது. தோல்வியைக் கண்டே துவளாத நான், தொடர் வெற்றியின் மூலம் குதித்து ஆட்டம் போடுவேன் என்று தவறாக நினைத்து விட்டீர்களா?

**உங்களுக்கு மட்டும் எப்படி வித்தியாசமான பாத்திரங்கள் அமைகின்றன?**

படங்களைப் பார்த்தால், இரண்டு படத்திலுமே ஒன்றுக்கொன்று மாறுபட்ட கதாபாத்திரம் தாங்கி நடித்திருப்பேன். எனது ஒரு படத்தின் சாயல், இன்னொரு படத்தின் கேரக்டரில் தெரியக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன். தில்லுக்குப் பிறகு வெளியான 'காசி' படத்தின் கேரக்டர்- 'தில்' கேரக்டருக்கு கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லாத கேரக்டர். அதே போல, இப்போது வெற்றிகரமாக ஓடுகின்ற 'சாமுராய்' கேரக்டர்- இதற்கு முன் நான் நடித்த 'சேது', 'தில்', 'காசி' ஆகிய படங்களின் கதாபாத்திரத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரமாகும். இப்படி என் கேரக்டரையே நான் காப்பியடிக்காத காரணத்தால்தான், என்னைத் தேடிப் புதிது புதிதான கேரக்டர்கள் வருகிறது.

**'சாமுராய்' படத்தின் வெற்றிக்குப் பிறகு நீங்கள் நடிக்கும் புதுப் படங்கள் என்னென்ன?**

'அதிசயம்', 'கிங்', 'தூள்' ஆகிய படங்களில், என் முந்தைய படங்களின் சாயல் இல்லாமல் புதிய கேரக்டர்களில் நடிக்கிறேன். காதல்நாயகன் என்றால் இப்படித்தான் துடுக்குத்தனமாக இருக்க வேண்டும் என்பதை 'அதிசயம்' படத்திலும், மேஜிக் செய்து மகிழவைக்கும் நிபுணராக 'கிங்' படத்திலும் நடிக்கிறேன்.

**சிறந்த நடிகன் எனப் புகழ் பெற்றுவிட்டீர்கள். உங்கள் அடுத்த இலக்கு என்னவாக இருக்கும்?**

இதற்கு காலம்தான் பதில் சொல்லும். சிறந்த நடிகன் என்ற அந்தஸ்தைப் பெறத்தான் இத்தனை வருடப் போராட்டங்கள், கஷ்டங்கள், சோதனைகள். இதையெல்லாம் ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு உழைத்ததால்தான் இந்த உன்னத நிலையை அடைய முடிந்தது. கடுமையான உழைப்பும், விடா முயற்சியும் என்றைக்கு இருந்தாலும் கைகொடுக்கும் என்பது என் விஷயத்தில் தெளிவாகிவிட்டது. இப்போது தமிழ்ப் படவுலகில் கிடைத்துள்ள அந்தஸ்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியில் புதுப்பட வாய்ப்புகளை ஏற்றுக் கொள்வேன். மற்றபடி சொந்தப் பட தயாரிப்பு, டைரக்ஷன் என்பதெல்லாம் இப்போதைக்கு நினைத்துப் பார்க்கிற விஷயமே இல்லை. நேற்று நான் ஒரு சாதாரண மனிதன்... இன்று ஒரு நிலைக்கு வந்துவிட்ட கதாநாயகன். நாளை...என் கடுமையான உழைப்பின்படி என்னென்ன நிலை கிடைக்கின்றனவோ அதெல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறேன்!.





படம்: திரிஷா லேசா லேசா

# புதுமுகங்கள் அறிமுகமாகும் 'வெட்கம்'

என்.கே. ராம்கோபால் திரைக்கதை, வசனம் எழுதி, இயக்குநராக அறிமுகமாகும் படம் 'வெட்கம்'. பாக்யராஜ், சக்தி சிதம்பரம் உள்ளிட்டோரிடம் உதவி இயக்குநராகப் பணி புரிந்தவர் இவர். இப் படத்தின் கதாநாயகனாக வெங்கட் அறிமுகம் ஆகிறார். அவருக்கு ஜோடி ஷமிதா. ரமேஷ் கண்ணா, மனோரமா, ஜானகி சபேஷ், இளவரசு, அனிதா குப்புசாமி மற்றும் பலர் நடிக்கின்றனர். சுதா ராஜேந்திரன் தயாரிக்கும் இப் படத்துக்குக் கதை ரீத் நாராயணன். பாடல்களைப் பழனிபாரதியும் பா.விஜய்யும் எழுதியிருக்கிறார்கள். இசை-பரணி. இதன் படப்பிடிப்பு இம் மாதம் தொடங்குகிறது.

## முகப்பில்

அஜித் / மம்தா / உமா

# உயிர் பிரியுமுன்...

என் வ(ர)சமான
சிநேகிதனே,
கண்களால் என்னைக்
கட்டிப் போட்டு விட்டு,
நீ மட்டும்
மௌனத்தை
கட்டாய விடுமுறையாய்
அனுசரிக்கிறாயே,
நாம் காதலிப்பதென்ன
தேசத் துரோகமா,
வல்லரசின்
ராணுவ ரகசியம் போல்
வெளியிட மறுக்கிறாய்,

என்மீதுனக்கு
காதலில்லையென்றால்,
பார்வைக்குந்தானே நீ
கட்டாயம்
விடுமுறை கொடுக்க
வேண்டும்,
உனக்குள் என் மீது
காதலில்லை யென்றால்,
அடிக்கடி
நம் கண்கள் மட்டும்
எப்படி
சந்தித்துக் கொள்கிறது.

உன்னோடு
கூட இருந்து,
உன் துன்பத்தில் மட்டுமல்ல
இன்பத்திலும்,
உன்னை
ஆனந்தக் கண்ணீரில்
நனையவைத்து,
அந்தவேளை,
உன்
இமைகளுக்குள் உட்புகுந்து,
நெஞ்சுக்குழியில்
என்னையே தொலைத்து,
நீ விடும்
பெருமூச்சினிடைவெளியில்
நானும் கொஞ்சம் சுவாசித்து,
உன் வரண்ட உதட்டில்
என் இதழ் பிரித்து,
நான் நீயாகி,
நீயே நானாகி, வினாடிகூட
விரயமாகாமல்
காலப் பெருங்கடலில்
நழுவிப்போன
கணங்களையும்,
மீண்டும் சேகரித்து,
உன்னோடு வாழ, என்னுள்
எத்தனை ஆசைகள்,

நீயோ,
தூக்குக் கைதியின்
கடைசி ஆசைபோல்,
என்னுயிர் பிரியும்போதுதான்
உன் பிரியம் உரைப்பாயா?

சொல்லிவிடு
என் இளமை
தொலைவதற்குள்,
இல்லையென்றால்,
என்னையனுப்பிவிடு
சமாதிக்குள்,
அங்கே,
என்னோடு
நம் காதலும்
சமாதியாகட்டும்...

எவ்.ஏ. கிறஸன்ஸியா,
மட்டக்களப்பு.

# திசைமாறிய தென்றலே!

முல்லையென நினைத்தேன்
உனை முள்ளென
நினைக்கவில்லையே...!
காவிரியென
எண்ணியிருந்தேன் - ஆனால்
கானலென எண்ணவில்லையே!

மணம் வீசும் முல்லையே...
நீ ஏன் முள்ளானாய்...
களிப்பூட்டும் காவிரியே...
நீ ஏன் கானலானாய்...?

தேனென மகிழ்ந்திருக்க...
தேளாகக் குத்துகிறாயே...
சிறகடித்த சிட்டுக்கு நீ
சிறகொடிக்கத் துணிந்ததேன்...?

பால் வார்த்த நெஞ்சிலே...
பசுமைகள் தரையிலே...
எப்படி உன்னால்...
தீ மூட்ட முடிந்தது...?

பாலைவனப் புயல் என்னை
நந்தவனத் தென்றலாக்கி
பின் நாதியற்றவளாக்கி...
நாயாய்யேன் அலையவிட்டாய்...?

கனி மொழிகளெல்லாம்
கடி மொழிகள் ஆனதோ
பாசமலரெல்லாம் இன்று
வேஷ மலரானதோ...?


பாவி நான் செய்த
பாவச் செயல் என்ற
பழி வாங்க நினைத்த
பரிதாபமென்ன...?

எனை வெறுத்து ஒதுக்கிடலாம்
என்னுயிரை எரித்திடலாம்
நீங்காத உன் நினைவு
நித்தமும் எனைத் தொடரும்...

உயிரை எரித்துவிட்டு
உடலை ஏன் வாழ விட்டாய்
உணர்வற்ற சடமாகவோ
உனக்கு நான் தோற்றுகிறேன்.

அழிவற்ற உண்மையை
அறியும் போதுணர்வாய்
உன்னதமான
உத்தம உள்ளத்தை

றோஸ், பருத்தித்துறை.



# கனியாத காதல்...

பூமிக்கு வந்த புது நிலவே...
அன்று
வார்த்தைகள் வராமலே
பார்வைகளின் பரிமாற்றத்தில்
பௌர்ணமி ஒளியை
என்னுள் பரவச்செய்த- நீ

இன்று
அமாவாசை இருளுக்கு
அடிமனதை அடிமையாக்கி
இவனை இம்சிப்பதேன்.

வசந்த கால
வண்டாய்த் தானே- உனை
வட்டமிட்டேன்
வாழ்க்கைப் பயணத்திற்கு
வழிகாட்ட மறுப்பதேன்.

உயிரே- உன்
தரிசனத்துக்காகத்தான்
கரிசனமாக காதலோடு
காத்திருக்கிறேன்.

நீ முரண்டு பிடித்ததால்
வரண்டு போனது என்
இதயம் மட்டுமல்ல
எதிர்காலமும்தான்.

உன் ஒப்பனை பண்புகளும்
ஒப்பில்லா நடத்தைகளும்
என் காதலை காயப்படுத்தியது
உண்மைதான்.

தாரிகையே! தூய மானிடம்
தோல் பார்ப்பதில்லை
இமைகளின் ஸ்பரிஷத்தாலே
இணைந்து கொள்ளும்
இதயம்தான் பார்க்கின்றது

நீ மட்டும் ஏன்?
கல்யாணியில் நான்
கானமிசைக்கும் போதெல்லாம்
நீலாம்பரியால் நீண்ட
பேலியிட்டு நீங்கிப்போகிறாய்?

எஸ். மனோஹரன்,
ஸ்ரீபாத கல்விக் கலாசாலை.

# ஹைக்கூ

**மரணம்**
வாழ்க்கைப்
பயணத்தின்
நிரந்தர தரிப்பிடம்;

**உண்டியல்**
வாயிருந்தும் மௌனம்
சாதிக்கும்-ஒரு
அப்பாவி....

**துப்பாக்கி**
பல...
உயிர்களை
உறிஞ்சிக்குடித்து
சந்தோஷம் காணும்
அரக்கன்!

**மெழுகுவர்த்தி**
மற்றவர் நலனுக்காக
தன்-உடலை அழித்து
தியாகம் செய்யும்
மாவீரன்.

என்.எல். றூமியில், திலைவட்.

# இளைஞனே எழுந்திடு!

பிறந்ததற்காக வாழாதே
வாழத்தான் பிறந்ததாக
எண்ணு
எதிர்ப்புகளை எடுத்தெறி
தடைகளைத் தகர்த்தெறி
***
மனதில் புதைந்த
நினைவுகளால்
புழுங்கிச் சாவதைவிட்டு
புரட்சிக்குப் புத்துயிர்
அளிக்கப் புறப்படு
***
இழந்ததையே எண்ணியெண்ணி
இறந்துவிடாதே
இளமைக்கு எண்ணெய்
ஊற்றிப் பார் நீ
இழந்ததை உன் சந்ததி
பெற்றிடும்
***
இருண்டு கிடக்கும்
கனவுகளுக்கு
வெள்ளையடித்து நிஜமாக்கு
குட்டக் குட்டக் குனிந்திட்ட
நீ ஒருமுறை நிமிர்ந்து பார்
நினைவுகள் நிகழ்வுகளாகும்
***
போதையின் பாதையில்
புகைத்து புகைத்து
புதைந்து போன
உணர்ச்சிக்கு உயிர்
கொடுத்து உசுப்பிப் பார்
***
வன்முறை என்பதை
வஞ்சகர்களுக்கு எதிராக
இருக்கும்படி பார்த்துக் கொள்
ஆயுதம் என்பது
அட்டூழியத்தை அழிக்கும்படி
அமைத்துவிடு
***
சீரழிந்து சிதறிப் போன
எம் சமூகத்தைச் சிற்பியாய்
மாறிச் செதுக்கிவிடு புதிதாய்
கள்ளத்தனம் கொண்ட
கயவர்களுக்குச் சாவுமணியடித்துக்
கொள்ளியிடு
***
உலகத்தில் நிச்சயம்
உனக்கும் ஓரிடம்
உண்டென்பதை மறந்திடாதே
இன்றே தேடு நிச்சயம்
அது உனக்காகக் காத்திருக்கும்!

என். கோகிலா, பெல்மோரல்.

# தேன் கிண்ணம்

## சிரிப்பில் ஒரு நெருப்பு

அவனிடம்தான்
என்னை
அடகு வைத்தேன்!
கடைக்கண் பார்வைக்கும்
கண நேரப் புன்னகைக்கும்
அவனிடம்தான்
என்னை
அடகு வைத்தேன்!
ஏழாம் மாதமே
ஏலம் போட்டு விட்டானே!

அவனுடைய வீட்டில்
என் பெயர்
அடிபட வேண்டுமென்று
ஆசைப்பட்டேன்.
நானே
தெருவில் அடிபடும்படி
செய்து விட்டானே!

வீதியில் தடுமாறி
நடந்த போது கேட்டார்கள்
"எது உன்னை
இடறியது?"
எப்படிச் சொல்ல முடியும்...

எதிரே வந்த
ஒரு ஆணின்
புன்னகைதான் என்னைப்
புரட்டி விட்டதென்று!

தீக்குச்சிகளைத்
தேடிக் கொண்டிருக்காதீர்கள்
அவனிடம் கேளுங்கள்
சிரிப்பிலிருந்து
நெருப்பை உண்டாக்குவது
எப்படி என்று!


என் கல்லறைக்கு
வரும் போதாவது
அவனைப் பார்த்து
யாராவது கேளுங்கள்
அந்தப் புன்னகைக்கு
அர்த்தம் என்னவென்று!

வி.கே. சுந்தரி, தேமோதர


# பேனா நண்பர்கள்



பெயர்: என். சுதா
வயது: 22
முகவரி:
C/O ALTAF N.P.
LOHI FUSHI ISLAND RESORT,
MALDIVES.
பொழுது போக்கு:
பத்திரிகை, விளையாட்டு.



பெயர்:
எம்.கே.எம். சஜாத்
வயது: 26
முகவரி:
இல. 01,
கந்தசாமி கோயில் வீதி,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
அ. மோகன்
வயது: 21
முகவரி:
122/3, ஞான சூரிய
சதுக்கம், 2ம் குறுக்கு,
மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
வழமையானவை.

# நினைத்து, நினைத்து சிரிக்க

நம்ம மந்திரி ஒருவர் ராஜாங்க விஷயமாக அமெரிக்காவுக்குப் போயிருந்தார். சிவப்புக் கம்பள வரவேற்புக் கொடுத்து அசத்திய அமெரிக்க மந்திரி, அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனார். அந்த வீட்டைப் பார்த்ததும் நம்ம மந்திரிக்குப் பயங்கர ஆச்சரியம். "சாதாரண சம்பளம் வாங்கிக்கொண்டு இப்படியொரு வீட்டை உங்களால எப்படிக் கட்ட முடிஞ்சுது?" என்று வாய்விட்டே கேட்டும் விட்டார்.

கேள்விக்குப் பதில் சொல்லும் விதமாக, ஜன்னலருகே இவரை அழைத்துப் போன அமெரிக்க மந்திரி, "அதோ...அங்கே ஒரு ஆறு ஓடுகிறதே தெரிகிறதா?" என்று கேட்டார்.

"தெரிகிறது..."

"அதன் மீது இருக்கும் பாலம்...?"

"அதுவும் தெரிகிறது!"

"அந்த கான்ட்ராக்டில்தான் பத்து பர்ஸெண்ட் அடிச்சேன்!" என்று புன்னகைத்தார். அமெரிக்க மந்திரி.

சில நாட்கள் கழிந்தன. அந்த அமெரிக்க மந்திரி நம்ம நாட்டுக்கு ஒரு வேலையாக வர, நம்ம மந்திரியின் வீட்டுக்கு விஜயம் செய்தார். வீடா அது... மாளிகை. பிரமாண்டமான கட்டடங்கள், பூங்கா, ஏராளமான வேலையாட்கள் என்றிருந்த அந்தச் சூழலைப் பார்த்து ஆச்சரியத்தில் மயங்கியே விழுந்துவிட்டார்.

"எப்படி இவ்வளவு பெரிய மாளிகை கட்டினீங்க...?" என்று ஈனஸ்வரத்தில் கேட்ட அமெரிக்க மந்திரியை, அவரது ஸ்டைலிலேயே ஜன்னலருகே அழைத்துக் கொண்டு போன நம்ம மந்திரி, "அதோ...அங்கே ஆறு ஓடுவது தெரிகிறதா?"

"ஆமாம்! தெரிகிறது!"

"அதுக்குமேல இருக்கிற பாலம்?"

"பாலமா?" திகைத்துப் போன அமெரிக்க மந்திரி கண்களைக் கசக்கிக் கொண்டு மிரள மிரளப் பார்த்தார். "ஐயையோ... தெரியலையே!"

"தெரியாதுதான். அதிலதான் நான் நூறு 'பர்ஸெண்ட்' அடிச்சேன்!" என்றார் நம்ம மந்திரி.

ரஷ்யா செயலோடு இருந்த காலத்தில் அந்த நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் சதா மோதல். ஒரு தடவை இரண்டு நாடுகளும் நாய்ச் சண்டை வைத்து, யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்க்க முடிவ செய்தனர்.

ரஷ்யர்கள் நிறையப் பாடுபட்டு வீரத்துக்குப் போர் போன நாய்களாகத் தேர்ந்தெடுத்து இனவிருத்தி செய்து ஒரு பெரிய சண்டைக்கார நாயை உருவாக்கினார்கள். அதைக் கஷ்டப்பட்டுக் கூண்டில் அடைத்துக்கொண்டு வந்து, பந்தய மைதானத்தில் திறந்து விட்டார்கள். அங்கே அமெரிக்க நாய் சாதுவாக நின்று கொண்டிருந்தது. ரயில் மாதிரி நீளமான 'டாபர் மென்' நாய் என்பது தவிர வேறு விசேஷம் இல்லாத பிராணி அது.

மணி அடித்ததும் இரண்டு நாய்களும் முன்னேறி ஒன்றை ஒன்று நெருங்க ரஷ்யர்கள் நிச்சயமான வெற்றியை எதிர்பார்த்துச் சந்தோஷமாகக் காத்திருக்க... அமெரிக்க நாய் வாயைத் திறக்கிறது. அடுத்த விநாடி ரஷ்ய நாயை 'லபக்' என்று விழுங்கி விடுகிறது. போட்டி ஓவர்.

வெறுத்துப் போன ரஷ்யர்கள், அமெரிக்கர்களிடம், "வெற்றியின் ரகசியம் என்ன?" எனக் கேட்டார்கள்.

அமெரிக்கர்கள், "ரொம்ப சிம்பிள்... நாங்க நாய் வளர்ப்பு எல்லாம் பண்ணலே... ஆனா, 'பிளாஸ்டிக் சேர்ஜரி' செய்து முதலையை நாயாக்கிட்டோம்... அவ்வளவுதான்!".

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

*இந்தியாவின் பிரபல அணு ஆயுத விஞ்ஞானி அப்துல் கலாம் அறிவியலையும் தாண்டி மனிதத்தின் மீது மகத்தான காதல் கொண்டவர் என்பதை எடுத்தியம்பும் கவிதை இது. மதங்களின் பெயரால் அண்மையில் கிழக்கில் மூண்ட கலவரத்தினைப் பொருத்திப் பார்த்து, குமுதம் சஞ்சிகையிலிருந்து இக்கவிதை நன்றியுடன் பிரசுரமாகிறது.*

## குளம்

கலங்காத தண்ணீரில் கல்விழ
குளத்தின் தொப்புள் தெரிந்தது
குளத்தைச் சுற்றி
கொசுக்களின் கும்மி
எருமைகள்
குளித்துக் கரையேறின
இப்பொழுது
தாமரைகள் அழுக்கு
தாமரை இலையில்
தண்ணீர் மொட்டு
குளத்துக்கு வரும்மேகங்கள்
குளத்தில் தெரிந்தன.
தண்ணீரின் ஓரம்
காத்திருந்தது
தவளையைக் கொத்தும் கொக்கு
வெங்காயத் தாமரைகள்
நெரிசலில்
வெள்ளைத் தாமரை
நேற்றைய குளம் இவை
மீன்கள் செத்துவிட்ட குளம்
கருவாடாய்க் கிடந்தது இன்று
குளத்தில் கிணறு
குளத்துக்குள் குளம்
தண்ணீர் மொள்ளுகையில்
வாளியில் நிறையும் நீர்
குளத்துக்குள்
குளத்துக்குள்
குளம்.

-கபிலன்.



## வசிக்கும் ஒற்றையறை

நான் கருத்தரித்தது
அப்பா வராத இரவுகளில்
அம்மா விசும்பிக் கிடந்தது
அக்காவுக்கு வயசுக்கு வந்தது
அம்மா செத்துக் கிடந்தது
இப்படி
எல்லா முக்கியமானவைகளும்
நடந்தேறியது
இவ்வீட்டின்
ஒற்றையறையில்தான்
எல்லா முக்கியமற்றதுங்கூட...
கால் நூற்றாண்டுக்கு முன்

## சிறப்புக் கவிதை

செம்மண் குழைத்து
எழுப்பப்பட்ட
இதன் ஈரங்கசியும்
பக்கச் சுவர்கள் விழுந்து
நசுக்கும் கனவு தவிர்க்க
விழித்திருக்கும் இவ்விரவின் மீது
ஊர்கின்றன
பெயர் தெரியாப் பூச்சிகள்.

தானியங் காக்க வளரும் பூனை
பால் திருடிக் குடித்த களைப்பில்
கயிலிக்குள் சுருண்டிருக்க

மோட்டு வளையிலிருந்து
மார்பில் விழுந்து பிறந்த
எலிக்குஞ்சொன்று
ரத்தப் பிசுக்கோடு
துடித்தது முன்பு.

-செல்மா பிரியதர்ஸன்.

## கொல்லனும் உலைக்களமும்...

'அருவா அடிக்கக் குடுத்திருக்கு
வாங்கியாடா
கையோட'
என்றார் அப்பா.

உலைக்களத்தில்
ஊதுகுழல் நெருப்பில்
கரியைக் கொட்டியபடி
கொல்லன் சொன்னான்
'உன் அருவாதான்
வேலையாகுது
சித்த உக்காந்து
ஊதடா துருத்தி' என்று.

கையசர
துருத்தி இழுத்தேன்.
மரப்பிடிக்குள்
அரிவாள் காம்பு
துளைத்திறங்கி
அமர்ந்த வேளை
மனம் குதித்தது.
'இன்னைக்கே ஒரு இளநி
சீவிக் குடிக்கணும்.'

'இந்தாய்யா
எடுத்துட்டுப் போ'
அரிவாளை
இன்னொருவனிடம்
ஒப்படைத்த கையோடு
'அடிச்சித் தர்றேன்னு
ங்கொப்பாகிட்டே சொல்லுடா போ.'
கூற்று மாறினான் கொல்லன்.

சோர்ந்து நடந்தேன்
நான்.
கொல்லனைத்
தனி உலை பொங்க வைத்து
நெடுநாள் முன்
வேறு பாதை சென்றனர்
அவன் மனைவி மக்கள்.

பாவம் அவன்தான்
என் செய்வான்?
தானே சமைத்துண்டு
தனித்துறங்கி
வாழ்வெனும்
உலைக் களத்தில்
நாளும் படுகிறான்
சம்மட்டி அடி.

வேறொருவன்
வரக்கூடும்
என் அரிவாளுக்குத்
துருத்தியூத
யார் வருவார் கொல்லனுக்கு
நிரந்தரமாய்த் துருத்தி ஊத?

-த. சித்தார்த்தன்.

# வலியில்லாத பிரசவம்



**வ**லியில்லாத பிரசவம் மேலை நாடுகளில் மிகவும் பிரபல்யமான விவகாரம். தற்போது இது ஆசியாவைக் கடந்து தெற்காசியாவுக்குள் நுழைந்து சென்னை வரை வந்து விட்டது. வலியில்லாத பிரசவம் என்றால் என்ன அதன் சாதகத் தன்மை என்ன என்பதை விளக்குகிறார் தமிழக மருத்துவ நிபுணர் ஒருவர்.

கர்பிணித் தாய்மார்களுக்குக் கருப்பை சுருங்கி விரியும் போது அதனுடைய வாய்ப் பக்கம் லேசாகத் திறக்கும். அதன் வழியாகக் குழந்தை வெளியே வரும்போதும், கருப்பை சுருங்கும் போதும், இடுப்பிலும் அடி வயிற்றிலும் மகப்பேற்றுத் தாய்மார் களுக்குப் பலத்த வலி ஏற்படுகிறது.

இந்த வலி முதல் கட்டமாக நாலு மணி நேரமும் இரண்டாம் கட்டமாக இரண்டு மணி நேரமும் இருக்கும். இந்த வலியினால் தாயின் மனநிலையிலிருந்து உடல் உறுப்புகள் வரை பாதிப்பு ஏற்படும்.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதுதான் வலியில்லாத பிரசவ முறை. பொதுவாகப் பிரசவத் தாய்க்குப் பிரசவத்தின் போது பெத்தடின் அல்லது ஒவராண் ஊசியைப் போட்டுப் பிரசவம் பார்ப்போம். அப்படிப் பார்க்கும் போது கூட தாய்மார்களுக்கு வலி நீங்குவதில்லை.

இந்த ஏபிடியூரல் முறையில் சுத்தமாக வலியிருக்காது. ஏபிடியூரல் ஊசியை சின்ன நூல் போன்ற குழாயில் இணைத்துக் கர்ப்பிணித் தாயின் முதுகுத் தண்டில் கட்டி விடுவோம். அது தண்டுவடத்தின் உணர்வு நரம்புகளைச் செயலிழக்கச் செய்யும் போது பிரசவத்தில் வலி உணரப்படுவதில்லை.

இந்த முறை மேலை நாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் நடைமுறையிலிருக்கிறது. ஆனால் இந்த வலியில்லாத பிரசவ முறை தெற்காசியாவில் இன்னும் வளரவில்லை.

இது போன்ற முறை வளர்வது மிகவும் அவசியமான ஒன்று. குறிப்பாக கிராமப்புறங்களில் படிப்பறிவில்லாத பாமர மக்கள் பிரசவத்தின் போது பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அருகில் மருத்துவமனையில்லாமை, சுயமருத்துவம், தக்க மருத்துவ வசதி கிடைக்காமை போன்ற நிலைகள் இன்னும் காண முடிகிறது. இதனால் குழந்தைகளுக்கு மட்டும் பாதிப்பு இல்லை. தாய்மார்களுக்கும் ஆபத்து வந்து விடுகிறது.

இந்த வலியில்லாத பிரசவ முறை மூலம் இத்தகைய ஆபத்துக்களைத் தவிர்க்கலாம். சாதாரண பிரசவத்திற்கு ஏற்படும் செலவை விடச் சற்று அதிகமாகவே தனியார் மருத்துவ மனைகளில் இத்தகைய பிரசவத்திற்கு அறவிடப்படுகிறது.


## செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

**SELVAS**

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** Ac

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................

**உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 03- 08-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்? யடவத்தை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம்.எப்.எப். நஸ்பியா
82/1, நிகவொல்லை, யடவத்தை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# அனிதாவின் காதல்கள் 55

## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

**அ**னிதா, சீதாவை நேரில் பார்த்து, அவன் இரு தோள்களிலும் தன் இரண்டு கைகளையும் வைத்து, அவன் கன்னத்தில் வழிந்த கண்ணீரை முத்தத்தால் அழித்தாள்.

"இப்பவே முத்தம் கொடுத்துக்க வேண்டாம். எல்லாம் கல்யாணம் ஆகட்டும்" என்றாள் அங்கே வந்த சுகந்தி.

"சீதா.. உன் உதவி எனக்குத் தேவை சீதா."

"சரி... இப்ப அவாகிட்ட போய் சொல்லிட்டு வந்துர்றேன்."

"நானும் வரேன் சீதா.... இந்தத் தீர்மானத்துக்கு நான்தான் காரணம்" என்றாள் அனிதா.

சீதா தன் பையிலிருந்து தாலி கோர்த்த தங்கச்சங்கிலியை எடுத்துப் பார்த்தான்." இது எதுக்கு இனிமே?" என்றான். அந்த தொழுநோய்க்காரனின் தகரக்குவளையில் அதை எடுத்துப் போட்ட போதுதான் சீதாவின் கோபம் புலப்பட்டது.

சீதாவும் அனிதாவும் சந்நிதிப் பக்கம் அணுக எல்லோரும் உற்சாகமாகக் கை பண்ணணும்..."

"புரியுது. ஒட்டல் ஸ்ரீலதா இன்டர் நேஷனல்ல கேட்டா தெரியும்"- மது சொன்னாள்.

" எனக்கு எதுவுமே புரியலையே..." என்றாள் கமலம்.

"எனக்கு நன்னா புரியறது! உம் பொண்ணு சீதாவை வேண்டாம் னுட்டா..."-மகாதேவன் சொன்னார்.

"அப்ப சுரேஷா இப்ப?"

"பழைய குருடி கதவைத் திறடின்னுட்டு, திரும்ப வைரவன்கிட்டயே போகப்போறாளாம்..."

"கொண்டு வந்த பொங்கலையாவது திங்கலாம் வா..." என்றார் ராஜாராமன்." உன் தங்கையைப் போல ஒர் ஒண்ணாம் நம்பர் பச்சோந்தியை நான் பார்த்த தில்லை. இப்ப ஜில்பாய்குரி வராளா... அதும் இல்லையா?"- சுகந்தியிடம் கேட்டார்.

அனைவரும் வேனில் ஏமாற்றத்துடன் திரும்ப, அனிதா மதுவுடன் மாருதியில் முன் ஸீட்டில் உட்கார்ந்தாள்.

"எனக்குக் கொஞ்சம் மூடு சரியா இல்லை... கொஞ்ச நேரம் கழிச்சு களும் பூட்டியிருந்தன.

சாந்தோம் வீட்டின் வாசலில் போலீஸ் காவல் இருந்தது.

"அவரை எங்க வெச்சிருப்பாங்க" என்றாள் அனிதா.

"யாருக்குத் தெரியும்? மெட்ராஸ்ல இருக்காரோ... இல்லை இடம் மாத்திட்டாங்களோ...எப்படிக் கண்டு பிடிக்கிறது?" என்ற மது, "இப்ப உன்னோட எண்ணம் என்ன?" என்றாள்.

"முதல்ல வைரவனைப் பார்க்கணும். பார்த்து அவருக்கு ஆதரவா நான் இருக்கேன்னு சொல்லணும்..."

"இப்ப ரொம்ப ரொம்ப லேட் அனி!"

"ஏன்?"

"அந்தாளை கடவுளாலகூட காப்பாத்த முடியாதுங்கறாங்க."

"அவர் எங்கேன்னுகூட சொல்ல மாட்டாங்களா?"

"ஒரு நிமிஷம் பொறு... நான் வைரவன் கம்பெனி கார்ப்பரேட்ல வொர்க் பண்றப்ப அவருடைய வக்கீலை அடிக்கடி போன்ல கூப்பிடுவேன். அவர் பேர் முத்துகாளத்தி! ஹைகோர்ட்ல கூட அவருக்கு சேம்பர்

தட்டினார்கள்.

"மாப்பிள்ளையும் பொண்ணும் வரா... பராக் பராக்... சீதா கல்யாண வைபோகமே! அனிதா கல்யாணம் வைபோகமே."

"இப்ப பாடக் கூடாதும்மா அதை"- அனிதா சொன்னாள்.

"அக்கா... கல்யாணம் கான்சல்... வாங்கோ போகலாம்" என்றான் சீதா.

"என்னது?!"மகாதேவன் அதிர்ச்சியானார்.

"என்னடீது அனிதா... சண்டை போட்டுட்டேளா?"- கமலம் பதற, "சீதா கூட சண்டையாவது.... என்னம்மா!

அம்மா... நான்தான் கல்யாணம் வேணாம்னுட்டேன்"- அனிதா நிதானமாகச் சொல்ல,

"என்ன இப்படி ஒரு ஸ்திரபுத்தியில்லாம இருக்கியே? உன்னை அப்படியே கன்னம் கன்னமா இழைக்கணும் போல வரது. ஏன்... கல்யாணத்தை நிறுத்தும்படி இப்ப என்ன காரணம்?"

"சீதாராமன்... ஆசமனம் பண்ணிட்டு சங்கல்ப்பம் பண்ணிண்டு வாரும்"- அர்ச்சகர் சொன்னார்.

"பட்டாச்சாரியாரே... அதையும் நீரே பண்ணிக்கும்! இந்தக் கல்யாணம் இன்னிக்கு நடக்காது" என்றார் மகாதேவன்.

"அது என்னிக்குமே நடக்காது... ஸாரி மாமா... உங்களுக்குக் கொஞ்சம் சிரமம் கொடுத்துட்டோம்"- சீதா சொன்னான்.

"அதனாலென்ன? பரவாயில்லை. அடுத்த பார்ட்டியை வரவழைச்சுரலாமா? ஒரு வேளை உங்களுக்கு மனசு மாறினா அடுத்த வெள்ளிக்கிழமை ஒரு முகூர்த்தம் வரது- கொடுத்த அட்வான்ஸை அப்படியே வெச்சிண்டு இருக்கேன்...." என்றார், இம்மாதிரி எதிர்பாராத திருப்பங்களுக்கெல்லாம் அவர் பழக்கப்பட்டவர் போல!

மது, அனிதாவிடம் வந்து "என்ன அனிதா... என்ன ஆச்சு இப்ப? மன உறுதியை இல்லாம இருக்கியே!"

"மது ...அவளைத் திட்டாதே அவள் தீர்மானம் சரியானது தான்" என்றான் சீதா.

"என்ன தீர்மானம்?"

"பாங்க் ரசீது, ஃபார்வர்டு ட்ரேடிங்" எல்லாம் படிக்கப் போறா அனிதா!

"மது... வைரவன் இப்ப எங்க இருக்கார்னு தெரியுமா உனக்கு?"- சீதா கேட்டான்.

"ஏன்?"

"அவரை அனிதா பார்க்க ஏற்பாடு



வரேன் தப்பா நெனைச்சுக்காதீங்கோ...நாம மத்தியானம சந்திக்கலாம். அனிதா... நீ ஏதோ பாங்க் ரசீதைப் பத்திக் கேட்டியே... அதையெல்லாம் விவரமா சொல்றேன்" என்றான் சீதா.

"சரி சீதா" என்றாள் அனிதா அவள் கையைப் பற்றி

சீதாவை கார் கண்ணாடி மூலம் பார்த்து, "பாவம் சீதா! இல்லை?" என்ற மது , "இப்படியும் ஒர் ஆசாமி இருப்பாரான்னு நம்பவே முடியலை..." என்றாள்.

அனிதாவும் மதுவும் காரில் முதலில் ஸ்ரீலதா இன்டர் நேஷனல் ஒட்டலுக்குச் சென்ற போது, "ஒட்டல் புதுப்பிக்கப்படு வதால் மூடப்பட்டுள்ளது" என்று போர்டு போட்டிருந்தது. அங்கிருந்து வைரவனின் ஒவ்வொரு கம்பெனியாக, ஆபிஸாகப் போய்ப் பார்த்தார்கள். வி.வி.எல். இன்டஸ்ட்ரீஸ், வைரவன் கிரானைட்ஸ், அனிதா சின்தடிக்ஸின் புது ஆபிஸ், ஸ்பென்ஸரில் இருந்த ஐஸ்கிறீம் பார்லர், "யு நேம் இட்" கிட்ஃபண்ட் என்று எல்லா அலுவலகங்

இருக்கும்னு நினைக்கிறேன். அவரைப் போய்ப் பார்க்கலாமா?"- மது கேட்க, "போகலாம்" என்றாள் அனிதா.

அண்ணாமலை மன்றத்தின் முன்னால் குழப்பமான போக்குவரத்து சிக்கலிலிருந்து தப்பித்து, வள்ளுவர் பஸ்களின் மொய்த்த பாதையைக் கடந்து கோர்ட்டின் பக்க வாசலில் நுழைந்து மரத்தடியில் காரை நிறுத்தினார்கள்.

தாங்கள் தேடிப்போன வக்கீல் முத்துக்காளத்தி அவருடைய சேம்பரில் இல்லாததால், சற்றே ஏமாற்றத்துடன் அனிதாவும் மதுவும் திரும்பி வந்தபோது, வீடு களையிழந்து இருந்தது. ஒருத்தரும் அனிதாவுடன் பேசவில்லை. மகாதேவன் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு வேகமாக விசிறிக்கொண்டிருக்க, ராஜாராமன் "ரெண்டு டிக்கெட் வேஸ்ட்டு" என்ற பயணத்துக்கான படுக்கையைக் கட்டிக் கொண்டிருந்தார். மூணு வயசு சீனு கூட அனிதாவை முறைத்துப் பார்த்தது.


அனிதா மாடி அறைக்குச் செல்லும் போது, சுதாவைப் பார்த்தாள். "சுதா.... நீ எப்ப வந்தே?"

"அவசர அவசரமா உன் கல்யாணத்துக்கு ப்ளேனைப் புடிச்சுண்டு வந்தேன். அவர் வேண்டாம், வேண்டாம்னார். இப்ப ஊருக்குத் திரும்பிப் போன உடனே இருக்கு டோஸ்! அவசரமான கடன் வாங்கி ப்ளேன் டிக்கெட்டுக்கு பணம் கொடுத்தார்..."

[அனிதா வருவாள்...]



பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா!
சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# ஆடியும் மாசியும்

முன்னொரு காலத்தில் சிவகவி என்றொரு மகான் இருந்தார். அவரிடம் இரண்டு மாணவர்கள் கல்வி பயின்றனர். அவர்களில் ஒருவன் பெயர் மாசி. மற்றொருவன் பெயர் ஆடி.

மாசியும், ஆடியும் நண்பர்கள். ஆனால், நேர் எதிர் குணம் கொண்டவர்கள்.

மாசி சற்று பொறாமைக் குணம் கொண்டவன். தனக்கு நற்பெயர் கிடைக்க வேண்டுமென்பதற்காக அடுத்தவரைப் பற்றிப் புறங்கூறுவது அவனுக்கு மிகவும் பிடிக்கும். பிறர் மத்தியில் தன்னை எப்பொழுதுமே உயர்ந்தவனாகக் காட்டிக் கொள்வான். அதில் அவனுக்குப் பேரானந்தம்.

ஆனால், ஆடி அப்படிப்பட்டவன் அல்ல. அவன் மனதில் எந்தப் பொறாமைக் குணமும் கிடையாது. தனக்கு நற்பெயர் வேண்டுமென்று அவன் ஒரு நாளும் நினைத்தது கிடையாது. பிறரைப் பற்றிக் குறை கூறுவது, பிறர் மத்தியில் தன்னை உயர்த்திக் காட்டிக் கொள்வது போன்ற எந்தத் தீய குணங்களும் அவனிடம் கிடையாது. நன்றாகப் படிப்பான். எந்த வேலையையும் முகம் சுளிக்காமல் செய்வான். அனைவருக்கும் மரியாதை கொடுத்து இன்முகத்துடன் பழகுவான். எப்பொழுதும் இயல்புடனேயே இருப்பான்.

எப்படியோ இரு வேறு குணங்கள்



கொண்ட இவர்கள் இருவரும் நண்பர்களாக இருந்தனர்.

ஒரு தினத்தில் இருவருக்கும் திடீரென்று கருத்து வேற்றுமை ஏற்பட, மாசி அதை மிகவும் பெரிதுபடுத்தி, ஆடியுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டான்.

ஒரு நாள்

விடிந்தது கூடத் தெரியாமல் மிகவும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் ஆடி.

ஆனால், மாசி, அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து, மிகவும் சுறுசுறுப்புடன் காலைக் கடன்கள் அத்தனையையும் முடித்துவிட்டான். இறை வணக்கத்தையும் முடித்திருந்தான்.

அவை அனைத்தையும் முடிக்க வேண்டிய ஆடி, உறக்கம் ஒன்றையே சுகமானதாக எண்ணி உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், மாசிக்கு ஒரு பழி வாங்கும் உணர்வு ஏற்பட்டது.

உடனே அவன் மகான் சிவகவியிடம் சென்றான். "குருவே! காலை வணக்கம்!" என்றான்.

"உனக்கும் எனது காலை வணக்கம்!" என்றர் சிவகவி.

"ஐயா! என்னைப் பார்த்தீர்களா! அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து, குளிரைப் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரால் நீராடி, பூஜை அனைத்தையும் முடித்துவிட்டு வந்திருக்கிறேன்!"

"நல்லது மாசி!"

"ஆனால், ஆடி இன்னும் இழுத்துப் போர்த்தியபடி நித்திரையில் இருக்கிறான். சரியான தூங்கு முஞ்சி. சரியான சோம்பேறி. அவனால் என்ன செய்ய முடியும்?"

"இதைச் சொல்வதற்குத்தான் என்னிடம் வந்தாயா?"

"ஆம் ஐயா!"

"இதைச் சொல்வதற்கு பதில் நீ ஒன்றைச் செய்திருக்கலாம்!"

"என்ன?"

"நீயும் ஆடியைப் போல இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கியிருக்கலாம்!"

"ஐயா!" என்று சொல்லி திடுக்கிட்டான் மாசி.

"ஆமாம்! நீ அவனைப் பற்றிக் குறை கூறியதன் மூலம் நீ இன்று செய்த நற்செயல்கள் அனைத்தும் அடிபட்டுப் போய்விட்டது. இந்த இழப்பிற்கு, நீ அவனைப் போல தூங்கியே இருக்கலாம். சுகத்திற்கு சுகம். ஓய்வுக்கு ஓய்வு. உள்ளமும் பொறாமை என்ற அழுக்காகி இருக்காது. இப்போது நான்கு மணிக்கு எழுந்து குளித்த நீ தூய்மையானவன் அல்ல. உள்ளத் தூய்மையோடு உறங்கிக் கொண்டிருக்கிறானே ஆடி... அவன்தான் தூய்மையானவன். நல்லொழுக்கம் நிறைந்தவன்!" என்றார் சிவகவி.

மாசி அப்படியே அசைவற்று நின்றான்.

மகான் சிவகவியின் சொற்கள் ஈட்டி முனைகளாக அவனைத் துளைத்திருந்தன.

ஒவ்வொரு சொல்லுமே நெற்றியடி. உள்ளத் தூய்மையைக் கற்றுக் கொண்ட மாசி. அந்த வினாடியே ஆடியின் மேல் கொண்ட பகை உணர்ச்சியை விட்டொழித்தான். ●

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **28.07.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **455**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 452

பரிசுக்குரியவர்:
**எஸ்.கே. ருஸ்னி குறைஸ்,**
சன்ஜீதாவத்த, நுரைச்சோலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **யோ. பிருதிவிகா,** சைவ மங்கையர் வித்தியாலயம்,வெள்ளவத்தை. | **எம். எச். எம். ச.ப்வான்,** வெலகெதர வீதி, பதுளை. |
| **எம். ஹாஷிப் இலாஹி,** ஹமிட்ஹல் ஹூசேனி தே. கல்லூரி, கொழும்பு-12. | **தே. துஷாந்த்,** தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,திருகோணமலை. |
| **டெனிஷ்,** கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு-15. | **ஜயதீப் விஜயகுமாரன்,** கொ/ புளூமெண்டால்.த.வி., கொழும்பு-14. |
| **முஹம்மத் றபீத் நளீம்,** முதலாவது ஒழுங்கை, ஸ்பீல் வீதி, புத்தளம். | **டி. நிவேதிகா,** உயர்தரப் பாடசாலை, ஹட்டன். |
| **எஸ். ஹரிகேஷன்** விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு-13. | **அ. கார்த்திகா,** பனங்கட்டுக் கொட்டு கிழக்கு, மன்னார். |

## விடுகதைகளும் விடைகளும்


1. நீ போகும் இடமெல்லாம் நானும் வருவேன். ஆனால், சில நேரம் தெரிவேன் சில நேரம் மறைவேன் நான் யார்?
2. உயிரில்லாதவன் பறப்பான் விமானம் அல்ல? அவன் யார்?
3. காட்டுக்குள் குப்பை வீட்டுக்குள் சுத்தம் அது என்ன?
4. வம்புச் சண்டைக்கும் சரி அன்பு பாசத்திலும் சரி வாசலைத் தாண்டாமலே அத்தனையும் செய்வான் அவன் யார்?
5. வாசமில்லா பூ வாடாத பூ அது என்ன?
6. விளக்கை சுமந்தவன் வெளிச்சமாய் பறப்பான் அவன் யார்?
7. ஓங்கி வளர்ந்தவன் ஒரு பிள்ளை பெற்றாள் அவள் யார்?
8. காற்றுக்குள் நுழைந்தவன் கானம் பாடுகிறான் அவன் யார்?
9. பார்த்தால் கல் கரைந்தால் நீர் அது என்ன?
10. இரட்டைக் குழல் துப்பாக்கி சேதமில்லாமல் வெடிக்குது அது என்ன?

**விடைகள்**

1. நிழல் 2. புகை 3. பூந்துடைப்பம் 4. நாக்கு 5.சேவல் 'பூ' 6. மின்மினிப் பூச்சி 7. வாழை 8. மூங்கில் 9. பனிக்கட்டி 10. மூக்கு - தும்மல்

## பனி முட்டை

அமெரிக்காவில் உள்ளயெல்லோஸ்டோன் பூங்காவில் 200 வகையான வெந்நீர் ஊற்றுகள் இருக்கின்றன. இதில் மிகவும் புகழ் பெற்ற வெந்நீர் ஊற்று 'ஒல்ட் பெய்த்புல்' என்பதாகும்.



இந்த ஊற்று 50 முதல் 90 நிமிடத்திற்கு ஒரு முறை 150 அடி உயரம் வரை உயரே எழும்பி வெந்நீரைப் பீய்ச்சி அடிக்கிறது. கடந்த 80 வருடங்களில் இந்த வெந்நீர் ஊற்று ஒரு முறை கூட வெந்நீரைப் பீய்ச்சியடிக்கத் தவறியதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க அம்சம்.

யெல்லாஸ்டோன் பூங்கா குளிர்காலத்தில் வித்தியாசமாகக் காட்சியளிக்கிறது.

கடுமையான பனி பெய்யும் போது பூங்காவில் உள்ள சிறு சிறு உருண்டைப் பாறைகளில் பனி மூடிக் கிடக்கும். அப்போது வெந்நீர் ஊற்றில் இருந்து விழும் வெந்நீர் இதன் மீது விழ உருகி விடுகிறது. அதே நேரம் கடின பனிப் பொழிவு இருக்கும்போது பனிக்கட்டிகளாக அப்படியே உறைந்து கிடக்கின்றன.

இந்த உருண்டைப் பாறைகள் முட்டை போல காட்சியளிக்கும். இதனால் இவற்றைப் பனி முட்டைகள் என்று அழைக்கின்றனர். பனிக் காளான்கள் என்ற பெயரும் இதற்கு உண்டு.

## முத்து எப்படி உண்டாகிறது?

முத்துச் சிப்பியின் உட்புற ஓட்டுக்கும் ஓட்டின் பக்கத்தில் உள்ள சவ்வுக்கும் இடையில் மணல் போன்ற ஏதுப் பொருள் நுழைந்து உறுத்திச் சிப்பிக்கு வேதனை கொடுக்கின்றது. அப்பொழுது சிப்பி, ஓட்டின் உட்புறத்தில் இருப்பது போன்ற வெள்ளி நிறமுடைய பசையினால் மணலை மூடுகின்றது. இவ்வாறு முத்து உண்டாகின்றது. ஏறக்குறைய ஆயிரம் சிப்பிகளை அறுத்தால் ஒன்றில் முத்துக் கிடைக்கும். இலங்கை பாரசீகக்குடா, ஜப்பான், வடகிழக்கு போர்ணியோ, கலிபோர்ணியாக்கரைகள், மெக்சிக்கோ குடாக்கடல் என்னுமிடங்களில் முத்துக் குளித்தல் நடைபெறுகின்றது. மிகப் பழைய காலம் முதல் ஆபரணங்கள் செய்வதற்கு முத்துப் பயன்படுத்தப்படுகின்றது. தவேனியர் என்னும் பிரான்சிய வணிகன் ஒருவன் (1630-1669) பாரசீக அரசனுக்கு ஒரு முத்தை 180,000 பவுனுக்கு விற்றான். சங்கில் சிவப்பு முத்து உண்டாகின்றது. இப்பொழுது சிப்பிகளை வளர்த்து, உறுத்தக் கூடிய வகையான மணலை உள்ளே செலுத்தி முத்து விளைவிக்கப்படுகின்றது. வெள்ளி நிறமுடைய முத்து, கறுப்பு நிறமுடைய முத்து என்னும் இருவகை முத்துக்களை உண்டாக்கும் இருவகைச் சிப்பி இனங்களுண்டு. முத்துச் சிப்பிகளின் ஓடுகளில் இருந்து பொத்தான்கள், பேனாக் கத்திப் பிடிகள் முதலியன செய்யப்படுகின்றன.

கார்த்திகா கந்தசாமி சர்மா
தரம்- 10
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## இந்த வாரப் புதிர்

வெற்று வட்டங்களுள் வரவேண்டிய எண்கள் என்னேன்ன?




## அறிவுத்தேடல்

**சென்றவாரப் புதிருக்கான விடை:**

2x3= 6,
4x2 = 8,
2x8=16,
3x6=18

என்றவாறு மூலை விட்ட எண்கள் பெருக்கப்பட்டு மறு சதுரத்தினுள் இடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2 | 4 |
| 2 | 3 |
| 6 | 8 |
| 16 | 18 |
| 108 | 128 |

# விடிவு...

டொக்... டொக்... கதவு தட்டும் சத்தம் கேட்டுச் சில விநாடிகளில் கதவு திறக்கப்பட்டது.

"அம்மா! கர்ணா இருக் கானா?"

"ஆமாப்பா! ஏதோ வேலைக்கு ஆள் கேட்டு இருக்காங்களாம். பேப்பர்ல விளம்பரம் வந்திருக்கு. அதுக்கு 'அப்ளிகேஷன்' நிரப்பிக்கிட்டு இருக்கான். வாப்பா உள்ள..." என்று கர்ணாவின் தாயார் பார்வதியம்மாள் குமாரை வீட்டுக்குள் கூட்டிச் சென்றாள். குமாரைக் கண்ட கர்ணா,

"வாடா குமார்! ஒரு கிழமையா இந்தப் பக்கமே வரல...".

"கர்ணா! நான் வேலை விஷயமா ஒரு முக்கியமான வி.ஐ.பி.யைக் கண்டுக்கப் போயிருந்தேன். அதான் வரல. சரி உன்னுடைய அந்தப் பிரச்சனை என்ன நிலைமையில இருக்கு?"

"அதை ஏன்டா கேட்குற? அப்பாவும் அம்மாவும் என் மேல சரியாகக் கோபப்பட்டுட்டாங்க. அம்மா சரி, ஒன்றும் சொல்லுறதில்லை. ஆனால் இந்த அப்பா இருக்காரே, தொட்டதுக்கெல்லாம் இதே கதைதான். வீட்டுல இருக்கவே எரிச்சலா இருக்கு".

"ஏய் கர்ணா! நீ கவலையே படாதே. அந்த எரிச்சலுக்கெல்லாம் இப்ப நான் ஒரு மருந்து கொண்டு வந்திருக்கேன்".

"என்னடா சொல்லுறே?"

"ஆமாடா. இந்தா, விமலா உங்கிட்டே இந்த லெட்டரைக் குடுக்கச் சொன்னா. இதுல எழுதி இருக்கிற எல்லா விஷயத்தையும் நீ நம்பித்தான் ஆகணும். அதோட இதன்படி நடந்தா உனக்கும் விமலாவுக்கும் நல்ல எதிர்காலம் இருக்குது. நான் நம்புறேன்."

"ஏன்டா இதுக்கு முன்னமே இந்த லெட்டரைப் படிச்சிட்டியா?"

"ச்சே! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. இந்த விஷயத்த விமலா உன்கிட்ட சொல்லச் சொன்னா" என்று கூறியவன், அந்த லெட்டரைக் கர்ணாவிடம் கொடுத்தான்.



அவன் அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

**"அன்பின் கர்ணாவிற்கு!**

விமலா எழுதும் மடல். நான் நலம்! உங்கள் நலமறிய என்றும் ஆவல்! என்னை நீங்கள் மறந்திருப்பீர்கள் என நம்புகிறேன். ஆனால், நான் மறக்கவில்லை. நீங்கள் வாணியை உயிருக்குயிராய் காதலித்தீர்கள். ஆனால், அதற்கு முன்பே உங்களை என் மனதில் நினைத்திருந்தேன். சந்தர்ப்ப சூழ்நிலையால் வாணி உங்களிடம் சம்மதம் கேட்க நீங்கள் அவளைக் காதலிக்க ஆரம்பித்தீர்கள். ஆனால், நீங்கள் இருவரும் வெறும் நண்பர்களாகத்தான் பழகுறீர்கள் என நினைத்து, நான் என்னுடைய காதலை உங்களிடம் சொல்வதற்காகக் காத்திருந்தேன். அந்த நாளும் வரவே உங்களிடம் என் விருப்பத்தை நேரடியாகச் சொன்னேன். ஆனால், வாணி முந்தி விட்டதாகவும், அவளை நீங்கள் காதலிப்பதாகவும் சொன்னீர்கள். அன்று என் மனதிற்கு வேதனையாக இருந்தது. அது மட்டுமல்ல, என் வாழ்க்கையில் நான் கண்ட முதல் அனுபவமே தோல்வியடைந்ததை எண்ணி மனம் வருந்தினேன். மறுகிழமையே பாடசாலை மாறிப் போனதற்கு இதுதான் காரணம். அங்கு சென்றும் கூட உங்கள் நினைவு என்னை விட்டு நீங்கவில்லை. காரணம் நான் முதல் முதல் உங்களை என் மனதில் நினைத்ததே ஆகும். இப்பொழுது நான் ஒரு கம்பெனியில் 'டைப்பிஸ்ட்' ஆகத் தொழில் புரிகின்றேன். முதன்முதலில் நான் 'டைப்' செய்தது. உங்களது பெயரைத்தான் கர்ணா... எல்லோரும் ஒரு காரியத்தைத் தொடங்கும் முன்னர் பிள்ளையார் சுழி போட்டுத்தான் தொடங்குவார்கள். ஆனால், நான் அதற்குப் பதிலாக உங்களது பெயரைத்தான் முதன்மையாக இடுகின்றேன். உங்கள் உயிர்க் காதலி வாணி பரீட்சை முடிந்ததும் வேறு ஒருவனைக் காதலிக்கிறாள் என்று நீங்கள் கேள்விப்பட்டு அவள் வீட்டோடை சண்டைக்குப் போய் பொலீஸில் இரண்டு நாட்கள் இருந்ததாகவும், உங்கள் அப்பா, அம்மா உங்களோடு சரிவரக் கதைக்காததையும் கேள்விப்பட்டேன். இதைக் கேட்டதும் என் மனது மிகவும் வேதனைப்பட்டது. ஏன் இந்த

**கிருஸ்ணன் சிவா – மஸ்கெலியா**

நிலை உங்களுக்கு? தேவையான விஷயமா இது? கர்ணா! நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். உங்கள் வாழ்வில் நடந்த இந்தச் சம்பவத்தை எண்ணி வேதனைப்படுவது முட்டாள்தனம். நான் வேலை செய்யிற கம்பனியில சேல்ஸ்மேன் பதவிக்கு ஒரு ஆள் தேடுறாங்க. நீங்களும் வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாகக் குமார் சொன்னார். நான் மனேஜரிடம் நேரடியாகக் கதைத்தேன். வந்து சந்திக்கச் சொன்னார். நீங்க வரும்போது உங்கட சான்றிதழ்கள் எல்லாவற்றையும் கொண்டு வாங்க. நாம ரெண்டு பேரும் போய் பேசிப் பார்ப்போம். இந்த வேலை நிச்சயம் கிடைக்க வேண்டும் என்று கடவுளைத் தினமும் வேண்டிக் கொள்கின்றேன்.

கடந்த காலத்தை எண்ணிக் கலங்காமல் எதிர்காலத்தில் நடக்கப் போவதை எண்ணி நாம் முயற்சி செய்யவேண்டும். மனதில் உள்ள துயரத்தை அகற்றுங்கள். இந்த சமுதாயத்தில உயர்ந்த வாழ்வு வாழ முயற்சி செய்யுங்கள். உங்களது பதிலை சீக்கிரம் சொல்லி அனுப்பவும்.

**என்றும் உங்கள் அன்பின்**
**விமலா.**

கடிதத்தைப் படித்து முடித்ததும் கர்ணாவின் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொல வெனக் கொட்டியது. அவனை ஆறுதல் படுத்திய குமார், "டேய் கர்ணா! நீ எதுவும் யோசிக்க வேண்டாம். நாளைக்கு நீ போய் முதல்ல விமலாவை சந்திக்கிற. அவளிடம் கதைச்சு நீயும் விமலாவும் ஒரு முடிவை எடுங்க. அது உனக்கும், விமலாவுக்கும் நல்லதொரு வழியைக் காட்டும். ஓல் த பெஸ்ட்..." என்று விடைபெற்றான் குமார்.

இவ்வளவு நாளும் துக்கத்தில் இருந்த கர்ணாவின் மனம் சந்தோஷத்தால் ஊஞ்சலாடியது. 'ச்சே! இந்த இரவு சீக்கிரமே முடிந்து, பொழுது விடியாதா?' என்று மனதிற்குள் கேட்டுக் கொண்டான். எதற்காக இந்த வேகம்?

ஓ... விமலாவைச் சந்திக்க வேணும் அல்லவா? ■

# வைத்தியம்

அழ நினைக்கிறாள் முடியவில்லை. 'கல் நெஞ்சுக்காரி' என்று இவள் காதுபடவே பல பேர் கதைப்பதை இவள் பொருட் படுத்தவில்லை. தன் கணவன் திருமணம் முடித்த ஒரு வருடத்திலேயே மரணித்து விட்டானே என்ற ஏக்கம் இவளைக் குடைந்தாலும் அது ஒரு யதார்த்த நிகழ்வாகவே இவளுக்கு விளங்கியது.

இவளின் தாய், குமாரின் தாய், இவள் குடும்பம், குமார் குடும்பம் எல்லோருமே திரும்பப் பெற முடியாத இழப்புக்காகத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள். இவளால் அழுவதற்கு முடியவில்லை. மரணம் எப்போதாவது ஓர் நாள், எல்லோருக்கும் வந்தே தீருமென்பது வெளிப்படை உண்மை. அதை இவள் தெளிவாகப் புரிந்துவைத்திருந்தாள். அந்த மரணம் குமாருடைய விடயத்தில் முந்திவிட்டதென்பதை இவள் உணர்ந்திருந்தாள். தானும், தன்னைச் சுற்றியிருக்கும் உறவுகளும், ஏனைய மனிதர்களும், இப்போதோ இல்லை இன்றோ, நாளையோ, மரணிக்கப் போவதை மறந்து அழுது கொண்டிருப்பதைப் பார்க்கையில் இந்த மரண வீட்டிலும் இவளுக்குச் சிரிக்க வேண்டும் போலிருந்தது.

"நீ கவலைப்படாத புள்ள... எதையும் நெஞ்சில வெச்சிருக்காம முடிஞ்ச மட்டும் நல்லா அழு. அப்பத்தான் பாரம் குறையும்" குமாரின் தாய் சொல்லிவிட்டுத் தன் முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு மீண்டும் தேம்பித் தேம்பி அழுகிறாள். இவள் மனதில் எந்தப் பாரமும் இல்லை. இவளைச் சுற்றி ஒரு கூட்டம். அழுகையும், ஓலமும், குத்தல்களும், ஆறுதல் வார்த்தைகளும் அடுக்கடுக்காய் காதுகளை முட்டிக்கொண்டேயிருந்தன.

"பாவம், கல்யாணம் முடிச்சி ஒரு வருசத்திலேயே வாழா வெட்டியா நிக்குது..."

"இவளுக்கு புடிச்ச சனியன் தான் குமாரையும் சாகடிச்சிருக்கு மூதேவி..."

"பாரன், புருஷன் செத்த பின்னாலயும் கலர் சல்வார்ல நகையெல்லாம் போட்டுக் கல்யாணப் பெண்ணாட்டம்..."

"இவள் திமிர் புடிச்ச பொம்புள. புருசன இழந்திட்டு இப்படிக் கல்லாட்டம் இருப்பாளா?"

வாழவும் விடாது, சாகவும் விடாது வந்த இடத்தில் வம்பளந்து வாழ்க்கையைச் சீரழிக்கும் இந்தச் சமூகத்தினுள் இன்னும் புதைந்து கிடக்க இவள் விரும்பவில்லை. ஓடிச் சென்று அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு கட்டிலில் சாய்கிறாள். பூட்டிய கதவு பலமாகத் தட்டப்படுகிறது. வெளியில்

ஒரே சலசலப்பு,

"அம்மா, அவசரப்பட்டு எதுவும் பண்ணிடாத. மரணம் எல்லாருக்கும் வாறதுதான்."

"புள்ள, தயவு செஞ்சி கதவ திறம்மா. அவசரப்பட்டு எதையும் செஞ்சிடாத"

"நீ சாகிறதால போனவுயிர் திரும்பி வந்திடாது. தயவு செஞ்சி வெளியில வாம்மா"

எல்லா வேண்டுதல்களும் இவள் காதில் நுழைகிறது. இவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. தன்னை விதவை என்ற முத்திரை குத்துவதற்காக வலுக் கட்டாயமாக வெளியில் எடுக்க இவர்கள் முனைகிறார்கள். இவளுக்கு சடங்கு, சம்பிரதாயங்களில் நம்பிக்கை கிடையாது. யதார்த்தமாகச் சிந்திப்பவள். மனித வாழ்வியலின் நியதியை அறிந்து ஒரு இலட்சியப் பாதையில் முன்னேறுபவள். இழப்புகளுக்காக வாழ்க்கைப் பயணத்தை இடை நடுவில் இடை நிறுத்த இவள் தயாராயில்லை. இவளுக்கு கதவைத் திறக்க வேண்டுமென்ற எண்ணம் எழவேயில்லை. மாறாக எந்த வகையிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தச் செயலினையும் சந்தேகமாகவும், தவறாகவும் நோக்கும் இந்தச் சமூகத்திடமிருந்து கொஞ்ச நேரம் தனித்திருக்கவே இவள் மனம் விரும்பியது. தட்டப்பட்ட கதவு இப்போது அசைய ஆரம்பிக்கிறது. வெளியில் கதவை உடைக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டு முகத்தைத் தலையணையில் புதைத்துக்கொண்டு படுத்துக் கிடக்கிறாள். அசைந்த கதவு உடைந்து போகிறது. எல்லோரும் ஓடி வருகிறார்கள். இவளை அசைத்துத் திருப்புகிறார்கள். இவள் ஏதாவது தின்று தற்கொலை செய்திருப்பாள் என்ற எல்லோருடைய எதிர்பார்ப்பும் வீணாகிப்போகிறது. எழுந்து, கட்டிலில் அமர்ந்து கொள்கிறாள். எரிக்கும் கண்களுடன் எல்லோரையும் நோட்டம் விடுகிறாள்.

மீண்டும் சலசலப்பு, அறியாமை



**காத்தநகர் முகைதீன் சாலி- திருகோணமலை**

யின் வெளிப்பாடு, சமூகத்துடன் ஒட்டியிருக்கும் தொட்டில் பழக்கம்.

"பாவம், புருசன் செத்திட்டதால புள்ளக்கி ஏக்கம் புடிச்சிட்டு. அதனாலதான் கதையாம, பேசாம பேயறைஞ்ச மாதிரி இருக்கு..."

"புருஷன் இறந்திட்டதால மனநிலை பாதிக்கப்பட்டிருக்கு மெண்டு நினைக்கிறேன்..."

"இப்படியே பாத்திட்டிருக்காம இவட உடுப்பக் களைஞ்சிட்டு வெள்ளைப் புடவையைக் கட் டுங்க. போட்டிருக்கிற நகையெல்லாம் கழட்டி வையுங்க..."

இவள் அங்கிருக்கும் அனைவரினது கண்களையும் உற்று நோக்குகிறாள். எல்லோருடைய கண்களிலும் ஒரு வித பயமும், கவலையும். ஒன்று மரணக் கவலை.மற்றது பைத்தியப் பயம். இவளின் சிந்தனையை யதார்த்த உணர்வை, சீர்திருத்தப் பாதையினை யாரும் புரிந்ததாகவோ, புரிய முயற்சிப்பதாகவோ இவளுக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு புதுமையைப் பார்ப்பது போல் எல்லோரும் இவளை நோக்குகிறார்கள். இவளால் இன்னும் பொறுமையாக இருக்க முடியாது போகவே ஆவேசமாக எழுந்து கொள்கிறாள்.

"எல்லாரும் போங்க, போங்க..." என்று ஆவேசமாகக் கத்தியவாறு கட்டிலிலிருந்து இறங்குகிறாள். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்தவர்கள் பயத்தினால் தலை தெறிக்க ஓடுகிறார்கள். இவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சத்தமிட்டுச் சிரிக்கிறாள். இவ்வளவு தெளிவாக இருக்கும் தன்னைப் பைத்தியமென நினைத்து அவர்கள் ஓடுவதைப் பார்த்துப் பலமாகச் சிரிக்கிறாள். ஓடியவர்கள் வைத்தியருடன் வருகிறார்கள்.

இவளது உடம்பில் பலவந்தமாக மயக்க மருந்து ஊசி ஏற்றப்படுகிறது. மயங்கிப் போகிறாள். உண்மையும், யதார்த்தமும், நேர்மையும், வெளிப்படுகின்ற போது 'பைத்திய' முத்திரை குத்தப்படும் அந்தச் சம்பிரதாயம் அங்கே அரங்கேறி முடிகிறது.

குமாரின் மரணச் சடங்குகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவளின் தாய் குமுறுகிறாள்.

"கடைசியா ஒரு தடவை மாப்பிள்ளை முகத்தை என் புள்ளக்கிக் காட்டிப்புடுங்க..."

எதிர்ப்பு வார்த்தைகள் கிளம்புகிறது. "என்ன பைத்தியக்காரத்தனமாக் கதைக்கிறீங்க... ஏற்கனவே கணவன் இறந்த ஏக்கத்துல அவளுக்கு பைத்தியம் புடிச்சிருக்கு. இப்ப போய் பிரேதத்தக் காட்டினா பைத்தியம் முத்திடும்..."

யாரோ சொல்ல தாய் மனம் பற்றியெரிகிறது. தன் குழந்தையைப் 'பைத்தியம்' என்று கேட்க எந்தத் தாய்தான் தாங்கிக் கொள்வாள்?

"என் மகள் பைத்தியமில்ல... என் மகள் பைத்தியமில்ல... என் மகள்..."

சொல்லிச் சொல்லியே சாய்ந்து மூர்ச்சையாகிப் போகிறாள்.

வைத்தியசாலையில் ஓர் அறையில் தாயும், மகளும். இவளின் ஊசி மருந்தின் சக்தி குறைந்ததும் கண் விழித்துப் பார்க்கிறாள். இவளுக்கு நடந்தது எல்லாமே நன்றாகப் புரிந்தது. சுற்று முற்றும் பார்க்கிறாள். அங்கே பக்கத்துக் கட்டிலில் கையில் 'சேலைன்' ஏற்றிப் படுத்திருக்கும் தாயைப் பார்க்கையில், பரிதவித்துப் போகிறாள். தன் தாய்க்கு என்ன நேர்ந்தது என்பதைப் பார்ப்பதற்காகக் கட்டிலிலிருந்து இறங்கி நடக்க முயற்சிக்கிறாள். முடியவில்லை. தன் காலினை ஏதோ இழுப்பது போல் இருக்கவே திரும்பிப் பார்க்கிறாள். இவளது கால்களைச் சங்கிலியால் பிணைத்துக் கட்டிலில் கட்டியிருந்தார்கள். தன் நிலையை நினைக்க, கணவன் இறந்த அந்நேரத்தில் வராத அழுகை இப்போது வந்து தொலைக்கிறது. தாயை ஒரு தடவை இதமாகத் தடவி முத்தமிட வேண்டுமென்று உள் மனது கட்டளையிடுகிறது. சங்கிலியைப் பொருட்படுத்தாது ஆவேசமாக முன்னேறுகிறாள். இவளின் பலத்த அசைவினால் கட்டிலும் சேர்ந்து நகர்கிறது. கட்டிலின் அசைவினால் மேசை மீதிருந்த கண்ணாடிப் போத்தல்கள் உடைந்து நொருங்குகிறது. தாதிமார்கள் ஓடி வந்து இவளை இறுக்கமாகப் பிடித்து ஊசி மருந்தை மீண்டும் ஏற்றுகிறார்கள். இவள் மீண்டும் மயங்கிப் போகிறாள். ஊரில் சமூகம் கதைத்துக்கொண்டது.

"இவளுக்கு புருஷன் செத்ததைத் தாங்க முடியாமல் பைத்தியம் முத்தி ஆஸ்பத்தியிலை. பெத்த தாயைக் கொலை செய்ய முயற்சி செய்தாளாம்".

# ஒரு கைதியின் கதை

டி.எஸ்.பி கஜேந்திரன் ஏளனமான புன்னகையுடன் அங்கிருந்த தொலை பேசியைப் பயன்படுத்தினார்.

"பரமேஷ்... எங்கேயிருக்கிறாய்?"

"காரில்" என்றார் பரமேஷ்வர். "ஆஸ்பத்திரிக்கு தான் வந்து கொண்டிருக்கிறேன்...."

"சி.எம். என்கிற சந்திரமோகன் என்கிற அயோக்கியனை நாங்கள் பிடித்திருக்கிறோம், பரமேஷ்...." அவனுக்கு உன்னோடு பேச வேண்டுமாம்."

"கொடு கஜா"

"ஏய், இங்கே வா...பேசு"- டி.எஸ்.பி.ரிசீவரை நீட்ட, அதை நோக்கி சந்திரமோகன் உந்தித் தள்ளப் பட்டான்.

சந்திரமோகன் ரிசீவரை வாங்கினான்.

"வணக்கம்" என்றான், களைத்த குரலில்.

"என்ன பிரதர், சௌக்கியமா? நெருப்போடு விளையாடி விட்டாய் என்றேனே. இப்போது அர்த்தம் புரிகிறதா? கிருஷ்ணதாஸை அடித்திருக்கிறாய்... கஞ்சா கடத்தியிருக்கிறாய்... லாட்ஜ் வாசலில் விபச்சாரத்திற்கு துணை போயிருக்கிறாய்.... இன்னும் என்னென்ன குற்றங்கள் உன் மீது சுமத்தப்படப் போகின்றன, தெரியுமா?"

"என்னைப் பிடிக்காதவர்கள் யாராவது என் மீது இப்படிக் குற்றம் சுமத்தலாம். ஆனால் நான் ஏன் பயப்பட வேண்டும்? எப்படிப்பட்ட



குற்றச்சாட்டிலிருந்தும் என்னை வெளியே கொண்டு வர உங்களைப் போல் ஒரு அபாரமான அட்வகேட் இருக்கும்போது எனக்கு என்ன கவலை?"

"நானா? உனக்காக நான் வாதிடுவேன் என்று உனக்கு யார் சொன்னது?"

"நீங்கள்தான்! இன்று காலை உங்கள் வீட்டிற்கு நான் வந்திருந்த போது சொன்னீர்களே!"

"என் வீட்டிற்கா? என்ன பேத்துகிறாய்?"

"அதற்குள் மறந்து விட்டீர்களா? நான், நீங்கள் அபிதா மூன்று பேரும் ஒன்றாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோமே! அபிதாவை வேண்டுமானாலும் கேளுங்கள்!"

"அபிதா! அவள் பெயரை ஏன் இழுக்கிறாய்?"

"அபிதாவோடு பேசிவிட்டு, என்னுடன் பேசுங்கள்" என்று ரிசீவரை வைத்தான், சந்திரமோகன்.

★★★

பரமேஷ்வரின் உடல் படபடவென்று நடுங்கியது.

அபிதா!

அபிதாவை கடத்துவதாக முந்தின இரவு வந்த தொலைபேசி மிரட்டலை மறந்து விட்டாரே. பரபரப்பாகக் கிளம்பும் அவசரத்தில், அபிதாவைக் கூப்பிட்டு மறுபடி எச்சரிக்கக்கூட மறந்து விட்டாரே.

பரமேஷ்வர் காரை ஓரமாக நிறுத்தச் சொன்னார்.

செல்போனில் மனைவியைக் கூப்பிட்டார்.

"அபிதாவைக் கூப்பிடு" என்றார்.

## 12

"அபிதாதான் விடிகாலையிலேயே டென்னிஸிற்குக் கிளம்பிப் போய்விட்டாளே!"

"என்னது! டென்னிஸ் போயிருக்கிறாளா?" பரமேஷ்வரின் குரல் கோபத்தில் குரைத்தது. "என்னிடம் ஏன் சொல்லவில்லை? எங்கேயும் போக வேண்டாம் என்றேனே?

"நீங்கள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள்"

"தூக்கம்தானே தூங்கினேன்? செத்தா போய் விட்டேன்?" தொடர்பைத் துண்டித்தார்.

டிரைவரின் முதுகு விறைப்பதைக் கவனித்தார். அவமானமாய் உணர்ந்தார். ஏன் இப்படி அவசரப்பட்டு என் பொறுமையை விட்டு விட்டேன்?

அபிதாவிற்கும் ஒரு செல் ஃபோன் இருக்கிறதே. கூப்பிட்டு டென்னிஸ் கோர்ட்டில் இருப்பவளோடு பேசி விட்டால் போயிற்று!

அபிதாவின் எண்ணை டயல் செய்தார்.

எதிர்முனையில் ஃபோன் ஒலித்தது... தொடர்ந்து ஒலித்தது.

எடு, அபிதா, சீக்கிரம் எடேன்!

துண்டித்து விட்டு மறுபடி டயல் செய்தார்.

இந்த முறை மூன்று முறை மணி அடித்ததும் தொடர்பு உயிர் பெற்றது.

"அபிதா!" என்றார், பரபரப்பாக.

"அப்பா....அப்பா..." அவள் குரல் வெகு ஆழத்திலிருந்து ஒலிப்பது போல் இருந்தது. நடுக்கத்துடன் வந்தது.

"அபிதா- டென்னிஸ் கோர்ட்டில் தானே இருக்கிறாய்?"

"இல்லை, டாடி. டென்னிஸ் கோர்ட் போகும் வழியில் எவனோ என்னைக் கடத்தி விட்டான். ஆ..."

"அபிதா!"

"ஐயோ...அடிக்காதே."

அபிதாவின் குரல் மறுமுனையில் அலறியதும், பரமேஷ்வரின் இதயம் தடதடத்தது.

"அபிதா... அபிதா... எங்கேம்மா இருக்கிறாய்?

"பூட்டப்பட்ட ஒரு அறைக்குள் டாடி. இது எந்த இடம் என்றே புரியவில்லை. டாடி தயவு செய்து அந்த சந்திரமோகன் சொல்லும்படி நடந்து கொள்ளுங்கள் டாடி... இல்லையென்றால் என்னை...என்னை... ஐயோ!"

"டேய்..." என்று ஃபோனில் கத்தினார், பரமேஷ்வர். முகம் முழுவதும் வியர்வையில் நனைந்து விட்டது.

"என் மகளை விடுடா..."

மறுமுனைத் தொடர்பு எந்தப் பதிலும் சொல்லாமல் சட்டென்று அறுந்தது.

பரமேஷ்வர் தன் முகத்தை கைக்குட்டையால் அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

"டிரைவர்... வண்டியை எடு...."

"ஆஸ்பத்திரிக்கா சார்?"

"இல்லை... என் ஆபிஸிற்கு...." என்றார் பரமேஷ்வர்கண்களை அழுந்த மூடிக்கொண்டு.

★★★

சந்திரமோகனை போலீஸின் பூட்ஸ்கால் நெம்பியது.

"எழுந்திரு ..."

கன்னங்களில் நெற்றிப் பொட்டுக்களில் முகவாயில் திட்டுத் திட்டாகக் கன்றிப் போன சிவப்புகள்.

விலா எலும்புகள் வலித்தன.

ஆனால் எல்லாவற்றையும் மீறி அவன் உதடுகளில் புன்னகை பூத்தது.

காரணம்-

அவனுக்காக ஜாமீன் காகிதங்களுடன் காவல் நிலையத்திற்கு வந்திருந்த பரமேஷ்வர்.

இன்ஸ்பெக்டரின் மேஜை மீது பிரித்து வைக்கப்பட்ட அச்சிட்ட தாளில் ஒரு பகுதி சுட்டிக் காட்டப்பட்டது.

"இங்கே கையெழுத்துப் போடு...."

" டி.எஸ்.பி.யின் குரல் மிரட்டலாக வந்தது.

"வக்கீல் சார்... உங்கள் பேனாவைக் கொஞ்சம் இரவல் தருவீர்களா?"-சந்திரமோகன் நமுட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

பரமேஷ்வரின் பேனாவை வாங்கிக் கையெழுத்திட்டான்.

டி.எஸ்.பி. பரமேஷ்வர் பக்கம் திரும்பினார்.

"பரமேஷ்...நீ விசாரித்தாயே சி.எம். என்றால் யார் என்று? இவன்தான் அந்த சந்திரமோகன்! நீ தேடிய சந்திரமோகன்..."

"தெரியும்?" என்று விறைப்பாகப் பதில் வந்தது.

"வக்கீல் சார்... கஸ்டடியில் இருக்கும் போது, என்னை அடித்துத் துன்புறுத்திய போலீஸ் அதிகாரிகளுக்கு எந்த செக்ஷன் நம்பரின் கீழ் தண்டனை வாங்கித் தரப் போகிறீர்கள்?"

"ராஸ்கல்... வெளியே வா" என்றார், பரமேஷ்வர் கோபம் குறையாமல்.

காவல் நிலையத்திற்கு வெளியே வந்ததும் பரமேஷ்வர் தன் காரை நெருங்கினார்.

எழுதுவது

**சுபா**

"டிரைவர்...நீ ஆட்டோ பிடித்து வீட்டிற்குப் போய் விடு... காரை நான் எடுத்துப் போகிறேன்."

டிரைவர் அவரையும், சந்திரமோகனையும் மாறி மாறிப் பார்த்தான். காரிலிருந்து இறங்கிப் போனான்.

ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்தார்.

"ஏறு!" என்றார்.

சந்திரமோகன் ஏறினான். கை நீட்டி ஏ.ஸி. ஸ்விட்சைத் தட்டினான்.

"நீ நெருப்புடன் மறுபடி மறுபடி விளையாடுகிறாய்..."

"இருளை விலக்க நெருப்பு வேண்டியிருக்கிறது."

"சொல்... அபிதா எங்கே?"

"அவள் பேசினாளா?"

"பேசினாள். அவளை இருட்டு அறையில் அடைத்து வைத்திருக்கிறாய்!"

"அப்படியா சொன்னாள்?"

(கைதியின் கதை தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## உயிர்கொல்லி எயிட்ஸ்-03

"சுகந்தன்! மருத்துவத்தினால் குணமாக்க முடியாத நோய் உங்களைப் பாதித்துள்ளது. உடலுறவு என்பது இயற்கையானது. இதைப் பெரிய பிழையென நாம் எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால், கெட்ட நண்பர்களின் தொடர்பாலும், போதைக்கு அடிமையாவதாலும் ஏற்படுகின்ற பாதுகாப்பற்ற உடலுறவினால் எயிட்ஸ் உங்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு சில நிமிட இன்பத்திற்காக உங்கள் வாழ்க்கையையே விலைகொடுத்து விட்டீர்களே... அது சரி அந்த நண்பர்கள் யார்?"

"இந்த முகாமிலுள்ள சேகர், சுதாகர், ரஜனி..."



"அவர்கள் எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள்?"

"சேகர் - வவுனியா, சுதாகர் - மன்னார், ரஜனி-திருகோணமலை..."

இவர்களுக்கெல்லாம் எயிட்ஸ் ஏற்பட்டிருந்தால், இவர்களின் மனைவிமார், பிள்ளைகள், சுகந்தனுடன் உறவு கொண்ட முகாம் பெண்கள், இவர்களின் கணவன்மார், பிள்ளைகள் என எனது சிந்தனை ஒரு மரத்தின் கிளைபோல் பரந்து விரிந்து சென்றது. என் தலை விறைத்தது. நெஞ்சு பதைபதைத்தது, கனத்தது. பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் சிறந்து விளங்கும் ஈழத் தமிழர் வாழ்வில் இடப் பெயர்வும், அகதி வாழ்வும் எவ்வளவு சீரழிவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை நிதர்சனமாகக் காணும்போது மிகத் துன்பமாக இருந்தது. என்னால் தொடர்ந்து பேசவும் முடியவில்லை. சுகந்தனின் பிள்ளைகள் பாடசாலை விட்டு வரும் நேரமும் நெருங்கி விட்டது. அவர்கள் வந்தபின், அவர்கள் முன்னிலையில் சுகந்தனோடு இந்த விடயங்களைப் பேசுவது நல்லதல்ல என்பதால், சுகந்தனோடு பேசுவதை நிறுத்தினேன். சித்திரா தேனீர் கொண்டு வந்தார். நான் அதைப் பருகினேன்.

"சித்திரா! நாளைக்குக் காலையில் சுகந்தனையும் கூட்டிக்கொண்டு எனது அலுவலகத்துக்கு வாருங்கள்..." என்று கூறிவிட்டு விடை பெற்றேன்.

முகாம் நலப்பணியாளரைச் சந்தித்து சுகந்தனையும், சித்திராவையும் என்னிடம் அழைத்துவரும்படியும், முகாமில் எச்.ஐ.வி. காவிகள் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து, 'விழிப்புணர்வுக் கருத்தரங்கு' ஒன்றை ஒழுங்கு செய்யும்படியும் கூறிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டேன்.

மறுநாள், காலை ஒன்பது மணிக்கு சுகந்தனும், மனைவியும் நலப்பணியாளருடன் எனது அலுவலகம் வந்தனர்.

மூவரையும் வரவேற்று என் முன்னிருக்கையில் இருத்தினேன். முதலில் சித்திராவுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்ய வேண்டுமென்று நான் தீர்மானித்திருந்தபடி, அதனைச் சித்திராவுக்குத் தெரிவிக்க நினைக்கையில்,

சுகந்தன், "நீங்கள் எங்களுக்கு ஒரு உதவி செய்ய வேணும்" என்றார்.

"என்ன உதவி?" என்றேன் நான்.

"எனது மனைவிக்கு எயிட்ஸ் இருக்கிறதோ? என்று பரிசோதிக்க உதவவேணும்" என்ற சுகந்தனின் கண்கள் கலங்கிவிட்டன. சித்திரா தனது சேலைத் தலைப்பால் தனது கண்களைத் துடைத்துக்கொண்டிருந்தவள், தன் கணவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தம் எனக்குப் புரிந்தது. நலப்பணியாளர் என்னைப் பார்த்தார்.

தன் மீது தன் கணவன் சந்தேகப்படுகிறார் என சித்திரா நினைத்துவிடக் கூடாதென்று நான்,சித்திராவிடம், "சித்திரா! சுகந்தன் மூலம் உங்களுக்கு எயிட்ஸ் தொற்றியிருக்

**எஸ்.பி.லெம்பட்**

கலாம் என்பதற்காகத்தான் உங்களுக்குப் பரிசோதனை. வேறொன்றுமில்லை" என்றேன்.

"அப்படியா?" என்றாள் சித்திரா.

"சித்திரா! நீங்கள் நலப்பணியாளருடன் போய் அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்துகொண்டு வாருங்கோ" என்று பரிசோதனைக்காக சிறுதொகைப்பணமும் கொடுத்தனுப்பினேன்.

சித்திராவும், நலப்பணியாளரும் எனது அலுவலகத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்.

சுகந்தன் மட்டும் என்னுடனிருந்தார்.

சுகந்தன், "என்னுடைய பிள்ளைகளுக்கும் இந்நோய் வந்திருக்குமா?" என்று கேட்டார்.

"சித்திராவைப் போல அவர்களுக்கும் பரிசோதனை செய்து விட்டால் நல்லது. அடுத்த சனி, ஞாயிறிலே செய்திடலாம்..." என்றேன் நான். சுகந்தனும் சரி எனத் தலையாட்டினார்.

"சுகந்தன்! உங்கள் நண்பர்கள் வரவில்லையா?"

"எனக்கு இப்படி நோய் என்று அறிந்த பிறகு யாரும் வரவேயில்லை"

"அவர்களுக்கும் இந் நோய் ஏற்பட்டிருக்கலாமல்லவா?"

"அவர்களுக்கு மட்டுமல்ல, இன்னும் பலருக்கு ஏற்பட்டிருக்கும்"

சுகந்தன் பலருடைய விபரங்களையும் தெரிவித்தார். எனது குறிப்புப் புத்தகத்தில் அவர்களுடைய பெயர், முகவரி, குடும்பநிலை போன்றவற்றைக் குறித்துக் கொண்டேன்.

ஒரு மணி நேரத்திற்குப் பின் நலப்பணியாளருடன் சித்திரா தயங்கியவாறு வந்தாள்.

(தொடர்ந்து வரும்...)

# வாக்களித்த மக்களைக் கவனிப்பது யார்..?

மக்களைத் தேடி அரசியல்வாதிகள் செல்வதற்கும், மக்களுக்காக அவர்கள் பரிந்து பேசுவதற்கும் காரணம் மக்களுக்கு இருக்கும் வாக்குரிமை மட்டும் தான்! தேவை முடிந்ததும் நீ யாரோ! நான் யாரோ! இதை தமது நடைமுறையில் தெளிவாகப் புரிய வைப்பவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர்.

வாக்குறுதிகளை வழங்கினார்கள்! வாக்குகளை எடுத்தார்கள்! வாக்களித்த மக்களை மறந்ததுதான் மிச்சம்! புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டால் மட்டும் போதும் என்ற நிலையில் மக்களிடமிருந்து விலகியிருக்கும் தமது பழைய பாணி அரசியலையே இன்னமும் கடைப்பிடித்து வருகின்றனர்!

யுத்தம் ஒழிந்து போனதோ, ஓய்வெடுத்துக்கொண்டதோ இதுவரை புரியாத புதிர்! ஏதோ மக்களுக்கு நிம்மதிதான்! ஆனாலும் சீரழிந்து போயிருக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்படுத்த வேண்டிய தேவை இப்போது உள்ளது. நிவாரண வெட்டு முதற்கொண்டு அன்றாட, அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு மக்கள் பல முனைகளிலும் முகம் கொடுத்து வருகின்றனர். இத்தகைய அவலங்களைக் கூட்டமைப்பினர் கண்டு கொள்ளவில்லை! இவைகள் மக்களின் பிரச்சனைகளாகவே அவர்களுக்குத் தெரியவில்லை! இதற்காகப் போராடவோ, வாதாடவோ அவர்கள் எத்தனித்ததில்லை!

அண்மையில் கூடிய தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ம.தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமியின் விடுதலைக்காகப் போராடுவது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். ஆனால் நீண்டகாலமாக இங்கு சிறைகளில் வாடும் தமிழ்பேசும் கைதிகளின் நிலைகுறித்து இவர்கள் இதுவரை சிந்தித்ததாக இல்லை. தமது விடுதலை கோரி இவர்கள் சிறைக்குள் இருந்து போராட்டம் நடத்தியபோதும்கூட அது பற்றி இவர்கள் பெரியளவில் அலட்டிக் கொள்ள முன்வரவில்லை. சிறையிலிருப்பவர்கள் யார்? இவர்களுக்கு வாக்களித்த மக்களின் பிள்ளைகள்தான். சொந்தச் சகோதரர்கள் சிறையில் வாடும் சோகம் கண்டு சிந்தை கலங்காதவர்கள் யார் யாருக்காகவோ எல்லாம் போராட்டம் நடத்த நினைப்பது வேடிக்கைதான். இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில் தமிழ் நாட்டில் வை. கோவின் ஆதரவாளர்கள் கூட அவருக்காகப் போராட பெரியளவில் முன்வரவில்லை என்பதுதான்.

தம் மீது விசனம் கொண்டுள்ள மக்களின் உணர்வுகளைத் திசை திருப்பவும், தாமும் ஏதோ செய்கின்றோம் என்பதை வெளிப்படுத்தவும் ஒரு துருப்புச் சீட்டாக கூட்டமைப்புக்குக் கிடைத்திருப்பது வை.கோ வின் கைது விவகாரம். இதை வைத்து அரசியல் நடத்துவதுதான் கூட்டமைப்பின் தற்போதைய திட்டம்!.

**ஊடறுப்பான்**

இதில் பலருக்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை எதிர்ப்பதென்பது விருப்பமில்லாத காரியம்! குறிப்பாக ஆனந்த சங்கரியின் நிலைப்பாடு திண்டாட்டம்! ஏற்கனவே தமிழக முதல்வரின் கொடும்பாவி எரிப்பு விடயத்தில் குழந்தையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விட்டவர் சங்கரியார். இது விடயத்தில் புலிகளின் அதிருப்தியையும் அறுவடையாக்கிக் கொண்டவர். "இவையள் ஜெயலலிதாவுக்கு தீபம் காட்டுகினம். மனிசி சன்னதம் கொண்டுதெண்டால் என்ன நடக்கும் தெரியுமோ?" என்று தன்னோடு நெருக்கமானவர்களின் காதுகளில் கிசு கிசுத்தவர் சங்கரியார். மீசையில் படாமல் கூழ் குடிக்கலாம் என்ற கனவுகளோடு சில வேளைகளில் அவரும் கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கலாம்.

யாருக்காகவும் யாரும் போராடலாம். அது அவரவர் உரிமை! சுதந்திரம்! அது தவறென்றும் அல்ல! எது எப்படியோ! தமக்கு வாக்களித்த மக்களுக்காகப் போராடுவதற்கு ஏராளம் தேவைகள் இருந்தும், வை. கோ வின் கைது விடயத்திற்கு போராட எத்தனிப்பது முறைதானா என்ற கிசு கிசுப்புகள் பரவத் தொடங்கியிருக்கின்றன. பாவம் மக்கள்!

மக்கள் விழித்துக்கொண்டே இருப்பார்கள்! அரசியல் தலைவர்கள் தூங்கிக் கொண்டிருப்பார்கள்.

யாரால் யாரைத்தான் ஏமாற்ற முடியும்! ■

# 1983 ஜூலை இனசங்காரமும் அதன் பிந்திய அனுபவங்களும்

இனப் படுகொலை நடைபெற்று 19 ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்த நாட்டின் மிகப் பெரும் கறை படிந்த அத்தியாயமாக மாறிவிட்ட அந்த இனப்படுகொலைதான், இந்த நாட்டின் அண்மைக் கால சரித்திரத்தில் தீவிர மாற்றங்களைக் கொண்டுவந்ததெனலாம்.

ஓரிரு நாட்களில் 3000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு, பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டு ஒரு லட்சம் தமிழர்கள் தெற்கிலிருந்து வடக்கு கிழக்கிற்கு அகதிகளாக வெளியேறினார்கள்.

ஒவ்வொரு இனசங்கார நடவடிக்கைகளின் போதும் (1958, 1977, 1980, 1983) தமிழர்கள் வடக்கு கிழக்கிற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ்வாறுதான் தமிழர்களின் தாயகபூமி உருவாகிறது. இது ஒன்றும் தற்செயல் நிகழ்ச்சியல்ல வரலாற்றில் எழுந்தது இது.

ஆறாவது திருத்தச் சட்டமூலத்தின் மூலம் பிரிவினைக் கோரிக்கையை முன் வைக்கும் எவரும் பாராளுமன்றம் செல்ல முடியாது என்ற நிலையை உருவாக்கிய தன் மூலம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமை பறிக்கப்பட்டது.

சிறையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் 52 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தக் கறைபடிந்த அத்தியாயத்தின் அடுத்த கட்டமாக, தமிழ் மக்களின் போராட்டத்தின் தலைமை ஆயுதம் ஏந்திய இளைஞர் யுவதிகளின் கைகளுக்குச் சென்றது.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இந்தக் காட்டுமிராண்டித்தனம் சிங்கள மக்களின் தேசிய எழுச்சியென அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். அவர்களால் வர்ணிக்கப்பட்டது.

அந்த ஜூலைக்குப் பிந்திய கால வெள்ளத்தில் எத்தனை ஆயிரம் இளைஞர் யுவதிகள், பல்வேறு தர நிலையில் உள்ள மனிதர்கள் மரணித்துவிட்டார்கள்! எத்தனை லட்சம் பேர் சொந்த பந்தங்கள், உறவினர்களை இழந்து ஏதிலிகளாகிவிட்டார்கள்!! எத்தனை பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள், உடைமைகள் துவம்சம் செய்யப்பட்டு விட்டன!!

கண்ணிவெடிகளும், மனித எலும்புக் கூடுகளும் புதையுண்டுவிட்ட தேசத்தில் அல்லவா மிச்சம் மீதி மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

1983 ற்குப் பிந்திய இனப் பிரச்சினை தீர்விற்கான முயற்சிகள் யாவும் வியர்த்தமாகின.

ஒட்டை வாளியால் தண்ணீர் இறைப்பதைப் போன்று, புறக்குடத்தில், நீர் ஊற்றுவது போன்றுதான் காரியங்கள் நடைபெற்றன.

ஊள்ளூர், சர்வதேச அளவில் எத்தனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வட்டமேசை மாநாடுகள், திம்பு பேச்சு வார்த்தைகள், டெல்லி பேச்சுவார்த்தைகள், இந்திய இலங்கை ஒப்பந்தம், பிரேமதாசா- புலிகள் பேச்சு, புலிகள்- சந்திரிகா அரசு பேச்சு என முயற்சிகள் நடைபெற்ற போதும் ஈழத் தமிழர்களின் மரணம், அகதி வாழ்க்கை கண்ணீருக்கு விடை கிடைக்கவில்லை.

மிகவும் துயரமானது, தேசத்தின் விடுதலை என, சுகங்களைத் துறந்து மரணித்தவர்களுக்கு, அவர்களின் மரணங்களுக்கு எந்தப் பெறுமானமும் இல்லாமல் போனது. அர்த்தமற்ற மரணங்கள் என்னும் அளவிற்கு நிலைமைகள் தலை கீழாயின.

இந்தச் சமூகத்தின் மீது உண்மையான அக்கறையும், பற்றும் கொண்டோர், அதற்காக மரணித்தோர், ஜனநாயகத்துக்காகப் போராடி மரணித்தோர் இருட்டடிப்புச் செய்யப்பட்டார்கள்.

மரணித்துப் போன தலைசிறந்த மனிதர்களை எந்தச் சமூகப் பங்களிப்பும் செய்யாது உயிருடன் இருக்கும் அயோக்கியர்கள் தமது பிழைப்பிற்காக மறுக்கிறார்கள்.

1983 இன வன்முறையையடுத்து அர்ப்பணமும், தியாகமும், உண்மையும் விளங்கிய சமூகத்தைக் கொஞ்ச நாட்களிலேயே, எவ்வித சமூக உணர்வுமற்ற பிழைப்புவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

இதன் விளைவு 1983 இன் பின்னர் பேரலையென எழுந்த மக்கள் ஆதரவும், சர்வதேச ஆதரவும் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைவடையத் தொடங்கின.

ஆரோக்கியமான போராட்டத்திற்கு கிழக்குத் திமோர் நல்ல உதாரணம். இந்தோனேசியர்களின் இன வன்முறைக்கும், கொடுமைக்கும் ஆளான கிழக்குத் திமோரியர்களின் போராட்டம் 70 களின் நடுப் பகுதியில் இருந்து இன்று வரை தனது மரியாதையை, தனது நியாயத்தை, தனது உண்மைத் தன்மையைக் காப்பாற்றி வந்தது. திமோர் போராட்டக்காரர் ஒருவர் நோபல் பரிசு பெற்றிருக்கிறார்.

ஐ.நா.வின் கண்காணிப்பில், தனியாகச் செல்ல விரும்புகிறார்களா? அல்லது இந்தோனேசியாவுடன் இருக்க விரும்புகிறார்களா? என்று அங்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இந்த ஆண்டின் சில மாதங்களுக்கு முன்னர் அவர்களின் தனிநாடு உருவாகியது.

ஆனால் ஈழத் தமிழர்களுக்கு இருந்த தேசிய ஒடுக்குமுறைகளை எல்லாம் கொச்சைப்படுத்தும் விதத்தில் தமிழ்ச் சமூகத்தில் இருந்து உருவாகிய ஜனநாயக விரோத செயற்பாடுகளும், பிற சமூகக் குரோதங்களும், நட்பு நாடுகளுக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகமும் ஈழத் தமிழர்களை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது.

இன்று மரணங்களும்,அவலங்களும் உச்ச நிலை பெற்று அழிவின் விளிம்பில் நிற்கும் இந்தச் சமூகம் தலை நிமிர்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதே இன்று முக்கியமானது.

சமகால உலகிற்கு ஈடுகொடுக்கக் கூடிய விதத்தில், சவால்களை எதிர் கொள்ளக்கூடிய விதத்தில், சமாதான முயற்சிகளும், அரசியல் சீர்திருத்தங்களும், பொருளாதார மீள்கட்டுமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்ச் சமூகத்தைச் சினங்கொள்ளச் செய்யும் மேலாதிக்கவாதமும், அதேபோல் தமிழ்ச் சமூகத்தின் உள்ளேயே சொந்தச் சமூகத்தின் மீதும் மற்றைய சமூகங்களின் மீதும் மேலாதிக்கம் செலுத்த முனையும் போக்குகளும் தமிழ் சமூகத்தையும் சகல சமூகங்களையும் மீள முடியாத அழிவிற்கே இட்டுச் செல்லும்.

எனவே சமகால அரசியல், சமூக பொருளாதார, மீள் நிர்மாணப் பணிகள் ஒன்றன்பின் ஒன்றாக அல்லாமல் ஏக காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு தலைசிறந்த சுபீட்சமான, மகிழ்ச்சியான வாழ்க்கை விரைவாகக் கிட்ட வேண்டும்.

இதுவே 1983 இலும் அதன் முன்னும் பின்னும் மரணித்தவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான மரியாதையாக இருக்கும்.

கறுப்பு ஜூலையின் 19வது ஆண்டில் காலத்திற்கு ஒவ்வாத, சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் தீவிர கண்டனத்துக்குள்ளான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது பற்றிச் சிந்திப்பதும் அவசியமானது. அத்தோடு இந்த நாட்டின் கறை படிந்த அத்தியாயமான ஜூலை நாட்களைத் தேசிய துக்க நாளாகப் பிரகடனப் படுத்தவேண்டும். செய்வார்களா? இதய சுத்தி இருந்தால் செய்யலாம். இந்த நாட்டின் பெருவாரியான நாகரிகமான மக்கள் இதனை ஏற்றுக்கொள்வார்கள். ■



# காற்றுவாக்கில்... 8

## 'அழுக்கு வேட்டி'க்கு நடந்ததென்ன?

நகைச்சுவை நடிகர் நாகேஷ் 'காதலிக்க நேரமில்லை' என்ற படத்தில், தாம் ஒரு திரைப்படத்தைத் தயாரிக்க எடுக்கும் முயற்சிகளைக் குணசித்திர நடிகர் டி.எஸ்.பாலையாவிடம் விபரித்துக் கூறுவதை ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். படம் தயாரிப்பதில் உள்ள சிரமங்களை எதிர்நோக்கும் நாகேஷ் ஒரு சந்தர்ப்பத்தில் எரிச்சலுடன் கூறிய வசனங்கள் இவை-

"நான் தயாரிப்பதுதான் படம். அதைப் பார்க்க வேண்டியது ரசிகர்களின் தலைவிதி". அதாவது, ரசிகர்களை உதாசீனப்படுத்தும் போக்கு இதில் தொனிக்கிறது அல்லவா?

'சக்தி' ரிவி இரு வாரங்களுக்கு முன்பு 'அழுக்கு வேட்டி' என்ற நாடகத்தை ஒளிபரப்பியபோது 'காதலிக்க நேரமில்லை' என்ற படத்தின் அந்தக் காட்சியே நினைவிற்கு வந்தது.

'சக்தி' ரிவியில் "கோகிலா எங்கே போகிறாள்" என்ற தொடர் நாடகத்தைத் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 8.30க்கு நீண்ட காலமாக ஒளிபரப்பி வந்தார்கள். அத்தொடர் முடிவடைந்த பின்னர், 'அழுக்கு வேட்டி' என்ற தொடரை ஒளிபரப்பத் தொடங்கினர். நல்லதொரு நாடகம். ஆனால், அந்தத் திங்களன்று 'அழுக்கு வேட்டி' நாடகத்தின் அங்கம் ஒளிபரப்பாகவில்லை. பதிலாக, 'மௌனம் ஒரு பாஷை' என்ற தொடர் நாடகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'அழுக்கு வேட்டி' நிறுத்தப்பட்டதற்கான காரணத்தை விசாரித்தபோது, 'அழுக்கு வேட்டி' யின் இறுதி அங்கமே எஞ்சியிருந்ததென்றும், அது சனிக்கிழமை அன்றே, அதாவது திங்கள் வரை காத்திராமல் இரண்டு நாட்களுக்கு முன்னமேயே மாலை 7 மணிக்கு ஒளிபரப்பாகிவிட்டது என்பதும் தெரிய வந்தது.

'அழுக்கு வேட்டி'யைக் காணக் காத்திருந்த ரசிகர்களுக்கு இவ்வாறு ஏமாற்றத்தை அளிக்காமல், உரியவாறு அறிவித்துவிட்டு அந்த மாற்றத்தைச் செய்திருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் நாடகத்தின் இறுதி அங்கத்தையும் கண்டு களிக்க ரசிகர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதை விடுத்துத் தான்தோன்றித்தனமாக ரசிகர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் குறிப்பிட்ட நாடகத்தின் இறுதி அங்க்த்தைக் குறிப்பிட்ட நேரத்தில் ஒளிபரப்பத் தவறியமை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன ஒலிபரப்பில் ஒரு சமயம் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை, ஏற்கனவே அறிவிப்புச் செய்தபடி, ஒலிபரப்பத் தவறியதற்கு எதிராக ஒரு நேயர் உயர் நீதிமன்றம் வரை அந்த முறைப்பாட்டை எடுத்துச் சென்ற விடயம் உரியவர்களுக்குத் தெரியாமலிருந்திருக்க நியாயமில்லை!

நேயர்களுக்காகத்தான் வானொலியும், தொலைக்காட்சியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

## ஜூலைப் பேச்சு என்ன ஆச்சு?

ஜூலை முதல் ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசை தனியாகத் தமிழ் நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்படும் என்று அதன் தலைவர் கூறியதாகச் செய்திகள் படித்திருப்பீர்கள். ஆனால், அது இன்னமும் நடக்கவில்லை. இப்பொழுது காற்றுவாக்கில் கிடைத்த செய்தி-

அந்த மாற்றம் ஒகஸ்ட் முதல் இடம்பெறுமாம். அறிவித்தல் விடுக்கு முன் எல்லா முன்னேற்பாடுகளையும் செய்துவிட்டுத் திகதியை அறிவிப்பது தானே முறை? என்னவோ, இதுவும் 'தாய்லாந்துப் பேச்சுவார்த்தை'யாக இல்லாவிட்டால் சரிதான்!

**காற்றாடி**

## வரவை மிஞ்சிய செலவு

இலங்கை வானொலிக்கு ஒரு மாத வருமானத் தொகை (சுமார்) ரூ. 26 மில்லியனாம். அதேவேளை, ஏற்படும் செலவுத் தொகை (சுமார்) ரூ. 29 மில்லியனாம். அதாவது, துண்டுவிழும் தொகை ரூ. 3 மில்லியன். இப்பொழுது வருமானம் (சுமார்) ரூ. 29 மில்லியனாக அதிகரித்துள்ளதாம். வர்த்தக சேவை கூடுதல் வருமானத்தைப் பெற ஆரம்பித்துவிட்டதுதான் இதற்குக் காரணமாம். வேடிக்கை என்னவென்றால், செலவுத் தொகையோ (சுமார்) ரூ. 38 மில்லியன்வரை உயர்ந்துவிட்டதாம். அதாவது, துண்டு விழும் தொகையும் அதிகரித்து விட்டது. திறைசேரி உதவி செய்யத் தயாரில்லை. காரணம் வங்குரோத்து நிலைமை. அப்படியானால், துண்டு விழும் தொகையை எப்படிச் சமாளிக்கப் போகிறார்களோ!

இருக்கவே இருக்கிறது (வங்கி) O.D என்கிறார் அங்குள்ள ஊழியர் ஒருவர். நிதி நிலைமையில் மிகவும் உறுதியானதாக விளங்கிய ஒரு நிறுவனம் இன்று இப்படி ஈடாடிப் போய்விட்டதே!

## 'மின்னல்' பற்றி ஒரு நேயர்

'சக்தி'யில் கடந்த ஞாயிறு மாலை (14.07) ஒளிபரப்பான 'மின்னல்' நிகழ்ச்சியில் இனப்பிரச்சனை தீர்வு சம்பந்தமான விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

விவாதத்திற்கு ஒதுக்கிய நேரம் போதவில்லை. கலந்து கொண்டவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க முயன்றபோது இடையில், பேட்டி காணுபவர் நேரமின்மையால் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொண்டார். ஏனைய சகோதர மொழித் தொலைக்காட்சிச் சேவைகள் அரசியல் விவாதங்களுக்குக் கூடிய நேரத்தை ஒதுக்குவதுபோல் இதற்கும் ஒதுக்குவது நல்லது. இனிமேலும் 'மின்னல்' மின்னல் வேகத்தில் முடிவுறும் நிகழ்ச்சியாக இல்லாமல் தொடர வேண்டும்.

ஜே. எம். பாரீஸ், தெல்தெனிய.

# ஸ்போர்ட்ஸ்

## உலகக் கிண்ணப் போட்டி

## நிகழ்ச்சி நிரலில் மாற்றம்?




உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நெருங்கிவரும் வேளையில், போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான ஸிம்பாப்வே பிரச்சனையில் சிக்கியுள்ளது. இதனால் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் திட்டமிட்டபடி அந் நாட்டில் ஆட்டங்கள் நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

14 நாடுகள் கலந்து கொள்ளும் 8-வது உலகக் கோப்பைப் போட்டி 2003 பெப்ரவரியில் தென் ஆபிரிக்கா, ஸிம்பாப்வே, கென்யா ஆகிய 3 நாடுகளில் நடைபெற உள்ளது.

இந் நிலையில் ஸிம்பாப்வேயில் நிலவிவரும் இனவேறுபாடு பிரச்சனை நாட்டில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் ராபர்ட் முகாபே, வெள்ளையர்கள் விவசாயப் பணியை நிறுத்தி விட்டு பண்ணைகளில் இருந்து வெளியேறுமாறு உத்தர விட்டுள்ளார். அதற்கு ஆகஸ்ட் 10- ஆம் தேதி இறுதி நாளாகவும் கெடு விதித்துள்ளதால் நாட்டில் கிளர்ச்சி ஏற்படலாம் எனத் தெரிகிறது.

தவிர, உலகக் கோப்பைப் போட்டி சமயத்தில் இப் பிரச்சனையைப் பூதாகரமாக்கவும் கிளர்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதனால், ஸிம்பாப்வேயில் நடைபெறும் போட்டிகளை வேறு இடத்திற்கு மாற்றுவது தொடர்பாக மான்செஸ்டரில் ஆலோசனை நடைபெற உள்ளது.

அதே சமயம், திடீரென ஏற்படும் மாற்றங்களைச் சமாளிப்பதற்காகக் கூடுதலாக 3 மைதானங்களை உலகக் கோப்பைப் போட்டிக்காகத் தயார்படுத்தும் பணியில் தென் ஆபிரிக்க அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# மாலை நேரத்து மயக்கத்தில்...

படலையைத் திறந்து உள்ளே
நுழைந்த காந்தன் வீட்டினுள்
எந்த அரவமும் இல்லாததை
உணர்ந்து துணுக்குற்றான்.
"அவளையும் கூட அழைத்துச்
சென்றிருப்பார்களோ... இருக்காது.
அவள்தான், தான்
போகப்போவதில்லை.
தனக்காகவேதான் அன்றிரவு
எல்லோரும் திரும்பி வந்து
விடுவார்கள் என்று
சொல்லியிருந்தாளே..."
காந்தன் கதவைத் திறந்து
உள்ளே நுழைந்தான்.
கதவு பூட்டியிருக்கவில்லை.
'உள்ளேதான் எங்கோ இருக்கிறாள்.'
மெல்ல மெல்ல ஒவ்வொரு
அறையாகத் தேடி நடந்தான்.
தரையும் சுவர்களும் மிகச்
சுத்தமாக இருந்தன.
தரையைக் கழுவியிருந்த ஈரம்
அங்கங்கே காயாமலிருந்தது.
காந்தன் உள்ளங்காலில்
சிலிர்ப்பை உணர்ந்தான்.
அறையும் குளுமையாகவே இருந்தது.
பின் கதவையும் தாண்டித்
தோட்டப் பக்கமாக வந்தான்.
தூரத்தில் நிழலுருவாக
சுதா அமர்ந்திருந்தாள்.
மாலைப் பொழுதின்
மங்கிய ஒளியில்
அவளது புறவரைவு மட்டும்
கருவண்ண
ஓவியமாகத் தெரிந்தது.
தனியாக அமர்ந்திருக்கிறாள்.
அவனுக்கு மார்பின்
அடிப்பு உரக்கக் கேட்டது.
மூச்சு அழுத்திக் கொண்டது.
கிளர்ச்சி உந்த
அவளை நோக்கி நடந்தான்.
நெருங்குகையில் - மூச்சு முட்டியது.
பின்புறமும் இடது பக்கக்
கன்னமும் தெரிந்த நிலையில்
அவள் மகத்தானதோர்
மோகினிச் சிற்பம்
போலிருந்தாள். கண்கள்
கூர்மையடைந்தன.
அவள் முதுகுப்புறம்
கூந்தல் வழிந்திருந்தது.
கால்களைத் தொங்கப் போட்டபடி
கல்லில் அமர்ந்திருந்தாள்.
உடைகள் நெகிழ்ந்து
இடது மார்பகம் தெரிந்தது.
காந்தனின் மனம்
வினோதமான களிவெறியை
அடைந்தது. படபடப்பாக
இருந்த மனதில் இனிய
பரபரப்பு எழுந்தது.
"சுதா" என்று மெல்ல
அழைத்தான்.
நெகிழ்ந்திருந்த ஆடையைக்
கைகள் சரி செய்ததும்
அவள் திரும்பியதும்
ஒரே கணத்தில் நிகழ்ந்தது.
வளையல்கள்
கிண்கிணியாக்க் குலுங்கின.
இடது கையால் கன்னத்தில்
கிடந்த மயிர்க் கற்றையை
மேலே தள்ளியபடி, சிரிப்பு நிரம்பிய
கண்களுடன் அவனைப் பார்த்தாள்.
காந்தன் அவளருகே,
கல்லில் சென்று அமர்ந்தான்.
"குளித்தாயா?" என்றான்
அவள் கூந்தலைத் தொட்டபடி.
அவனை நோக்கித் தலையசைத்தாள்.
ஆளை விழுங்கிவிடும்
அவள் கண்களில் ஈரப்
பளபளப்பு தெரிந்தது.
சுதா தன் கரத்தை அவன் கரத்தின்
மீது வைத்தாள்.
அது சூடாக இருந்தது.
அந்தக் கரத்தைத் தன்
கையில் எடுத்து இடுப்புப் பகுதிக்கும்



முழங்கைக்கும் இடையில் வைத்து
அழுத்திக் கொண்டான்.
சுதா அவன் தோளில் சரிந்தாள்.
கன்னத்தின் சூடான ஸ்பரிசம்
அவன் தோளில் பரவியது.
போதையும் பரபரப்பும் மிகுந்தது.
மன எழுச்சியையும் துடிப்பையும்
அவன் கேட்டான்.
அவள் முகத்தை நகர்த்தி தோள்
வளைவுக்குள் புதைத்துக் கொண்டாள்.
"மாலை தொடுக்க
மறந்து விட்டேன். பூக்கள்
வாடிவிடப் போகிறது" என்றாள்.
குரலும் மிகப் பிரியமாக இருந்தது.
"மாலை தொடுப்பதற்கல்ல,
களிப்பதற்கு" என்றான் அவன்.
அவள் தலையை நிமிர்த்தி
அவனைப் பார்த்தாள்.
அவள் கண்களை தன் சிரிக்கும்
கண்களால் சந்தித்தபடி,
"பொழுது போன பின்பும்
மாலை தொடுக்கலாம், மாலைக்
காலத்தின் இனிமையை
இப்போது விட முடியாது" என்றான்.
அவள் பயந்தவளாக
விலகி அவனைப் பார்த்தாள்.
"என்ன செய்யப் போகிறாய்?"
என்றாள் அச்சம்
தொனிக்கும் குரலில்.
காந்தன் மனதுக்குள் சிரித்தவனாக
அவள் நெற்றியின்
குறுமயிரை வருடியபடி
சிறிது நேரம் எதுவும்
பேசாமலிருந்தான்.
பின்பு லேசாக அவள்
கன்னத்தை வருடியபடி,
"நாமிருவரும் தனியே இருக்கிறோம்"
என்றான். பதற்றமடைந்து தெரிந்த
அவள் கண்களைப்
பார்த்துச் சிரித்தான்.
சுதா அவன் கரத்தை
விலக்கினாள். முகத்தைத் திருப்பி
வேறுபுறம் பார்த்தபடி,
"உனக்குப் புத்தி
தடுமாறுகிறது" என்றாள்.
"ஆமாம்" என்று ஒற்றை
வார்த்தையில் ஒப்புக்கொண்டான்.
அவள் திரும்பி
வினோதமாகப் பார்த்தாள்.
"நல்லது கெட்டதைப்
புரிந்து கொள்ளும் நிலையில்
நீ இப்போது இல்லை"
என்றாள் உஷ்ணத்துடன்.
"ஆமாம்" என்றான்
மறுபடியும் பவ்வியமாக.
"என்ன பேசுகிறாய்
என்பதைப் புரிந்து பேசும்
மனநிலையிலாவது இருக்கிறாயா?"
என்றாள் சுதா சலிப்புடன்.
பதில் சொல்லாது
திடீரென அவளை
இழுத்த காந்தன், மார்போடு
அணைத்து இறுக்கி,
பிடரிக் கூந்தலைத் தன்
முகத்தால் விலக்கி, அவள்
புறங்கழுத்தை முகர்ந்தான்.
"சுதா... சுதா..." என்று புலம்பினான்.
அவள் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும்
தாங்காமல், அனிச்சையாக
"விடுங்கள்... விடுங்கள்..."
என்று முனகினாள்.
காந்தன் மன எழுச்சியின்
மறு எல்லையில் நின்றான்.
"இந்த இனிய மாலையையும்
தனிமையையும் நான் வீணாக்கப்
போவதில்லை. பூக்களை நீ பிறகு
தொடுத்துக் கொள். நல்லது
கெட்டதை ஆராய்ந்து பார்க்கும்
நிலைமையில் என்
அறிவும் இல்லை. மனமும்
உடலும் உன்னையே
நாடி நிற்கிறது. இந்த
நேரத்தின் மகிழ்ச்சிக்காக
நாம் என்ன விலையும்
கொடுக்கலாம். மறுக்காதே
என் செல்லமே! நீ இதற்குச்
சம்மதிப்பாயாக!" என்று
கெஞ்சியபடி அவளை
அணைத்துக் கொண்டான்.
சுதா அவன் முதுகை வருடினாள்.
மறுப்புக் கூறும்
எல்லையைத் தாண்டி விட்ட
மகிழ்ச்சிக் கடலினுள் வீழ்ந்தாள்.

**முல்லை இவை ஆயின்**
**முற்றிய கூழையாய்**
**எல்லிற்றுப் போழ்தாயின்**
**ஈதோளிக் கண்டேனால்**
**செல் என்று நின்னை**
**விடுவேன் யான் மற்றெனக்கு**
**மெல்லியது ஓராது அறிவு**

(கலித்தொகை: 17)

இலக்கிய நயம் தருவது முடிவ்யன்



# சிந்தியா பதில்கள்

**★ கட்சி தாவும் அரசியலை ஜீரணித்துக் கொள்ள சமூகம் இசைவாக்கம் பெற்று விட்டது என்கிறாரே நரன்?**

வீ.ஸ்ரீரஜனி, மல்லிகைத் தீவு.

வேதனைதான். அநுராவாக இருந்தாலும் சரி, திஸநாயக்காவாக இருந்தாலும் சரி, பீரிஸாக இருந்தாலும் சரி, ஒருவன் நாக்கைச் சுழட்டிச்சுழட்டி அசிங்கங்களை வாந்தியெடுப்பதைக் கேட்டு அருவருப்படையாமல், அந்தந்த நேரத்தில் தன் கட்சிக்காக வாதாடுவது கேட்டுக் குளிர்ந்து போகிற காதுகளை உடைய சமூகம் நாகரிக சமூகங்களில் சேர்த்தியில்லை.

✓?✓

**★ சிக்கனமாக இருக்கச் சொன்னால் பெண்கள் உடைகளையல்லவா சிக்கனப் படுத்துகிறார்கள்?**

முகமட் அன்ஸார், முள்ளிப்பொத்தானை.

சிக்கனப்படுத்துகிறார்கள் என்பதா, 'சிக்' கெனப் படுத்துகிறார்கள் என்பதா? உங்கள் கவலை அன்ஸார், அவர்கள் உடுத்துவதைப் பார்த்து அதிகம் அலட்டிக் கொண்டிராமல், நீங்கள் சில்மிஷமின்றி நடந்து கொள்வதில் கவனம் கொள்ளுங்கள்.

✓?✓

**★ பிறருடைய தேவைக்காக என்று சொல்லி ஒருவரிடம் பொருளைப் பெற்று இன்னொருவருக்குக் கொடுத்து, தாங்கள் நற்பெயரையும் அதனால் கிடைக்கும் பலாபலன்களையும் அனுபவிப்பவர்களைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

எஸ்.விஜி, திருமலை.

அவர்களைப் பற்றி தேர்தல் சமயத்தில் சொன்னாலாவது நாலு பேரையேனும் ஞாபகத்தில் வைத்திருந்து யோசிக்கச் செய்யலாம். ம்... இப்போது சொல்லி என்ன? தேர்தல் வரும்போது மீண்டும் தங்களிடமுள்ளதை எல்லாம் அள்ளிக் கொடுத்துவிட்டு, வாங்கியவர்கள் அறிக்கைகளை விட்டபடி தங்களுக்குள் பதவிகளுக்காகச் சண்டை பிடித்துக் கொள்வதைப் பார்த்து மீண்டும் வேதனைப்பட்டுக் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர வேறென்ன செய்யப் போகிறார்கள், இந்த வெட்கங் கெட்ட அப்பாவி மக்கள்.

✓?✓

**★ தத்துவ ஆராய்ச்சிகளெல்லாம் ஏன்?**

எம்.இர்ஷான்-காலி.

ஏனென்றால்... "ஒவ்வொரு தொட்டிலும் எங்கேயிருந்து வந்தேன் என்று கேட்கிறது. ஒவ்வொரு சவப் பெட்டியும் எங்கே போகிறேன் என்று கேட்கிறது" இதைச் சொன்னவர் இங்கர்சால்.

✓?✓

**★ இன்றைய நிலைமையில் விண்ணளவு அதிகாரங்களை வைத்துக் கொண்டும் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாதவராக இருக்கும் ஜனாதிபதிக்குத் தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

பரிமளகாந்தி கந்தையா, நானுஓயா.

நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்.

✓?✓

**★ 'ராஜா' படம் பார்த்து உங்களுக்கு என்ன தோன்றியது?**

சிவசுப்பிரமணியம் கிஸ்யந்தன், காரைதீவு-01.

நக்மா தங்கைக்கும் நம் ரசிகர்கள் ஓய்வு கொடுத்து விடப்போகிறார்கள் என்று. அதுசரி, கலைவாணரின் 'கிந்தனார் காலட்சேபம்'போல அது என்ன இப்படி ஒரு பெயர் உங்களுக்கு?

✓?✓

**★ சிந்தியா, ஆண்களுக்குக் கோபம் வந்தால் மீசை துடிப்பது ஏன்? ஆண்மைக்கும் மீசைக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?**

கி. ஆனந்தி, வத்தளை.

தாடிக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்புதான்.

✓?✓

**★ மாற்றான் தோட்டத்து மல்லிகை என்னைப் பார்த்து 'பறிபறி' என்கிறது. பறிக்கலாமா?**

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07

தோட்டச் சொந்தக்காரன் கைகள் 'அடி அடி' என்று சொல்லும். எதற்கு வீண் வேதனை? மிதந்து வரும் வாசனையை முகர்ந்து பார்த்துவிட்டு 'கம்'மென்றிருங்கள்.

✓?✓

**★ நம் நாட்டை ஆட்சி செய்பவர்கள் அரசியல்வாதிகளா? ஆதிக்கவாதிகளா? இனவாதிகளா?**

ஏ.சி.எம். கடாபி, ஒட்டமாவடி- 01.

கதிரையைப் பிடித்து அதிகாரம் செலுத்திக் கொண்டிருப்பதையே விருப்பமாய்க் கொண்ட சந்தர்ப்பவாதிகள்!

✓?✓

**★ இம்முறை சமாதானம் வந்து விடும் என்றும், மீண்டும் யுத்தத்திற்குப் போகும் மனநிலையில் இரு தரப்புமே இல்லை என்றும் நான் நம்புகிறேன். சிந்தியா இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

வை. குணசீலன், மன்னார்.

நாம் நம்ப விரும்புவதைத்தான் நாம் நம்புகிறோம்.

✓?✓

**★ பிரதமரின் அமெரிக்க விஜயம் ஏன் சிந்தியா?**

த. தியாகமூர்த்தி, கினிகத்தேனை.

புலிகளுக்கு அடிவயிற்றில் புளி கரைக்கத்தான்!

✓?✓

**★ அரச ஊடகங்களில் தமிழுக்கு உரிய இடமோ மரியாதையோ இன்றிப் பந்தாடப்படுவதற்கும், ஏமாற்றப்படுவதற்கும் என்ன காரணம்?**

எம்.எஸ்.எம். முஸ்ம்மில், புத்தளம்.

முதுகெலும்பில்லாத தமிழ்ப் பிரிவுத் தலைவர்கள்.

✓?✓

**★ திருமண வாழ்க்கையில் இணையப் போகும் எனக்குத் தாங்கள் கூறப்போவது என்ன?**

எஸ். சுகாசினி, கித்துள்.

ஆறுதல்.

# மன்னாதி மன்னன் 114

## கோவிந்த ஐயரின் கதை

போஜ மன்னரின் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த விக்கிரமாதித்த மாமன்னரின் அரியணையில் ஏறி அமர வேண்டும் என்று பதினான்கு நாட்களாக முயற்சி எடுத்த போஜமன்னர், அரியணையில் உள்ள முப்பத்திரண்டு படிகளிலும் காவலுக்கு நின்றிருந்த காவல் பதுமைகள் கூறிய கதைகளைக் கேட்டு வந்தார். விக்கிரமாதித்த மாமன்னரின் இரண்டாயிரம் ஆண்டு ராஜ்ய பரிபாலனத்தின் போது நிகழ்ந்த சம்பவங்களையும், மன்னரின் அதிதீர பராக்கிரமச் செயல்களையும் பதுமைகள் விவரமாகக் கூறிக் கொண்டிருந்தன.

விக்கிரமாதித்த மாமன்னரிடமிருந்த அபார திறமைகள், தன்னலமற்ற நெறிமுறைகள், வீரபராக்கிரமங்களைத் தக்க ஆதாரங்களுடன் பதுமைகள் கூறிய கதைகளைக் கேட்டுப் போஜமன்னர், அப் பதுமைகள் அவரிடம் கேட்டிருந்தவாறு விக்கிரமாதித்த மன்னரிடமிருந்த பேராற்றல்களில் சிறிதளவாவது தன்னிடமிருக்கிறதா? என்று யோசித்தார்.

அத்தகைய ஆற்றல்கள் எதுவும் தன்னிடமில்லை என்பதை உணர்ந்த போஜமன்னரால், எப்படியாவது அந்த அரியணையில் ஏறி அமர்ந்துவிட வேண்டும் என்ற பேராசையை விட்டுவிட முடியவில்லை.

பதினாலாவது படியிலிருந்த பதுமை சொன்ன கதையைக் கேட்ட போஜ மன்னர் அடுத்த நாட்காலையில் மீண்டும் அரியணைப் படிகளில் ஏறுவதற்காக வந்து சேர்ந்தார். பதினாலு படிகளையும் எதுவித தடையுமின்றி ஏறி முடித்த போஜ மன்னர் பதினைந்தாவது படியில் காலடி எடுத்து வைத்ததும், அப் படிக்குக் காவலாக இருந்த சஞ்சீவி வல்லிப் பதுமை மன்னரைத் தடுத்து ஏளனமாகப் பார்த்துச் சிரித்தது.

போஜமன்னர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விக்கிரமாதித்த மாமன்னர் பற்றிய மற்றுமொரு கதையைக் கூறவாரம்பித்தது.

நாடாறு மாதங்கள் நீதி, நெறிமுறைகள் தவறாது ஆட்சி புரிந்துவிட்டுத் தனது காடாறு மாத வாழ்க்கையை ஆரம்பித்த விக்கிரமாதித்த மாமன்னர் தனது இஷ்ட தெய்வமான உஜ்ஜயினி மாகாளியை வணங்கிவிட்டு வேதாளத்தின் உதவியுடன் கங்கைக் கரையை வந்தடைந்தார்.

அன்றைய தினம் அமாவாசை கூடிய நாளாகையால் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து தங்கள் பிதிர்க் கடன்களை முடித்துவிட்டு நதியில் நீராடிக்கொண்டிருந்தனர். இதனை வேடிக்கை பார்த்த வண்ணம் மன்னர் விக்கிரமாதித்தன் நின்றிருந்த போது, கங்கை நதியில் நீராடிய கோவிந்த ஐயர் என்ற அந்தணரின் காலை ஒரு முதலை கௌவிக்கொண்டது. இதனைக் கண்ட அந்த அந்தணரின் மனைவியார் பரிதாபமாகக் கதறியழுதார். நதியில் நீராடியவர்களோ, கரையில் நின்று வேடிக்கை பார்த்தவர்களோ எவரும் அந்த அந்தணரை முதலையிடமிருந்து காப்பாற்ற முன்வரவில்லை.

அந்த அந்தணரின் மனைவி பதறியழுத வண்ணம் அந் நாட்டு மன்னனின் மாளிகைக்கு ஓடிச் சென்றாள். தன்னுடைய கணவனை முதலையிடமிருந்து காப்பாற்றித் தருமாறு வேண்டினாள். மன்னன் தன்னுடைய வீரர்கள் நால்வரை கங்கைக் கரைக்குச் சென்று முதலையிடமிருந்து அந்தணரை மீட்டு வருமாறு பணித்தார்.

இராஜகுமாரன்

மன்னன் அனுப்பிய வீரர்கள் கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தபோது கோவிந்த ஐயர் கங்கைக் கரையில் நின்றிருந்தார். சாதாரண வழிப்போக்கன் போல் உடையணிந்திருந்த மன்னர் விக்கிரமாதித்தன் கோவிந்த ஐயரின் அருகில் நின்றபடி ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

அந்தணரின் மனைவி தன்னுடைய கணவன் இந் நேரம் முதலைக்கு இரையாகியிருப்பார் எனக் கருதிக்கொண்டு வந்தவர், கணவர் உயிரோடிருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தார்.

கோவிந்த ஐயர் முதலையின் இழுப்பைத் தாங்காது பதைபதைத்துக் கொண்டிருந்த வேளையில் மன்னர் விக்கிரமாதித்தன் கங்கைக்குள் பாய்ந்து தனது மந்திர வாளால் முதலையை வெட்டிக் கொன்றுவிட்டு, ஐயரை மீட்டு வந்து கரையில் விட்டார்.

நினைவு தெளிந்து எழுந்த கோவிந்த ஐயர் விக்கிரமாதித்த மன்னரின் பாதங்களைத் தொட்டு வணங்கி, "ஐயா... தெய்வம் போல்வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். இந்த உதவியை எக் காலத்திலும் நான் மறக்க மாட்டேன். இவ்வாறு எனக்கு உயிர்ப் பிச்சையளித்த தங்களுக்கு நான் எதுவித உபகாரமும் செய்யக் கூடிய நிலையிலில்லை. என்னுடைய மனைவியிடம் விலையுயர்ந்த ஆபரணங்கள் இருக்கின்றன. அவையனைத்தோடு என்னிடமுள்ள சொற்பப் பொன்னையும் தங்களுக்குக் காணிக்கையாகத் தருகிறேன். அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அந்தணர் கேட்டுக்கொண்டார்.

கோவிந்த ஐயரின் இந்தக் கோரிக்கையைக் கேட்ட மன்னர் விக்கிரமாதித்தன் புன்னகை பூத்தவராக, "அந்தணரே! ஒருவருக்கு உயிராபத்து நேரும் போது அவரைக் காப்பாற்ற முன்வரும் எவரும் சன்மானங்களோ, வெகுமதிகளோ பெறுவதில்லை. எனவே, தாங்கள் எனக்கு எதுவும் தரவேண்டாம்" என்று கூறினார்.

தனது உயிரைக் காப்பாற்றித் தந்தவருக்கு ஏதாவது பிரதியுபகாரம் செய்யாமல் செல்ல முடியாதென எண்ணிய கோவிந்த ஐயர் மன்னரின் கால்களை இறுக்கமாகப் பற்றிய வண்ணம் தான் கடுந்தவமிருந்து தேவர்களிடம் கற்ற அரிய மந்திரம் ஒன்றையாவது மன்னருக்கு உபதேசிக்கப் போவதாகக் கூறினார். "இந்த மந்திரம் மகா சக்தி வாய்ந்தது. இதனை மூன்று முறை உச்சாடனம் செய்தால், தேவேந்திரனுடைய புஷ்பக விமானம் வந்துசேரும். அதிலேறி அமர்ந்து கொண்டால் ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் சென்று வரலாம்" என்று கூறிவிட்டு, மன்னரின் காதுகளில் அம் மந்திரத்தை ஓதிவிட்டு, விடைபெற்றுச் சென்றார்.

விக்கிரமாதித்த மன்னர் கங்கைக் கரையில் நீராடிவிட்டு அருகேயிருந்த வனத்திற்குள் புகுந்தார். அங்கிருந்த கனிகளைப் புசித்துவிட்டு, ஒரு ஆலமர நிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அதி பயங்கரமான ஓர் இராட்சதன் மன்னர் முன் வந்து நின்றான்.

அந்த இராட்சதனைப் பார்த்ததும் மன்னர் விக்கிரமாதித்தன் அச்சங் கொள்ளவில்லை. "யாரப்பா நீ...?" என்று அமைதியாகவே கேட்டார்.

அதுகால வரை எந்த மனிதனும் இராட்சதனைக் கண்டாலே அலறியடித்துக்கொண்டு ஓடுவதுதான் வழக்கம். அந்த இராட்சதனைக் கண்டு பயம் சிறிதும் இல்லாமல் "யார்?" எனக் கேட்ட முதல் மனிதனைக் கண்டதும், இராட்சதன் சற்றுத் தயங்கினான்.

(மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

என்னெண்டால் பாருங்கோ எங்கட மகேஸண்ண, அதுதான் மண்ணெண்ணை ஒரு விவாதத்துக்கு அழைப்பு விட்டிருக்கிறார். அவர் யாரை எந்த நோக்கத்துக்காக மேடைக்கிழுக்க நெச்சாரோ தெரியாது, ஆனால்ப் பாருங்கோ, நானெண்டால் ரெடி.

மகேஸண்ணையைக் கனவில கண்டு, பாட்டுப் பாணியிலயே கேட்டன் அவரிட்ட, அண்ணை விவாதத்துக்கு நான் ரெடி, நீங்க ரெடியா...?

மகேஸண்ணை தான் எப்பவோ ரெடியெண்டுகொண்டு உடனயே வந்திட்டார். அவரோட நான் கனவில நடத்தின டிபேட்டை இங்க தாறன், ஜெயிச்சாரோ இல்லை மண் கவ்வினாரோவெண்டு நீங்களே தீர்மானிச்சுக் கொள்ளுங்கோ.

**கா.பூ:** ம.மகேஸண்ணை, நீங்கள் எங்கயோ ரகசியமாப் போனதாச் செய்தி வந்ததே எங்கேயெண்டு சொல்ல முடியுமா?

**ம.மகேஸ்:** நான் வன்னிக்குப் போனது இப்ப ரகசியமில்லையே. என்ர ரகசியங்களை அறிஞ்சு கொண்டதாலதானே அவையளே என்னை வன்னிக்குக் கூப்பிட்டவை. ரகசியங்கள் பரகசியமான பிறகு அந்த ரகசியத்தைப் பேசப் போனதையும் உங்களப்போல பத்திரிகைக்காரர் பரகசியமாக்கிட்டினம். இது பத்திரிகைக் காரற்ற பொறுப்பற்ற தனம்.

**கா.பூ:** வன்னியில உங்களப் பெரிய தலைவர்கள் ஒருத்தரும் சந்திக்காமல் தங்கட பெண்கள் அணிய விட்டுப் பேசினதுக்கு என்ன காரணம்?

**ம.மகேஸ்:** அதாவது, பெண்கள்தான் எந்த வீட்டுக்குச் சென்றாலும் உபசரிக்கிறவை. அதுபோல என்னையும் உபசரிக்கிறதுக்காக, விருந்தோம்பல் கலைதெரிஞ்ச பெண்களை அனுப்பினது அவையின்ர பண்பைத்தான் எடுத்துக் காட்டுது.

**கா.பூ:** ஆனால் ஏன் உங்களுக்கு மட்டமான சாப்பாடு தந்து, கிணத்துத் தண்ணியில அள்ளிக் குளிக்க வைச்சு, பாயில படுக்க வைச்சு சாதாரண சனம் படுற கஷ்டங்களப் புரிய வைச்சவை?

**ம.மகேஸ்:** பாயும், கிணத்துத் தண்ணியும், பழஞ்சோறும் எனக்கு அண்டைக்கெண்டாலும் கண்ணில பட்டுதேயெண்டு சந்தோஷப்படுறன். ஏனெண்டால் அதிலதான் நான் இன்னும் கலப்படக் கலையைப் பரிசோதிக்கயில்லை.

**கா.பூ:** ஏன் அவை உங்களிட்ட வருஷத்துக்கு ஐஞ்சு கோடி நன்கொடை கேட்டவையெண்டாவது வெளிப்படுத்த ஏலுமோ?

**ம.மகேஸ்:** நிச்சயமாக. அவைக்கு என்னில நல்ல பிரியம். யாரிட்டக் காசு வாங்கினாலும் என்னட்ட வாங்கினால்தான் அவைக்குத் திருப்தியாம். அதுதான் வருஷா வருஷம் ஒரு கைவிஷேசம் தரச்சொல்லி வலு அன்பாக் கேட்டவை. என்னால எப்பிடி மறுக்க ஏலும், சொல்லுங்கோ.

**கா.பூ:** ஆனாலும் இனித் தங்கட பெயரைப் பாவிச்சு அரசியல் ஆதாயம் தேடக்கூடாதெண்டு உங்கள எச்சரிச்சதாயும் ஒரு கேள்வி?

**ம.மகேஸ்:** நான்தான் அவையின்ர பெயரைப் பாவிச்சுக் கொண்டு அரசியல் நடத்திறதா யாரோ பிழையாச் சொல்லிப் போட்டினம். நான் விளங்கப்படுத்தினனான். அதாவது பாருங்கோ, நான் நடத்திறத அரசியலாப் பாத்தது உங்கட தப்பு. நான் ஒரு யாவாரி. நான் அரசியலையும் ஒரு யாவாரமாக் கருதித்தான் நடத்திறன். ஆனபடியால உங்கட பெயரை நான் ஒருபோதும் அரசியலுக்குப் பாவிக்க இல்லை, அரசியலெண்ட பெயரில நான் நடத்திற யாவாரத்துக்குத்தான் பாவிச்சனானெண்டு. அதுக்குப் பிறகு அவை வலு கிளியர். என்னோட யாவாரத்துக்கு மட்டும்தான் டீல்!

**கா.பூ:** நீங்கள் போன அரசாங்கக் காலத்தில விலையேற்றத்தை எதிர்த்து மாட்டு வண்டிலில பாராளுமன்றத்துக்குப் போனியளே, இப்ப இந்த அரசாங்கத்தில நடக்கிற விலையேற்றத்துக்கு எந்த வண்டியில பாராளுமன்றம் போகப்போறியள்?

**ம.மகேஸ்:** வண்டில் விட்டே பழகிப்போன எனக்கு வண்டிலுக்கு என்ன குறை? இப்ப அரசாங்கம் என்ர கைக்குள்ள. எந்தப் பெமிட்டிலயெண்டாலும் எந்த வண்டியையும் வாங்கி, என்ர விருப்பப்படி ஓடலாந்தானே. ஏனிப்ப மாட்டு வண்டில் எனக்கு?

**கா.பூ:** உங்கட அரசாங்கமெண்டிறியள். நீங்கள் கேட்ட அமைச்சைத் தராமல் உங்கள செல்லாக் காசாத்தானே வைச்சிருக்கு?

**ம.மகேஸ்:** செல்லாக் காசுக்கும் தங்க முலாம் பூசிப் பொற்காசா மாத்தி விக்கிற யாவாரி நான். எனக்குத் தெரியும்தானே எதை எப்பிடிப் பாவிக்க வேணுமெண்டு. அதை என்னோட விட்டுடுங்கோ.

**கா.பூ:** உங்கட கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி நீங்கள் உங்கட பாட்டில நடப்பீங்களெண்டு வீராப்புப் பேசினீங்கள். பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கின பட்ஜெட் வாக்களிப்பில அதுக்கெதிராச் சின்னி விரலைத்தன்னும் உயத்தாமல் பெட்டிப்பாம்பாச் சுருண்டிட்டியளே?

**ம.மகேஸ்:** பாதுகாப்பு அமைச்சுக்கு எதிர்ப்புக் காட்டிட்டு நான் பாதுகாப்பா இருக்க வேணுமெல்லோ. அதவிட, நான் தனிவழியில நடப்பனெண்டு ரீவிக்குத்தானே சொன்னனான். பாராளுமன்றத்துக்குச் சொல்லேல்லையே. அதால, ரீவியில சொன்னதப் பாராளுமன்றத்தில கடைப்பிடிக்க வேணுமெண்டு என்ன கட்டாயம்?

**கா.பூ:** நீங்கள் வைக்கோ போராட்டத்தில கலந்து கொள்ளயில்லையா?

**ம.மகேஸ்:** ஆனானப்பட்ட ஆனந்த சங்கரி, சம்பந்தராக்களே நழுவி நிக்கக்க என்னை ஏனப்பா வில்லங்கத்தில மாட்டப் பாக்கிறியள்?

**கா.பூ:** அதுசரி, நீங்கள் ஏதோ ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறதாப் பேப்பரில வந்ததே, என்ன அப்பிடி எழுதியிருந்தீங்கள்?

**ம.மகேஸ்:** நான் அப்பிடிக் கடிதம் எழுதினதாப் பேப்பருக்குத்தான் கடிதம் எழுதினனான். அதால, என்ன எழுதினனெண்டு ஒண்டுமில்லை.

**கா.பூ:** அப்பிடி ஒரு கடிதம் தனக்கு வரயில்லையெண்டு ஜெயலலிதா பதிலளிச்சிருந்தாவே?

**ம.மகேஸ்:** அதுதான் என்ர கெட்டித்தனம். கடிதம் எழுதாமலே, ஒரு மாநில முதலமைச்சரையே எனக்குப் பதில் எழுத வைச்சிருக்கிறனெல்லே. ம. மகேஸை மடையனெண்டு நெச்சவைக்கெல்லாம் இப்ப விளங்கியிருக்கும் என்ர மகிமை!

(குறிப்பு: ம.மகேஸ் என்பதன் முதலெழுத்தான 'ம'வை மண்ணெண்ணையென யாரும் எடுத்துக்கொண்டால் அது உங்கள் தப்பு)

யாவும் கலப்படமற்ற கற்பனை

## இந்தவாரம் உங்கள் பலன்

28.07.2002 தொடங்கி 03.08.2002வரை

சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

கன்னி - வெள்ளி, கர்க்கடகம் - வியாழன், செவ்வாய், சூரியன்
சிங்கம் - புதன், விருட்சிகம் - கேது, இடபம்- சனி, இராகு.
சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியுண்டு. பணவரவு சிறந்து விளங்கும், பெரியோர்கள் உதவுவர், உத்தியோகத்திலுள்ளோர் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்கள் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழிலில். சிறிது பிரச்சனையுண்டு. பெரியோர்கள் பகை கொள்வர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் நன்மையுண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல: 2.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) மனக்குறைநீங்கி, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெரியோர்களின் உதவிகிட்டும். உத்தியோக ரீதியாக மேலதிகாரிகளின் ஆதரவுண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) புதிய முயற்சிகளில் வெற்றியும், பொருள் வரவேற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் இருந்துவந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழிலில் சிறிது பிரச்சனை உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுவது கஷ்டம். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மன மகிழ்ச்சியுடன் காரியங்கள் நிறைவேறும். தொழிலில் சிறப்புண்டு. பெரியோர் உதவுவர். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயி கள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழிலில் சிறிது கஷ்டங்கள் தோன்றும். பணவரவு தாமதமாகும். பெரியோர்கள் தருணத்தில் உதவுவர். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை உருவாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலில் முன்னேற்றம். காரியானுகூலம். பணவரவு ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு வந்து சேரும். மாணவர்களுக்குக் கல்வியில் நன்மைகள் சேரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 1.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) எதிர்பார்த்த விடயங்களில் தடைகள் ஏற்படும். பணக் கஷ்டத்திற்கு இடமுண்டு. உத்தியோகத்தர்கள் எதையும் நிதானித்துச் செய்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலை தோன்றும். கவனம் தேவை. வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை தொழிலில் மறைமுக எதிர்ப்பு, குடும்பத்தில் வரவுக்கு மிஞ்சி செலவு, அன்னியர் உதவியுண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்குக் கல்வித் தடை விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 7.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழிலில் சிறிது பாதிப்பு ஏற்படும். பணக்கஷ்டத்திற்கு இடமளிக்கும். வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. உத்தியோக ரீதியாகப் பதவி உயர்வுகள் தடைப்படும். மாணவர்களுக்குக் கல்வியில் மாற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சிகளில் தடையும், மனக்கவலையும் ஏற்படும். குடும்பத்தில் எதிர்பாரா செலவுகளுக்கு இடந்தரும். உத்தியோகத்தில் சிறு கஷ்டங்களுக்கு இடமுண்டாகும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை காட்டும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.


Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




↓ உலகிலேயே மிகப் பெரிய கடற்படையைக் கொண்ட நாடு அமெரிக்கா. ஆயிரக் கணக்கான போர்க் கப்பல்களையும் நூற்றுக் கணக்கான நீர் மூழ்கிகளையும் பல இலட்சம் துருப்புக்களையும் அதி நவீன இயந்திராதிகளையும் அது கொண்டுள்ளது.

## இலக்கு








## வணக்கம்

← அடோல்ஃப் ஹிட்லரின் பாரிய இன ஒழிப்பு நடவடிக்கையின் பின்வரும் அரை நூற்றாண்டுக்கும் குறைந்த காலத்திற்குள் தன்னை செம்மையாக நிலை நிறுத்திக் கொண்ட ஒரு இனம் யூத இனம். இஸ்ரேல் யூத நாடாக இருந்த போதிலும் அமெரிக்காவில்தான் அதிக அளவிலான யூதர்கள் வாழ்கிறார்கள். அது 6122462 ஆகும். இஸ்ரேலில் 4354900 யூதர்கள் உள்ளனர். யூதர்கள் வணங்கும் போது தலையை சுவரில் சாய்த்துக் கொண்டே வணங்குவார்கள்.

உலகம் முழுவதும் உள்ள முக்கிய கடற் பிராந்தியங்களிலும், சில நாடுகளைப் பிரிக்கும் கால்வாய்களிலும் அமெரிக்கா தனது கடற்படையை நிலை நிறுத்தியுள்ளது. மத்திய கிழக்கிற்கு சமீபமாக வளைகுடாக் கடலில் ஏராளமான தளங்களை அமெரிக்கா கொண்டுள்ளது. இவற்றின் ஊடாக ஈரான், ஈராக், குவைட் மற்றும் பல சர்ச்சைக்குரிய நாடுகளின் கடற் பிராந்தியங்களை அமெரிக்கா அவதானித்து வருகிறது. யு.எஸ். எஸ். மெரில் என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் வளைகுடா கடலில் இருந்து ஆப்கானின் வட பகுதி நகரமொன்றை நோக்கி டொமோஹோக் குரூஸ் ஏவுகணை ஒன்றைச் செலுத்துவதையே இங்கு காண்கிறீர்கள். கண்டம் விட்டுக் கண்டம் பாயும் இந்த ஏவுகணை கப்பலில் இருந்து இயக்கினாலும் குறித்த இலக்கைத் தாக்கும் வல்லமை கொண்டது.

## அழகு

→ அன்னப்பறவை இனத்தில் மிகப் பெரிய அளவிலான இப் பறவை 22.5 கிலோ எடை கொண்டது. இதன் விரிந்த சிறகுகள் 33.7 மீற்றர் அகலத்திற்கு காணப்படுகிறது. நீர் வாழ் பறவை இனங்களில் மிகவும் அழகான பறவைகளில் இதுவும் ஒன்று. தன் பருத்த உடலையும் தூக்கிக் கொண்டு மிகச் சிறிய தூரமே பறந்து வந்து விமானம் போல் நீர் நிலையில் இறங்குகிறது.



## 3வது பிறந்தநாள் வாழ்த்து

30.07.2002



திருகோணமலையைச் சேர்ந்த புஸ்பராசா-இந்திராணி தம்பதியினரின் செல்வப் புதல்வி கிருத்திகா (சப்திகா) 30.07.2002 அன்று தனது 3 வது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரது அம்மா-அப்பா,

### புஸ்பராசா கிருத்திகா (சப்திகா)

அக்கா பிரவீனா, அண்ணாமார்- சஜா, தனன், கரன், தீபன், மாமிமார்- கவிதா, விமலேஸ், அப்பம்மாமார், அப்பப்பா, மாமிமார், மாமாமார், சித்தாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், நண்பர்கள், கொழும்பைச் சேர்ந்த அம்மம்மா, குட்டிமாமா, அண்ணாமார், அக்கா, மாமாமார், சித்தா, சித்தி, மச்சான்மார், மச்சாள்மார், பெரியம்மாமார், பெரியப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கிருத்திகாவை, துர்க்கை அம்மன் அருள்பெற்றுப் பலகலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழகவென வாழ்த்துகின்றார்கள்.

## 'கை' கரட்



↑ இது நம்மூர் சமாச்சாரம்தான். மலையகத்தில் புசல்லாவையிலிருந்து 7 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அயரி பிரதேசத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த அதிசய கரட் கிழங்கு இது.

ஒரு விரல் குறைந்திருந்தாலும் சாதாரண பார்வைக்கு மனிதனின் உள்ளங்கை போல் தோற்றமளிக்கிறது. புசல்லாவையுடன் நின்று விடாமல் இந்த கரட் கிழங்கின் புகழ் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதையும் சென்றடைய அனுப்பியவர்கள் ராதா, வனிதா, விஜயமலர், ப்ரியா.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



தெல்லிப்பழையைச் சேர்ந்த நந்தகுமார்-விஜிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி அக்ஷயா தனது முதலாவது பிறந்தநாளை 31.07.2002 அன்று லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அக்ஷயாவை லண்டனில் உள்ள அன்பு அப்பா, அம்மா, கனடாவிலுள்ள அப்பப்பா,

### செல்வி அக்ஷயா 31.07.2002

அப்பம்மா, வத்தளையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்தி, லண்டனிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, அக்காமார், மச்சாள், மச்சான்மார், பலப்பிட்டியிலுள்ள மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ஸ்ரீஸ்கந்தராசா (அம்மப்பா) கொழும்பு. தொலைபேசி: 075-330053